

# ஞானச்சுடர்

தை

2011




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ



# குறள்வழி

**அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்**
**கென்போ டியைந்த தொடர்பு.**

**பொருள் :** அன்பு செய்யாவிடில் பிறப்பினால் பயனில்லை [73]

**அன்பீனு மார்வ முடைமை அதுவீனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு.**

**பொருள் :** ஒருவன் தன் சுற்றத்தாரிடத்துப் பாராட்டும் அன்பு பிறர் இடத்தும் விருப்பைத் தரும்; அவ்விருப்பம் யாவரும் நட்பென்று சொல்லப்படும் அளவுகடந்த சிறப்பினைத் தரும். [74]

---



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை


### அஞ்சுவதும் இல்லை அஞ்சவருவதும் இல்லை

*அஞ்செழுத்துப் பொருளானும் அன்பர்கடம் அகத்தானும்*
*கொஞ்சும்பெண் பாகத்தினானும் கூன்பிறைச் சென்னியினானும்*
*சஞ்சலந்தீர்க்க வல்லானும் தாமேயெல்லா மாயினானும்*
*அஞ்சலென் றென்னையாண்டானே யதிபற்புதமற் புகுந்தானே*
*அஞ்சுவது யாதொன்று மில்லை யஞ்சவருவது மில்லை* 1

*நீறணி மேனியினாலும் நெற்றிமேற் கண்ணுடையானும்*
*ஆறணி செஞ்சடையானும் அம்பல நாடகத்தானும்*
*ஏறமர்ந் தேறவல்லானும் ஏந்திழை பாகத்தினானும்*
*கூறருங் கோலத்தினானுங் கொண்டானெனைத் தொண்டனாக*
*அஞ்சுவது யாதொன்று மில்லை யஞ்சவருவது மில்லை* 2

*பாரொடு பூதங்களாகிப் பரிதிமதி யிவையாகிக்*
*காரொடு மலைகடலாகிக் கண்ணுக்குக்கண் ணுந்தாமாகி*
*ஏர்பொலி யேறதொன்றேறி ஏந்திழைபாகத் தனையான்*
*நீர்பொலி பூக்கொடுபோற்றி நினைந்தேன் பிறவி தீர்ந்தேனே*
*அஞ்சுவது யாதொன்று மில்லை யஞ்சவருவது மில்லை* 3

# ஞானச்சுடர்



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 157

## தை பொருளடக்கம்

2011


| | | | |
|---|---|---|---|
| ஒரு உருத்திராட்ச..... | சக்தி விகடன் | - | 01 |
| கன்னியர் நோன்பு | இரா. செல்வவடிவேல் | 02- | 03 |
| தூய நற்கல்வி | கு. சோமசுந்தரம் | 04- | 08 |
| வித்தகா! உன்....... | திருமதி பா. சிவனேஸ்வரி | 09- | 11 |
| கந்தப் பெருமானின்.... | கு. சிவபாலராஜா | 12- | 13 |
| தமிழ் இலக்கியங்களில்... | க. நாகேஸ்வரன் M.A | 14- | 17 |
| தினம் தினம் ஆனந்தமே.. | ஜக்கி வாசுதேவ் | 18- | 19 |
| நித்தம்+ நிமித்தம்.... | சி. ஆறுமுகம் | 20- | 23 |
| ஈழத்துத் தபோதனர்கள் | நா. சுப்பிரமணியன் | 24- | 27 |
| தவமுனிவனின் தமிழ்.... | சிவ. மகாலிங்கம் | 28- | 32 |
| நித்திய அன்னப்பணி | - | 33- | 34 |
| ஆறுமுகப் பெருமானும்... | நீர்வைமணி | 35- | 36 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 37- | 39 |
| சிறுவர் கதைகள் | - | 40- | 42 |
| வல்வை ஸ்ரீ முத்துமாரி... | ம. திருக்குமரன் | 43- | 47 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 48- | 49 |
| சந்நிதியான் ஆச்சிரம... | - | 50- | 53 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 54- | 55 |
| இலக்கியச்சுவை... | திருமதி சி. யோகேஸ்வரி | 56- | 58 |
| தென்கிழக்காசிய... | பு. அருள்நேசன் | 59- | 61 |
| செய்திச் சிதறல்கள் | - | - | 62 |
| சைவம் தமிழ்..... | பு. கதிரித்தம்பி | 63- | 65 |
| சந்நிதி வேலவா... | தி. மயூரகிரிசர்மா | - | 66 |
| பிறவி | செல்வி பா. வேலுப்பிள்ளை | 67- | 68 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 69- | 74 |



அன்பளிப்பு:

மலர் ஒன்று 30/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை

பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# அருளாசிச் செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளிவரும் ஞானச்சுடர் தனது 14ஆவது அகவையைக் கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

மலர் வெளிவரத் தொடங்கிய காலத்திலிருந்து பல்வேறு இன்னல்கள், இடர்களுக்கு மத்தியிலும் பீனிக்ஸ் பறவையைப் போன்று தவறாது வெற்றிகொண்டு 13ஆவது அகவையைப் பூர்த்திசெய்து 14ஆவது அகவையில் தடம்பதிக்கிறது.

மேலும் எதிர்காலத்தில் ஞானச்சுடர் பல சிறந்த அம்சங்களுடன் வெளிவந்து சுடரின் சீரிய பணி சிறக்க அன்னையை வேண்டிப் பிரார்த்தித்து, எனது நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நல் ஆசிகளையும் கூறி அமைகிறேன்.

"லோகா சமஸ்தா சுசினோ பவந்து"

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P**

(அகில இலங்கை)

பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

சிவாச்சாரிய பீடாதிபதி

அகில உலக சைவக் குருமார் சம்மேளனம்

உ

# ஞானச் சுடரின் ஒளி உலகில் பரவட்டும்

அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடு திரியாய் - நன்புருக்கு
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணர்க்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்

என்பது ஆழ்வார் பாசுரம். இதுபோலவே, சந்நிதிப் பெருமானின் அருட்சுடராக, ஞானத்தமிழ்ச் சுடராக, "ஞானச்சுடர்" மிளிர்கிறது. ஒளி வீசுகிறது.

சந்நிதியான் விளையாடும் பூமி தொண்டைமானாறு. அவனது முதல் வீடு திருக்கோயில் எனில், இரண்டாவது வீடு சந்நிதியான் ஆச்சிரமம்.

ஞானத் தபோதனர் நாடும் பழம் பதியான- பெரும் பதியாய சந்நிதிக் கோயிலுக்கு அணி சேர்ப்பது சந்நிதியான் ஆச்சிரமம் ஆகும்.



ஞான தானம்- அன்னதானம்- வைத்திய தானம் என்று யாவும் இயல்பாக- சிறப்பாக நிகழும் பதியாகவும் ஆச்சிரமம் உள்ளது.

இறைவழி நடத்தலில் இயங்கும் ஆச்சிரம முதல்வர்- துடிப்புமிக்க இளைஞர் அணி இரண்டும் ஆச்சிரமத்தின் பெரும்பலங்கள்.

பதின்னான்காவது ஆண்டைநோக்கி இந்த ஆச்சிரம ஞானச்சுடர் காலடி வைப்பது இன்னும் சிந்திக்க- போற்ற வேண்டியது. இடர் எது வரினும் தடை தாண்டி திருவருளால் நடைபோடும் ஞானச்சுடர் மேன்மேலும் பல நல்ல உயர்நிலை பெறவேண்டும்.

பல பல புதுமைகளையும் உள்வாங்கி ஞான தானத்தை "ஞானச்சுடர்" வழங்க சந்நிதிவேற் பெருமானை சிந்தித்து வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்ச்சியுறுகிறேன்.

செந்தமிழும் சைவமும் போற்றி

சந்ததம் ஞானச்சுடர் வாழவேண்டும். **"நீர்வைமணி"**

**பிரம்மஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள்**

உ



# 14 ஆண்டில் அடியெடுக்கும் ஞானச்சுடர்

2011

தொகுத்தநன் மலர்களாக, தூய கவிதை கட்டுரைகள்
சுமந்து சுற்றி உலக னைத்தும்
எடுத்தடி வைத்து வைத்து, ஏணிமேல் ஏணியாக
எழுந்தருளும் ஞானச் சுடரே!
அடுத்தடுத்து ஆண்டு தோறும், அரியவொரு குழந்தைபோல
ஆதரிப்பார் கையில் வருவாய்
முடிந்து பதின் மூன்றுபோல முழங்கிபதி னான்காண்டிலும்
முளைந்து வர வாழ்த்தினேன் வாழ்க.

பால னாகி நாங்கள் படிக்க, பக்குவமாய் வந்து சேரும்
பரம ஞான மான சுடரே
காலமாக ஆக, எங்கள், கந்தன் செல்வச் சந்நிதியான்
கருத்தமைந்த ஆச்சிரமத்தார்
சாலவுன்னைப் போற்றிப் போற்றி அன்னதா னப்பணியினை
சலியாது செய்யும் அவை யுடன்
மூலகார ணமாக முன்னின்று நடாத்திவரும்
மோகனதாசரை வாழ்த்து வேனே.

வந்தனைக் குரிய தாக, வளர்ந்துவரும் ஞானச்சுடர்
வாசிப்போர் கரத்தில் வந்திட பார்ப்போர்
சிந்தனைக் கினிய தாக, செப்பமான விடை கிடைக்கும்
சேதியெல்லாம் அது சொல்லுமே
கந்தனது அருளினாலே கற்பகமாய்ப் படிப்போர்கள்
காணும் வீடும் பிரகா சிக்குமே
பந்தமின்றி வாழுவொரு நந்தவனம் போலவுள்ளம்
பதிந்திட வாழ்வு மலருமே.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

முதுபெரும்புலவர், கலாபூஷணம்,
ஆசிரியர் வை. க. சிற்றம்பலவனார் அவர்கள்

# ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

மார்கழிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சோ. பரமநாதன் G.S. அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது உரையில் ஆச்சிரமமானது பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றது. அந்த வகையில் சைவ மக்கள் பயன்பெறும் முறையில் "ஞானக்குழந்தை" என்று அழைக்கப்படும் ஞானச்சுடர் மலரை மாதாமாதம் வெளியிட்டு வருகின்றது என்பதில் மிகையேதுமில்லை.

அடுத்து, அவர் தனது உரையில் அடியார்களின் வயிற்றுப்பசியைப் போக்குவதற்காக ஆச்சிரமமானது தினமும் அன்னப்பணியை வழங்கி வருகின்றது. மேலும், இங்கு மேற்கொண்டுவரும் பணிகள் யாவும் சிறப்புற விளங்கவேண்டும் என்றும் இங்கு கூடியிருக்கும் அனைத்து முருக பக்தர்களுக்கும் முருகனது அருளாசி கிடைக்கவேண்டும் என்றும் கூறிக்கொண்டு தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்துகொண்டார்.

## மதிப்பீட்டுரை:

156ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (பிரதிக் கல்விப்பணிப்பாளர்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது மதிப்பீட்டுரையில், ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை செய்வதென்பது யாராலும் இயலாத காரியமாகும். ஏனென்றால், அதில் "நிறைந்த கருத்துக்கள்" காணப்படுகின்றமையே காரணம்.

மேலும் ஞானச்சுடர் மலரானது சிறுவர்முதல், பெரியோர்வரை அனைவரும் படித்து இன்புறும் வகையில் அமைந்துள்ளது. இச்சஞ்சிகையானது அகில உலகம் முழுவதும் தனது புகழைப்பரப்பி, அனைத்து சைவ மக்கள் மத்தியிலும் ஒரு விழிப்புணர்வை ஊட்டி வருகின்றது. இம்மலரிலுள்ள ஒவ்வொரு கட்டுரையிலும் அடியார்கள் என்னென்ன பயனுள்ள விடயங்களைத் தமது வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையெல்லாம் தனது மதிப்பீட்டுரையில் சுருக்கமான முறையில் தெரிவித்து, இம்மலரானது பிரகாசித்துக்கொண்டு செல்லவேண்டும் எனக்கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

உ




பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து இன்று 14ஆவது வயதில் காலடி வைக்கிறது "ஞானச்சுடர்". கடந்த 13 ஆண்டுகளிலும் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் "ஞானச்சுடர்" மாதந்தவறாது, **"ஆன்மீக சஞ்சிகை"** என்கிற தனிச்சிறப்பும்- தனித்துவமும் கொண்டு வெளிவந்து கொண்டிருப்பதை அனைவரும் அறிவர் பல தரப்பிலிருந்தும் கிடைக்கும் வாழ்த்துக்களும்- அபிப்பிராயங்களும் எமக்கு மென்மேலும் உந்துதலையும், ஊக்கத்தையும், மனமகிழ்வையும் தருகிறது.

ஆரம்பத்தில் (1998இல்) 300 பிரதிகளுடன் (சாதாரண அச்சு யந்திரத்தில்) வெளிவந்த "ஞானச்சுடர்" இன்று 2100 பிரதிகளாக (கணனிப் பதிப்பாக) விரிவடைந்து உள்நாட்டிலும், கடல் கடந்தும் உள்ள சைவ மக்களின் ஆன்மீக தாகத்தைத் தீர்க்கும் அருட்சுடராகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறான உயர்வுக்கும் சிறப்பிற்கும் காரணமான எமது வாசக அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆரம்பகாலம் முதலே மனமுவந்து ஆக்கங்களை வழங்கி "ஞானச்சுடரினைப்" பிரகாசிக்கச்செய்யும் ஆசிரியர்கள், அறிஞர் பெருமக்களுடன் பல புதிய கட்டுரையாளர்களும்- கவிதையாளர்களும் இணைந்திருப்பது மகிழ்வளிக்கிறது. இவ்வகையில் கட்டுரையாளர்கள், கவிதையாளர்கள் அனைவருக்கும் வாசகர்கள் சார்பிலும், ஆச்சிரமத்து சுவாமிகளின் சார்பிலும் மனம்நிறைந்த நன்றியினையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கிறோம்.

"ஞானச்சுடர்" தரமானதாக- கூடுமானவரை எழுத்துப்பிழைகள் அற்றதாக- கவர்ச்சியாக- நிறைந்த பக்கங்களுடனும் கூடுதல் படங்களுடனும் வெளிவருவதில் பலரதும் பங்களிப்பும் முயற்சியும் உள்ளது. பேரவையினரின் அயரா முயற்சிக்கு தனது முழுநேர உழைப்பினை வழங்கி- நேரடியாகக் கண்காணித்து- வழி நடத்திவரும் ஆச்சிரமத்து சுவாமிகளுக்கு எமது அன்பான வணக்கங்கள். ஆச்சிரமத்தின் கணனி அச்சகத்தில் ஓய்வின்றி உழைத்துவரும் உயிர்த்துடிப்பான இளம் அன்பர்களுக்கும் "ஞானச்சுடர்" வெளியீட்டினில் பெரும் பங்குண்டு. ஆச்சிரமத்து சுவாமிகள்- பேரவையினர்- அச்சக ஊழியர்கள் அனைவரதும் கூட்டுமுயற்சியே "ஞானச்சுடர்" வெளியீடு.

ஞானச்சுடர் ஒரு தெய்வீக சஞ்சிகை. இதன்வெளியீடு சார்பாக நாம் மேலே குறிப்பிட்டவர்கள் அனைவரும் கருவிகள் மட்டுமே. உண்மையில், சந்நிதி முருகனின் குறைவற்ற திருவருட்கடாட்சத்தால் "ஞானச்சுடர்" வெளிவருகிறது என்பதே உண்மை. நம் எல்லோரையும் வழிநடத்தும் வடிவேலவனின் திருப்பாதங்களை வணங்கி வாழ்த்துவோம்.

**-சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்-**

உ

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

திருமதி ஸ்ரீகாந்தநிர்மலா விமலேந்திரன்
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

திரு கந்தப்பு கலையரசன்
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

திரு விஜயரட்ணம் ஜெயமோகன்
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

செல்வி திருஞானசுந்தரம் கானப்பிரியா
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

செல்வி ராஜன் பிரசாந்தினி
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

திருமதி மீரா அஜந்தன்
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

திரு செல்லன் சற்சொருபன்
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

செல்வி பாலசுந்தரம் உதயசாந்தி
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

திருமதி ராதிகா ஸ்ரீபாஸ்கரன்
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

செல்வி ராதாகிருஷ்ணன் வாகினி
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

திரு ஸ்ரீதரன் முகுந்தன்
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

P. கிருஸ்ணானந்தன்
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

திரு த. ரஜிந்தன்
(மக்கள் வங்கி சாவகச்சேரி)

செல்வி த. சிந்துஜா
(மக்கள் வங்கி, பிரதானவீதி, யாழ்ப்பாணம்)

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்


திரு சி. ராஜீவன்
(மக்கள் வங்கி, பிரதானவீதி, யாழ்ப்பாணம்)
திரு வ. திருநிறைச்செல்வன்
(மக்கள்வங்கி, பிரதானவீதி, யாழ்ப்பாணம்)
திரு தம்பையா புவனேந்திரன்
(முகாமையாளர் இலங்கை வங்கி)
திரு. கு. கங்கைவேணியன்
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
திரு. ந. சத்தியருபன்
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
திரு. க. சோமசேகரம்
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)
திரு. அ. தவக்குமார்
(லண்டன்)
திரு. S. பத்மநாதன்
(பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
திருமதி யோ. சிவப்பிரகாசம்
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி)
திரு. வ. சண்முகநாதமுதலி
(முகாமையாளர், மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி S. விஜயகுமார்
(மக்கள் வங்கி, மேற்குவலயம் I)
திரு. T. சிவராஜ்
(உதவி முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி)
திரு. N. சிவஞானசுந்தரம்பிள்ளை
(முகாமையாளர், மக்கள் வங்கி, நெல்லியடி)
திரு. தி. சிவகுமாரன்
(முகாமையாளர், மக்கள் வங்கி, காங்கேசன்துறை)
திரு. இ. யோகராசா
(முகாமையாளர், மக்கள் வங்கி, அச்சுவேலி)
திரு. ந. நாகேஸ்வரன்
(முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழக கிளை)
திரு. கி. அமிர்தலிங்கம்
(மக்கள் வங்கி, நெல்லியடி)
திரு. க. ஸ்ரீதரன்
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, சாவகச்சேரி)
செல்வி ச. சுகன்ஜா
(மக்கள் வங்கி, மானிப்பாய்)

திரு. த. சிவகுமார்
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி இ. கிருஷாந்தி
(உதவி முகாமையாளர், மக்கள்வங்கி, சாவகச்சேரி)
திருமதி கா. பால்ராஜ்
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
திரு. S. சுபசீலன்
(மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
திரு இ. ஜெயகாந்தன்
(மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
திருமதி இ. பத்மகலா
(மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம், யாழ்ப்பாணம்)
திரு T. பாலேந்திரா
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, காங்கேசந்துறை)
திரு. பொ. பாலசிங்கம்
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
திருமதி கஸ்தூரி பீஸ்மன்
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
திருமதி நீரஜா சத்தியசீலன்
(மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி கிளை, யாழ்ப்பாணம்)
திரு த. கணேசமூர்த்தி
(இளநிலை அதிகாரி, இலங்கை வங்கி)
செல்வி வ. கனகசபை
(முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம் மட்டக்களப்பு)
திரு. த. உதயசங்கர்
(முகாமையாளர், மக்கள் வங்கி, நகரக்கிளை, திருகோணமலை)
திரு. கு. கோடீஸ்வரன்
(முகாமையாளர், மக்கள் வங்கி, வவுனியா)
திரு. ப. பார்த்தீபன்
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய காரியாலயம், திருகோணமலை)
திரு. K. ஐங்கரன்
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி நகரக்கிளை, திருகோணமலை)
திரு. ஆ. சசிகரன்
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி நகரக்கிளை, திருகோணமலை)
திருமதி வைஜெயந்தி குலேந்திரராஜா
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி நகரக்கிளை, திருகோணமலை)
திரு. ம. பிறேம்குமார்
(மக்கள் வங்கி, பிராந்தியக் காரியாலயம், திருகோணமலை)

திரு. க. மதிவதனன்
(மக்கள் வங்கி, பிராந்தியக் காரியாலயம், திருகோணமலை)
திரு. வே. பார்த்திபன்
(மக்கள் வங்கி; பிராந்தியக் காரியாலயம், திருகோணமலை)
செல்வி சந்திரபோஸ் உசாந்திகா
(மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி வனஜா சுரேஸ்குமார்
(உதவிமுகாமையாளர், மக்கள் வங்கி, பிரதானவீதி, யாழ்ப்பாணம்)
திருமதி ரம்மியா பரந்தாமன்
(பிராந்திய அலுவலகம், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
செல்வி சிந்துலா கணேஸ்வரன்
(பிராந்திய அலுவலகம், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
திரு. S. சிவஞானராஜா
(முகாமையாளர் மக்கள் வங்கி, செங்கலடி)
திரு. ஏகாம்பரம் செல்வேஸ்வரன்
(திருகோணமலை)
செல்வி தயானந்தன் சசிதேவி
(மக்கள் வங்கி, மானிப்பாய்)
திரு S. நித்தியானந்தன்
(முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
செல்வி கைலாசனி கைலாயநாதன்
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
திருமதி றஜீவி செந்தில்ரூபன்
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
செல்வி சுலக்சினி ஸ்ரீஸ்கந்தராஜா
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
செல்வி அனுபாசினி ராஜேஸ்குமார்
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
செல்வி சிந்துஜா விவேகானந்தன்
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
திரு. சௌந்தரலிங்கம் துசாந்தன்
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
திரு. க. இராசநாயகம்
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)
திரு. R.S. தனபாலன்
(பாலன் மில், வட்டுக்கோட்டை)
திரு. த. இலட்சுமணராசா
(வட்டுக்கோட்டை)

திரு. சி. சச்சிதானந்தம்
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)
உரிமையாளர்
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
வே. பொன்னம்பலம்
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)
உரிமையாளர்
(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)
திரு. இ. குமாரசாமி
(சுவர்ணா வெதுப்பகம், K.K.S. றோட், சுன்னாகம்)
உரிமையாளர்
(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)
இ. இராசநாயகம்
(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)
திரு ஆ. சுந்தரலிங்கம்
(பதவிநிலை உத்தியோகத்தர், அஞ்சல் திணைக்களம், யாழ்ப்பாணம்)
திரு. நா. கந்தப்பு
(தோப்பு, அச்சுவேலி)
திரு. க. தர்மலிங்கம் **J.P.**
(நீர்வேலி)
திரு. மு. தர்மலிங்கம்
(சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி)
உரிமையாளர்
(வே. கந்தையாப்பிள்ளை அன்சன்ஸ், யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)
திரு. ஜெ. இராஜகோபால்
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
திரு ஐ. சிவகுமார்
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)
திரு செ. தவேந்திரன்
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)
திரு. பா. இராசேந்திரம்
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)
திரு. செ. மதியாபரணம்
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி)

திரு. இரா. ஸ்ரீநடராசா
(அதிபர் யா/ தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)
திரு. நீ. சுப்பிரமணியம்
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)
செல்வி தாட்சாயினி செல்வமாணிக்கம்
(நாவலடி, உடுப்பிட்டி)
திரு. K. சிவகுருநாதன்
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
திரு. வே. இரத்தினசிங்கம்
(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)
திரு. சி. கணேசலிங்கம்
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
திரு E.A. ஏகநாதன்
(இளைப்பாறிய நீதிபதி, யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)
திரு. சிவஞானம் கிருபாகரன்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
திரு. மு. சரவணபவன்
(கலைமகள் விலாஸ், சங்கானை)
செல்வி நா. ஜெயராணி
(அதிபர், ஸ்ரீ கணேசா வித்தியாசாலை)
திரு. இ. கோபாலசுந்தரம்
(சதா வெதுப்பகம், உரும்பராய்)
திரு. T. பிரபாகரன் மாஸ்ரர்
(நெல்லியடி)
திரு. செ. கமலநாதன் (கமல்)
(கணபதி களஞ்சியம், கரவெட்டி)
திரு. க. நாகராசா
(பூம்பதிவீதி, வடலியடைப்பு)
திரு. இ. சொக்கலிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர், கைதடி)



# ஒரு ருத்திராட்ச விதையின் விலை (இந்திய ரூபாவில்) இரண்டரை லட்சம்

"இலியோ கார்பஸ் கானிடிராஸ்" என்றால் என்னவென்று தெரியுமா? ஏதோ இத்தாலியப் பெயர்போல இருக்கிறதா? ஆனால் இதற்கும் இந்து மதத்திற்கும் நல்ல தொடர்பு உள்ளது. இது வேறொன்றுமில்லை..... சிவபெருமானால் ஆசீர்வதிக்கப்பட்ட அரிய முத்தாகக் கருதப்படும் ருத்திராட்சத்தை விளைவிக்கும் மரவகையே இந்த இலியோ கார்பஸ் கானிடிராஸ்.

இமயமலைப் பகுதிகளிலும், நேபாளம் மற்றும் இந்தோனேசியாவில்தான் இவ்வகை மரம் கூடுதலாக வளருகிறது. அரியவகைத் தாவரமான இவற்றிலிருந்து ருத்திராட்சத்தைச் சேகரிப்பதற்காகவே ஒரு கூட்டம் இருக்கிறது.

"ருத்ரா லை.'.ப்" என்ற நிறுவனத்தின் பெயரில் ருத்திராட்சக் கொட்டைகளை வியாபாரம் செய்து வருபவர் "கபில்கன்னா" என்பவர். இவர் இதுவரை 49 ருத்திராட்ச கண்காட்சிகளை இந்தியாவின் பல பாகங்களிலும் நடாத்தி உள்ளார். இவரது "ருத்ரா லை.'.ப்" நிறுவனம் சமீபத்தில் கோவையில் கண்காட்சி ஒன்றை நடத்தியது. இந்தக் கண்காட்சியில் சுமார் இரண்டரை லட்ச (இந்திய ரூபாவில்) ரூபாய் மதிப்புள்ள ஒரு ருத்திராட்சக் கொட்டையை கண்காட்சியில் பார்வைக்கு வைத்திருந்தனர். வந்தவர்கள் அனைவரும் இதனைப் பார்த்து வியந்து போற்றினர்.


இதுபற்றி கன்னா கூறுகிறார். "பொதுவாக ஒவ்வொரு வகை ருத்திராட்சக் கொட்டைக்கும் ஒவ்வொருவகைக் குணம் உண்டு. இதை வகைபிரிப்பது கொட்டைகளில் உள்ள கோடுகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான். ஒரு கோடு இருந்தால் அதை ஒரு முகம் என்பர். இப்படி முகங்கள் அதிகமாக அதிகமாக அந்தக் கொட்டைகளும் கிடைப்பது அரிதாகின்றன. இவ்வாறு உலகிலேயே மிக அரிதான ருத்திராட்ச கொட்டைதான் இருபத்தொரு முகம் கொண்டது. கிடைத்தற்கு அரிதாகவிருப்பதால் இதன்விலை இரண்டரை லட்ச ரூபாய்" என்றார்.

ருத்திராட்சம் பழங்களைப் பக்குவப்படுத்திக் கிடைக்கப்பெறும் ருத்திராட்சக் கொட்டைகள் 250 ஆண்டுகள் வரை நிலைத்திருக்கும்.

*நன்றி: சக்தி விகடன்.*

*பி.கு:*

யாழ் குடாநாட்டில் இரண்டொரு இடத்தில் இவ்வகை மரம் உண்டெனினும் எமது மண்ணின் வெப்ப சுவாத்தியத்தில் இந்த மரம் அதிகமாக வளருவதில்லை. சந்நிதியான் ஆச்சிரமத்து மருத்துவ சேவை நடைபெற்று வருகின்ற "மகேஸ்வரன் ஞாபகார்த்த மண்டப" வளாகத்து வாசலில் ருத்திராட்சம் விதைகள் தரும் மரக்கன்று" ஒன்று நடப்பட்டு தற்போது 4 அடிக்கும் மேலாக வளர்ந்து நிற்கிறது என்பதை ஒரு மேலதிகத் தகவலாகத் தருகிறோம்.



# கன்னியர் நோன்பு



**செஞ்சொல்வாணர் இரா. செல்வவடிவேல்** அவர்கள்

மாதம் மும்மாரி பெய்து விவசாயம் செழிக்கவேண்டும்.... தன் மனம் விரும்பிய கணவன் தனக்கு அமைய வேண்டும் என்பதற்காக கன்னிப் பெண்கள் மேற்கொண்ட நோன்பு- விரதம்தான் பாவை நோன்பு. மார்கழிமாதம் இந்த விரதம் மேற்கொள்ளப்படுவதால் "மார்கழி நோன்பு" என்றும் அழைக்கப்படுகிறது.

பார்ப்பு எனும் சொல்லே பாப்பு, பாப்பா என்றாகி பின்னாளில் 'பாவை' எனத் திரிந்தது என்பர். இச்சொல்லுக்குப் புதுமை, கருவிழி, குரவமலர் போன்ற பல பொருள்கள் இருப்பினும் "அழகிய உருவம்" என்ற பொருளில் மிகுதியாக வழங்கப்படுகிறது.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் இந்த நோன்பு ஆரம்பமானது என்பதற்கான ஆதாரங்கள் சங்ககால நூலான பரிபாடலில் காணப்படுகிறது. இந்த நோன்பால் பூமியானது மழைவளம்பெற்றுக் குளிர்வதாக அந்தப் பாடலில் மேலும் விளக்கங்கள் காணப்படுகின்றன.

பரிபாடலின் காலம் ஆண்டாள், மாணிக்கவாசகருக்கும் முந்தையது என்பதால் இந்த நோன்பு அவர்களுக்கு முன்பிருந்தே இருப்பது தெரியவருகிறது.

கோகுலத்து கன்னியர் மார்கழியில், சூரிய உதயத்திற்கு முன் எழுந்து யமுனை நதியில் நீராடி அங்குள்ள ஈரமணலில் அம்பிகையின் பாவை உருவமைத்து காத்தாயினி விரதத்தை மேற்கொண்ட குறிப்புகளும் உள்ளன. அன்னை பராசக்தி, காத்யாயன மகரிஷியின் மகளாகப் பிறந்தபோது அவளது பெயர்தான் இந்த காத்தாயினி என்பதாகும்.

ஆயர்பாடியிலும் இந்த நோன்பு அமர்க்களப்படுகிறது. அங்குள்ள கன்னிப் பெண்கள் யமுனையில் நீராடுவதற்காக கிழக்கு வெளுக்கும் முன்னரே எழுந்து அவரவர் தோழியின் பெயரைச் சொல்லி அழைக்கிறார்கள். ஒருவரோடு ஒருவர் கை கோர்த்துக்கொண்டு கிருஷ்ண சரிதங்களைப் பாடியபடி செல்கிறார்கள். பாடிக்கொண்டே நீரில் விளையாடுகிறார்கள். அப்போது பரம யோகிகளுக்கும் யோகியான கிருஷ்ணன், அவர்களுக்கு விரதபலம் அளித்து மனோரதம் நிறைவேறச் செய்தான் என்கிறது ஸ்ரீ பாகவத உபாக்கியானம்.

இந்தியா முழுவதும் உள்ள கன்னிப் பெண்களால் இந்தப் பாவை நோன்பு மேற்கொள்ளப்பட்டாலும், அது பற்றிய குறிப்புக்கள் ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த ஆண்டாளின் திருப்பாவையில் அதிக அளவில் காணப்படுகிறது. பாவை நோன்பு எப்படி மேற்கொள்ள வேண்டும் என்கிற குறிப்புக்களோடு

அந்த நோன்பால் கிடைக்கும் பலன்கள் பற்றியும் பேசுகிறது திருப்பாவை.

கண்ணனே தமக்குக் கணவனாக அமையவேண்டும் என்று ஆயர்குல மகளிர், மார்கழியில் காத்தாயினி தேவியை வேண்டி நோற்பதுவே பாவைநோன்பு என்கிறது ஸ்ரீபாகவதம்.

இந்த நோன்பிற்கு உரிய செயல்களை கிரிசைகள் (கிரியைகள்) என்கிறார் கோதையான ஆண்டாள். நோன்பிற்காக உறுதியாக சில கிரியைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும். சில கிரியைகளை விடுத்தும் செயல்படுவதாக சங்கல்பம் செய்கிறார். பாவை நோன்பு இருக்கையில் கோதை விலக்கியவையாக குறிப்பிடுவது இரண்டாம் பாடலில் வருகிறது. பால், நெய் உண்ணுதல், கண்களுக்கு அஞ்சனமிடுதல், மலர் அலங்காரம் செய்துகொள்ளல் மற்றும், பிறருக்குத் தீமை செய்யாதிருத்தல், சூரிய உதயத்திற்கு முன் நீராடுதல், தான - தருமம் செய்தல்..... என்று எப்போதும் கடைப்பிடிக்க வேண்டிய சில நன்னெறிகளையும் பட்டியலிடுகிறது திருப்பாவை.

இந்த நோன்பு மேற்கொள்வதால் என்ன பலன்?

நாடெங்கும் தீங்கு இன்றி இருக்கும், மாதம் மும்மாரி பொழியும், செந்நெல் சிறப்பாக விளையும், பசுக்கள் நிரம்பப் பால் சுரக்கும், எங்கும் செல்வம் நிறையும் என்று குறிப்பிடுகிறார் ஆண்டாள்.

திருப்பாவையின் 20ஆம் பாடலின் நோன்பு முடிக்கவேண்டிய பொருட்களான விசிறி, கண்ணாடி போன்றவற்றை பெரிய பிராட்டியிடம் கேட்கிறார் ஆண்டாள். மேலும் 26ஆவது பாடலில் நோன்பு முடிப்பதைக் கொண்டாட வெண்சங்கு, பறைகள், மங்கல விளக்கு, கொடி, விதானம் எனப்படும் மேல் கூரை விரிப்பு ஆகியவற்றைக் கேட்கிறார். 27ஆம் பாடலில் நோன்பின் சன்மானமாக சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ, பாடகம் போன்ற பலவிதமான நகை அலங்காரங்களும், புத்தாடைகளும் அணிந்து அக்காரவடிசல் எனப்படும் பால்சோறு உண்பதாக குறிப்பிடுகிறார். அக்காரவடிசல் தெரியாதவாறு நெய் மூழ்கியிருக்க, அதனை உண்ணும்போது அந்த நெய் முழங்கைவரை வழிய உண்பார்களாம். ஆக, பாவை நோன்பினை எப்படியெல்லாம் கொண்டாட வேண்டும் என்பதை அழகான பாடல் வரிகள் மூலம் விளக்கியதோடு, அதை அதன்படி சிறப்பாக கொண்டாடியும் இருக்கிறார் ஆண்டாள்.

இது தவிர பழங்கால பெண்கள் தங்கள் கணவனின் ஆயுள் விருத்திக்காக பல நோன்புகள் மேற்கொண்டு இருக்கிறார்கள். அவற்றிலே பல மார்கழி, தை, மாசி மாதங்களில் நடந்துள்ளன. நித்திய சிருங்கார நோன்பு, பொம்மை நோன்பு, அட்டலத்தி நோன்பு, சிட்டிப்பொட்டு நோன்பு ஆகியவற்றை அதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

சிவபக்தியில் சிறந்த பெண்கள், சிவனடியார்களே தமக்குக் கணவராக வர வேண்டும் என்று சிவபெருமானை வேண்டுவதாகத் திருவெம்பாவையிலும், கண்ணனே தமக்குக் கணவனாக வரவேண்டும் என அவனிடம் ஆயர்பாடி பெண்கள் வேண்டுவதாகத் திருப்பாவையிலும் வருகிறது.

ஆக கன்னியர் முறைப்படி நோன்பு மேற்கொண்டால் இயற்கை செழிப்பதோடு, கன்னியரின் வாழ்க்கையும் சிறப்பாகும்.

**பேசுவதற்கு முன் ஒருமுறை எழுதுவதற்கு முன் இருமுறை யோசி.**

உ

# தூய நற்கல்வி



**குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" -திருக்குறள்-

"துணை அதுவாய் வரும் தூய நற்கல்வியே" -திருமூலர் திருமந்திரம்-

"ஓதுமின் கேள்மின் உணர்மின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே" -திருமூலர் திருமந்திரம்-

"நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வியழகே யழகு" -நாலடியார்-

"கல்வியெனில் எழுத்து தொழில் ஒழுக்கம் ஞானம்
கற்பதும் பின் வழுவாது நிற்பதும் ஆம்"
-வேதாத்திரி மகரிஷி-

கல்வி வரலாறு மனித நாகரிக வளர்ச்சியின் வரலாறு ஆகும். உலகின் எப்பாகத்திலும், கல்வி ஆரம்பிக்கப்பட்டதே, கற்போரை, மனிதத் தன்மைகள், மனிதப் பண்புகள், மனித விழுமியங்கள் நிறைந்த மனிதர்களாக உருவாக்கும் பொருட்டே யாகும். கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம் எனக் கூறப்பட்டுள்ளது. கல்வியை, அதிலும் கற்கப்பட வேண்டிய கல்வியைத் தேர்ந்து, குற்றமற, ஐயம் திரிபு நீங்கக் கற்றல் முதல்நிலை. அடுத்தநிலை, கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நின்று ஒழுகவேண்டும். கற்றல், நிற்றல் ஆகிய இரண்டும் கல்வி எனும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றன. நாணயத்தின் ஒரு பக்கம் பழுதடைந்தாலும், அது, அதன் மதிப்பை இழந்து, செல்லுபடியற்றதாகி விடுகின்றது. கல்வியும், கற்றல், நிற்றல் என்பவற்றில் ஒன்று செயலற்றுவிட்டாலும், அதன் முழுமதிப்பையும் இழந்துவிடுகின்றது, என்பது உணரப்படவேண்டியது. கல்விவேறு, வாழ்க்கை வேறு அல்ல. வாழ்க்கையோடு தொடர்புபட்டு, வாழ்க்கையை வளம்படுத்து வது மேம்படுத்துவது, உன்னதத்தை நோக்கி நெறிப்படுத்துவது கல்வியாகும்.

மனிதனை, விலங்கு நிலையில் இருந்து, மனிதத் தன்மைகளுடனான மனித நிலைக்கு இட்டுச் செல்வதும், பின் ஆன்மிகம் முதிர்ந்த தெய்வீக நிலைக்கு உயர்த்தி, உன்னதத்தை அடைய உதவுவதும் கல்வி. இதனையே "தூய நற்கல்வி", என்று திருமூலரும்; "மனித ஆக்கக்கல்வி" என்று சுவாமி விவேகாநந்தரும் கூறியுள்ளனர். கல்வி, மக்கள் வாழ வழிவகுப்பது;

**மனம் நம்பிக்கையை இழப்பது மரம் வேரை இழப்பதைப் போன்றது.**

அத்துடன் ஆன்ம ஈடேற்றத்திற்கும் கருவி யாவது என்பது நாவலர் பெருமானின் கருத்து. "கற்க மறுப்பவன் வாழமறுக்கிறான்" என்று ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறிய அமுதவாக்கு, நாம் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதை அறிவிக்கிறது. விழுமியக் கல்வி என்று தற் காலத்தில் கல்வியாளர்களினால் விதந் துரைக்கப்படுவதும் மனிதரை மனிதத் தன்மைகள், மனிதப் பண்புகள், மனிததர்மம் நிறைந்த மனிதராக உருவாக உதவுவதும் அத்தகைய தூய நற்கல்வியேயாகும். எனவே, வழங்கப்படும் கல்வி மனிதனின் செம்மையான வாழ்க்கைக்குப் பயனுள்ள தாய் அமையவேண்டியது அவசியம். "மனித னுள் ஆழ்ந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி", எனச் சுவாமி விவேகாநந்தர் கல்விக்குத் தந்த வரைவிலக் கணம், கல்வி விழுமியஞ் சார்ந்ததாக விளங்க வேண்டுமென்பதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது.

"மனிதன் அறிவின் முழுமைப் பேற்றினை (Perfection Of Consciousress) அடையக்கூடிய சிறப்பை, இயற்கை மனித னுக்கு நல்கியுள்ளது" என்று வேதாத்திரி மகரிஷி குறிப்பிட்டுள்ளார். இதனைச் சுவாமி விவேகாநந்தரின் கல்விக்கான வரைவிலக் கணத்துடன் இணைத்து நோக்குவதன் மூலம் கூடிய தெளிவினைப் பெறமுடியும்.

மனிதன் தன்னை ஆராய்ந்து அறிந்து தன்னிறைவு பெறுதல் அவசியம். அதற்குரிய கருவி கரணங்கள் மனிதனிடம் இயல்பாக உள்ளன. இயற்கை அவற்றை அளித்திருக்கிறது. ஆறறிவு உடையவன் மனிதன். தன்னையறிதல் மூலம் தனது நிறைகளையும் குறைகளையும் மதிப்பிட்டுக் குறைகளை நீக்கி, நிறைவுகளை மேலும் நிறைவுபெறச் செய்தல் வேண்டும்.

கல்வி என்னுஞ் சொல் "கல்" எனும் வினையடிமூலம் பெறப்பட்டது. எனவே, கல்வி என்பதற்குத் தோண்டுதல், கல்லுதல், கிளறுதல், கிண்டுதல் எனப் பொருள் கொள் வர். கல்வியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் லின் கருத்தும் "வெளிக்கொணர்தல்" (Education, Educare) என்பதாகும். மனிதர்களுக் குள்ளே புதைந்து கிடக்கும் இயற்கை அறிவையும், தன்மையையும், ஆற்றல் திறன் களையும், நுண்புத்தியையும் வெளிக்கொணர் தல் கல்வியாகும். ஆன்மிகம், ஆன்மாவுடன் தொடர்புடையது. ஆன்மிக வளம் ஒவ்வொரு மனிதனிடமும் இயல்பாகவே உள்ளது. அது உள்சார்ந்த ஆற்றலாக அமைந்துள்ளது. அதனை வெளிக்கொணர்வது கல்வி. மனித ரின் உடல், மனம், உயிர் ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக் கொணர்ந்து விளக்கம்பெறச் செய்வதே கல்வியெனக் காந்தியடிகள் கல்விக்கு வரையறை வகுத் துள்ளார்.

உலகினை ஒன்றாகக் காணுகின்ற ஆற்றலையும் மனமாட்சியையும் கல்வி மனிதர்க்கு வழங்குவதாக அமையவேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புற நானூறு தந்த மகுடவாசகம், ஆன்மிக ஒருமைப்பாட்டுத் தத்துவம் பாற்பட்டது. அதனை அடுத்துவரும், "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற பாடலடி தரும் உண்மையை உணர்ந்து கொண்டால் ஒருவர்க்கும் ஒரு பொல்லாப்புமில்லை. தனி மனித அமைதி, குடும்ப அமைதி, சமுதாய அமைதி, நாட்டின் அமைதி, உலக சமுதாய அமைதி என்பன நிலைபெற்றுவிடும்.

**தினம் கடம் வரும்போது சொல் மனம் இரண்டுமே இலேசாகிவிடும்.**

"தனதுகுறை ஆழ்ந்துணர்ந்து திருத்தம் பெற்றால்
தருக்கொழியும் பிறரிடம் நட்பு ஓங்கும்
மனது ஒரு தூய நிலையை நாடிச் செல்லும்
மற்றவரும் இதன் விளைவாய் நலம் காண்பார்கள்
'எனது' 'நான்' என்னும் இரண்டு சொற்களுக்கும்
ஏற்புடைய கருத்துணரும் தகைமை கிட்டும்
உனது சொல் செயல் எண்ணக் குறைகள் போக்க
உயர்ந்த தற்சோதனையைப் பழகிக் கொள்க"

-வேதாத்திரி மகரிஷி-

மனிதன் தன்னை ஆராய்தல் மூலம் தன்னிடமுள்ள குறைகளை அறிந்துகொள்ள முடியும். தன்னுடைய அமைதிக்கும் பிற ருடைய அமைதிக்கும் அக்குறைகள் பங்கம் விளைவிப்பதை உணர்ந்து, அக்குறைகளை நீக்கி, அமைதியை மலர்ச்சி பெறச் செய்ய முடியும். 'நான்' எனும் தற்பற்றும், 'எனது' எனும் பொருட்பற்றும் நீங்கப்பெறும்போது, மனத்தில் நிறைந்திருந்த மாசுக்களான பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்ற ஆறு தீய குணங்களும் நலம் தரும் உயர் குணங்களாக மாற்றம்பெறும். ஆசை நிறை மனமாகவும், சினம் சகிப்புத் தன்மையாகவும், கடும்பற்று ஈகையாகவும், முறையற்ற பால்கவர்ச்சி கற்பாகவும், உயர்வுதாழ்வு மனப்பான்மை தன்னிலை விளக்கமாகி சமரச நிலையாகவும், வஞ்சம் மன்னிப்பாகவும் மாற்றமடையும் என வேதாத் திரி மகரிஷி குறிப்பிட்டுள்ளார்.

தற்காலத்தில் வழங்கப்படும் கல்வி, மேற்கூறிய நன்மாற்றங்களைக் கற்போர்களில் ஏற்படுத்தக்கூடிய வல்லமையைப் பெற்றிருக்க வில்லை என்பதை தற்போதைய மனிதாபிமான மற்ற நிகழ்வுகள், மனித நடத்தைப் பிறழ்வு கள், வன்செயல்கள், கொடுமைகள், அமைதி யின்மை, மனித அவலங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

நாம் வாழுகின்ற யுகம் அறிவியல், தொழில்நுட்ப விருத்தி அதிதீவிர வளர்ச்சி பெற்று வருகின்ற காலப்பகுதி. இதனால் மனிதரின் வாழ்க்கை வசதிகள் மற்றும் நாகரிக ஆடம்பரங்கள் என்பன செழித்து ஓங்குகின்றன. போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், கணனி என்பனவற்றின் மிகை வளர்ச்சி காரணமாக உலகம் சுருங்கி வரு கிறது. கூடவே மனித மனங்களும் சுருங்கி வருகின்றன. மனித வாழ்க்கையில் மகிழ்ச்சி, அமைதி, நிறைவு, சாந்தி, அன்பு, கருணை, கரிசனை, பிறர்நலம் பேணல் என்பனவற்றைக் காண்பது அரிதிலும் அரிதாகவேயுள்ளது. அவையாவும் மனிதகுலத்தைவிட்டு விரை வாக விலகிச் சென்றுகொண்டிருக்கின்றன.

மனிதன் தன்னுடைய ஆறாவது பகுத்தறிவைப் பயன்படுத்தி மனிதனுக்கு உரித்தானவை எவை? அந்நியமானவை எவை? என்பதைப் பிரித்துணர்ந்து கொள்ளக் கூடிய நிலையில் உள்ளான். அவ்வாறு பகுப் பாய்வு செய்தபின், மனிதனுக்கு உரித்துடை யவை, இயல்பானவை, உடன்பாடானவை, நன்மைபயப்பவை என்பவற்றை அவன் தன்னுடன் அணைத்துக் கொள்ளவேண்டியது அவசியம். அவை மனித வாழ்வின் உயர்விற் கும் உன்னதத்திற்கும் உறுதுணையாக வருபவை. அவையே மனிதர்களின் பெருந் தனம் ஆகும். எனவேதான் அவை மனித

இனத்திற்குப் பெருமதியும் பெருமானமும் கொண்டவையாக உள்ளன. அந்த வகையில், மனித நற்பண்புகள், நற்குணவியல்புகள், நன்னடத்தைகள், நல்லொழுக்கம் என்பன மனிதனுக்கே உரித்தானவை. அவற்றை மனித விழுமியங்கள் என்கிறோம். மனித வாழ்க்கையை மேம்படையச் செய்பவை மனித விழுமியங்கள் ஆகும். நமக்கு நம்முடைய உயிரினும் மேலான மதிப்பையும் பெருமானத்தையும் கொண்டு விழுப்பம் தருபவை விழுமியங்கள் எனப்படுகின்றன.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" -திருக்குறள்-

எனவே நல்லொழுக்கம் நன்னடத்தைப் பண்புகள் விழுமியங்கள் ஆகும்.

கல்வியின் பிரதான நோக்கம் சான்றோர்களை உருவாக்குதல் என்று நம் முன்னோர்கள் கொண்டனர். சான்றோர் சமுதாயம் ஒரு கல்விச் சமுதாயம் ஆகும். "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" - பொன்முடியார் (புறநானூறு). "ஆன்றவிந்தடங்கிய", கொள்கையுடையோர் சான்றோர் ஆவர் என்கிறார் புறநானூற்றுப் புலவர், பிசிராந்தையார். மனித விழுமியப் பண்புகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் சான்றோர். சான்றோர் அறவோர். மனத்துக்கண் மாசுக்கள் இல்லாதவர் அறவோர். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன மனத்துக்கண் உள்ள மாசுக்கள், அழுக்குகள். அவற்றைக் கல்வி அகற்றித் தூய்மைப்படுத்தும். மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயல்தூய்மை என்பவற்றை ஏற்படுத்த வல்லது விழுமியஞ்சார்ந்த கல்வியே.

தூய்மையின் அடித்தளத்தில் ஏற்பட்ட மனப்பண்பு, சொல்பண்பு, செயல்பண்பு என்பவற்றில் உதிப்பது மனிதப் பண்பு ஆகும். "பண்புடையார் பட்டுண்டுலகம்", என்கிறது வள்ளுவம். விழுமியக் கல்வி இத்தகைய உயர்ந்தோரை- பண்புடையோரை உருவாக்குவதை இலக்காகக் கொண்டது. விழுமியக் கல்வி வாயிலாகப் பெறும் தூய அறிவுதான் "அற்றங் காக்கும் கருவி" என வள்ளுவர் குறிப்பிடுகிறார். மனிதர்க்கு வாழ்வில் அவ்அறிவு பாதுகாப்புக் கவசம் ஆகும். அத்தகைய விழுமியக்கல்வியின் பயன் ஆகப் பெற்ற "அறிவுடையார் எல்லாமுடையார்", என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

தற்காலத்தில், கல்விமுறைமையில் விழுமியக்கல்வி முக்கியத்துவத்தை இழந்து வருவதை உணரக்கூடியதாக உள்ளது. அதனால் தூய அறிவில் வறுமை ஏற்பட்டுள்ளது. இன்றைய துன்பங்களுக்கெல்லாம் இந்த அறியாமையே காரணம்.

அறிவு விரிந்தும் பெருகியும் வருகின்றது என்று கருதப்படுகின்ற தற்காலத்திலே, 'உயர்வு' என்பதற்குப் பொருளாதார உயர்வு, சமூக அந்தஸ்து உயர்வு, பதவி பட்டங்களில் உயர்வு, புகழ் உயர்வு என்றே பொருள் கொள்ளப்படுகிறது. கல்வியால் பெற்ற அறிவு இத்தகைய உயர்வினை வழங்கவேண்டும் என்றே எதிர் பார்க்கப்படுகிறது. அவை அனைத்து உயர்வுகள் கிடைக்கப்பெற்றிருந்தும், விழுமியக் கல்வியால் பெற்றுக்கொள்ளப்படும் தூய அறிவு-வாலறிவு இல்லாவிடில், அவ்வுயர்வுகள் மனித குலத்திற்கு கேடுகள், கெடுதல்கள், துன்பங்களையே விளைவிக்கும் என்பதை உலகின் தற்கால நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அறிவின் பெருவளர்ச்சியும் உணர்வின் பெருவளர்ச்சியும் மற்றும் பொருள்,

**ஆபத்துக் காலத்திலேயே உண்மையான நண்பன் உணரப்பட்டு இனங்காணப்படுகிறான்.**

ஆதிக்கம், புகழ் என்பவற்றின் பெருவளர்ச்சியும் தூய்மையின் அடிப்படையில் ஏற்படாவிடின், தன்முனைப்பினை மனிதரில் ஏற்படுத்தி உலகில் அமைதி, சாந்தி, சமாதானம் என்பவற்றிற்குக் குந்தகம் ஏற்படுவதை நிறுத்தமுடியாமல் போய்விடும்.

மனித விழுமியங்கள் தரும் உயர்வுதான் உண்மையான உயர்வு. அதுவே பொன்றாப் புகழை அளிக்கவல்லது. மனிதரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகிறது. அதேவேளை ஏனையோரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வழி வகுக்கிறது. "மாந்தரின் உள்ளத்தனையது உயர்வு" என்கிறது திருக்குறள். வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விழைபவர்கள் முதலில் தமது மனங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். மனித விழுமியங்களின் உற்பத்தித்தானம் மனிதமனங்களேயாகும். மனம் உள்ளவன் மனிதன்; நல்ல மனம் உள்ளவன் நல்ல மனிதன்.

விழுமியங்கள்தான் மனித அடையாளங்கள். மனிதர்களை விலங்கினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் அடையாளங்கள். மனிதர்கள் தங்கள் அடையாளங்களை இழக்கலாமா?

விழுமியங்கள் மனித உரிமைகள். மனிதர்கள் தங்கள் அடிப்படை உரிமைகளைத் தாங்களே மீறலாமா?

விழுமியங்கள் மனிதரை மனிதத் தன்மைகளுடைய மனிதர்களாக உருவாக்குகின்றன. மனிதன் மனிதனாக மறுக்கலாமா?

விழுமியங்களை மறுப்பவரும், மறப்பவரும் வாழ மறுத்தவர்கள் ஆவர். நல்வாழ்வை வாழ்வதற்கு மறுக்கலாமா?

# ஆறுமுக வேலவனே



ஆறு தலை கொண்டு
ஆறு தலைத் தரவே
ஆறு படை கொண்டு
ஆறு பகை வென்ற
ஆறு அருகே அமர்ந்தே
ஆறியமர ஆச்சிரமம் கொண்ட
ஆறு முக வேலவனே
ஆற அமைதி அளித்திடுவாயே

-கவிஞர் பொன். சுகந்தன்-

இலக்கியங்கள் அவற்றின் படைப்பாளிகளை என்றும் வாழ்விக்கின்றன.

உ



# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

அகில அண்டங்களையும் இரட்சித்து, சகல ஜீவராசிகளுக்கும் அருள்புரிந்து ஆட்கொள்ளும் சிவபெருமான் தான் வழங்கிய வரங்களினால் பலமுற்ற அரக்கர்கள், தேவர்களை அடக்கி, பயமுறுத்தி, கொடுமைப்படுத்தி துவம்சம் செய்ததனைக்கண்டு, அத்தேவர்களினதும், முனிவர்களினதும் இடைவிடாத பிரார்த்தனையினால், அத்தேவர்களைக் காக்கும் பொருட்டு முருகப்பெருமானைத் தோற்றுவித்தார். ஆனந்தத்தையே சொரூபமாக உள்ள பரவஸ்துவின்பால் உதித்த அறிவு மயமான வியாபகத்தன்மை பொருந்திய காரிய வடிவினனான அருள் நிறைந்த அனாதி நித்திய சிவப்பிரகாசமென்னும் அனுபவ சொரூபமே சுப்பிரமணியனாவர். அவர் வழிபடுபவர்களை இனிமையான பேரின்பத்தில் திளைக்கச்செய்து அவர்களின் மேலான ஞான இயல்பினை மேலும் மேலும் வளரச் செய்பவர்.

முருகன் என்ற பெயரை இசைக்கும் போது ஒருவகை இன்பம் உள்ளத்திலே ஊற்றெடுக்கிறது. வேலேந்திய திருக்கரத்துடன் நித்திய யௌவன சுந்தரமூர்த்தியாகத் திகழும் முருகன் அடியார்களின் அகக் கண்ணிலும், புறக்கண்ணிலும் முன்பு நின்று நர்த்தனமாடுகின்றான். அழியா அழகு உண்டென்றால் அது முருகனின் திருக்கோல அழகுதான். அனைவர் உள்ளங்களையும் உருகவைக்கும் அழகு. பகைவனாகிய சூரபத்மனே அவன் அழகில் மயங்கி, வியந்து பாராட்டிய ஒப்பற்ற அழகன் அழகே உருவானவன். இளமையே கோலமானவன். வெகு கோடி நாமங்கள் கொண்டவன். முருகன், குமரன், குகன், சண்முகன், சரவணபவன், கார்த்திகேயன், காங்கேயன், ஆறுமுகன், சிவ சுப்பிரமணியன், ஸ்கந்தன், தேவசேனாதிபதி, கந்தன், கடம்பன் என்பன போன்ற முருகனுடைய திருநாமங்களில் பிள்ளை என்பதும் ஒன்று.

சின்னஞ்சிறுபிள்ளை செங்கோட்டுப்பிள்ளை
சிவத்தப்பிள்ளை
பொன் நல் மணிப்பிள்ளை பூலோகம் எங்கும்
புகழும் பிள்ளை
சொல்நெஞ்சு உழல்கின்ற சூரனை வென்ற
சொக்கேசர் பிள்ளை
வண்ணக் கிளிப்பிள்ளை வள்ளி தெய்வானைக்கு
வாய்த்த மாப்பிள்ளையே.

கொழும்பு தமிழ்ச் சங்க நூலகம்

பிறருக்குத் தீங்கு விளைவிக்காமல் இருப்பதே மானுடத்தின் உயரிய பண்பு.

பிள்ளைப்பருவத்திலே முருகன் செய்த லீலைகள்தான் எத்தனை, எத்தனை! பாலமுருகனாக வந்து தனது அடியார்களிடம் நடத்திய அருளாடல்கள் எண்ணிலடங்கா. அந்தக் குழந்தை முருகேசனை பக்தி செய்வது இனிமையானது. இனிய பக்திக்கு இருவர். ஆகமப்படி தொழப்படும் தெய்வங்களிலும் அருமையாக அன்புகாட்டி நேசிக்கப்படுபவர்கள்தான் மாலவனும் வேலவனும். பயங்கரமான தோற்றமுள்ள தெய்வங்களிடம் அன்பு உண்டாகாது. அச்சமே ஏற்படும். அழகான தெய்வத்திடம் ஆசையும் அன்பும் உண்டாகும். அதுவும் குழந்தைப்பருவ லீலைகளையுடைய தெய்வத்தை பிரேமையையும் காட்டிப், பிரியமாகப் போற்றி வணங்கலாம். ஸ்ரீ கிருஷ்ணன் தன் பூரணாவதாரத்தில் பிறந்ததுமுதல் ஒவ்வொரு காலகட்ட வளர்ச்சியிலும் வாத்ஸல்யபாவம் முதல் சிருங்கார ரசம்வரையான பக்தியால் நேசிக்கும்படி இருந்தார். நடந்தார்.

அதேபோன்று மாயவனின் மருகனான குழந்தை வடிவேலனும் அப்படிப் பக்திக்கு ஏற்றவனாக இருக்கின்றான். பிள்ளைப் பருவ விளையாட்டும் வள்ளியிடம் காதல் ரச விளையாட்டும் வேலவனுக்கு உண்டு. இதனால் வேலவனையும் வாத்ஸல்ய பக்தியால் நேசிக்கலாம். சிருங்கார ரசத்திலும் பக்தி செய்யலாம். இருவரும் மனதை மயக்கும் மோகன வடிவமுள்ளவர்கள். பார்த்தாலே பரவசமாக்கும் அழகுக் குழந்தை முருகேசனை நாம் பாராட்டி, தாலாட்டி அன்பு செய்து அந்த ஆனந்தத்தில் பேரின்பம் பெறலாம். கண்டவர் மனம் மயக்கும், பால்வடியும் அழியா அழகுடைய பசுங்குழவியாக என்றும் அன்புகொண்டு, ஆசையுடன், இனிய பக்தியோடு, நேசமுடன் கொண்டாடி மகிழலாம். குழந்தைப் பருவலீலைகளை எண்ணி எண்ணி, பிரியமுடன் போற்றி வழிபட்டு மகிழலாம். மாறாத இளமையும், அழியாத சௌந்தர்யமும், தெவிட்டாத இனிமையும் ஒருங்கே வடிவெடுத்தவன் அழகன் முருகன். அவன் தன் அழகு பொலிந்த உருவத்தினால் அக இருளை விரட்டி ஆறுதல் அளிக்கிறான். ஓராறு முகமும், ஈராறு கரங்களும் கொண்டு உலகம் உய்ய உதித்தவன் திருமுருகன்.

குழந்தைப் பருவத்திலே மாங்கனியைப் பெறுவதற்காக ஒரு நொடிப்பொழுதில் அகில உலகத்தையும் சுற்றிவிட்டு வருகிறார். அம்மை அப்பரை வலம்வந்த கணபதிக்கு மாங்கனி கிடைத்துவிட்டது. கோபாவேசமாக உடமைகளையெல்லாம் துறந்துவிட்டு, கோவணாண்டியாக கைலையை விட்டுப் புறப்பட்டு பழநி மலை உச்சிக்கே வந்து விடுகிறான். முருகனைப் பிரிந்த பார்வதி பரமேஸ்வரர் தங்கள் குழந்தை ஆண்டிக்கோலத்தில் நிற்பதை வந்து கண்டார்கள். நான்மறை போற்றும் ஞானப்பழம் அல்லவோ நீ! இன்னமும் சிறு குழந்தையாக விளையாடித் திரியலாமா? அன்பர்கள் அநவரதமும் நாடிவரும் அன்புப் பழம் நீ அல்லவோ!... அப்படியிருக்க வேறு பழம் உனக்கு எதற்கு? நீயே ஞானப்பழம் அல்லவா என்று சமாதானப்படுத்துகிறார்கள். முருகன் அவர்களுடன் செல்ல மறுத்து ஞானப் பழமாக பழனியிலேயே நின்று விடுகிறான்.

"ஈசனுருகி மடியினில் வைத் தென்று மிளையோய் அறிவுடையை
தேசுதரும் நம் வாணுதற் கண்மணி நீ சிறுவனோ பெரியை
வாச நறுமென் கனியு மொருகனியோ மதுரமொழி வாயாற்
பேசவரிய மறை ஞானப் பிள்ளை பழ நீ எனப் புகன்றார்" ஈசன்.

தம்மை அன்போடு வழிபடுபவரது உடற்பிணி, பிறவிப்பிணி இரண்டையும் நீக்கி போகமும், மோட்சமும் அளிக்கும் ஞான தண்டாயுத பாணியாக பழநிமலையில் கந்தன் விளங்கு கின்றான். மலைமகள் அருளிய சக்திவேல் முருகன், மரகத வண்ணனாம் திருமால் மரு கன், கண்ணுதற் கடவுளின் கண்மணியான வன், கார்த்திகை மாதர் அணைத்திட வளர்ந் தவன், தேவர்கள் துயர்தனை நொடியில் களைந்தவன், வேண்டுவார் வேண்டும் வரமெல் லாம் அருள்பவன் கலியுகவரதனாய் கண் கண்ட தெய்வமாய் காட்சியளிக்கிறான் பழநி யிலே. அசுரர்களை அழித்து, தேவர்களுக்கு வாழ்வுகொடுத்த பெருமான் உயிர்களுக்கு வரும் இன்னல்களைப் போக்கி, இன்பத்தை அளித்து, பாதுகாக்கும் காவல் தெய்வமாக இருக்கிறான்.

திருவாவினன்குடியில் மயில் மீதமர்ந்த வண்ணம் குழந்தை வேலாயுத சுவாமி எனும் திருநாமத்துடன் அடியார்களுக்கு காட்சி அளிக்கிறான். பக்தர் வினை தீர்ப்பது பழநி மலை. "அதிசயமனேக முற்ற பழநிமலை" என்கிறது திருப்புகழ். தனது அடியவர்களுக் காக அனேக அதிசயங்களை நடத்திக் கொண்டிருக்கின்றான் பழநிக் கந்தன். "பழநி மலையைச் சேவித்தறியேனே" என அங்க லாய்த்துக்கொண்டே பழநி மலைக்கு வந்த அருணகிரிநாதருக்கு செபமாலை ஒன்றை முருகன் அருளுகிறான். அனைத்துயிர்க்கும் குருமூர்த்தியாகிய முருகன் தனக்கும் குரு வாக வந்தான் என்று பாடுகிறார். அவரவர் பக்குவத்திற்கேற்ப மந்திரங்களைக் குருவாக வந்து உபதேசிப்பவர் முருகமூர்த்தி. சிவ பெருமான், அகத்தியர், பாம்பன் சுவாமி களுக்கும் குருமூர்த்தியாகவந்து உபதேசித் தருளினார். எல்லோருக்கும் அவனே குரு. குழந்தை வடிவில் நின்று இன்னருள் புரியும் முருகனைக் குருவாகக் கொண்டு வழிபட் டால் நிச்சயமாக குருவாய் வந்து வெளிப் பட்டு அருள்புரிவான். "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று நாமும் பழநி மலைக்குன்றில் நின்று திருவிளையாடல்கள் புரியும் கானமயில்வீரன், கந்தக்கடம்பன், இந்திரன் குமாரி கேள்வன், வள்ளிகாந்தன், பார்வதி பரமேஸ்வரர் உள்ளம் கவர் கள்வன், அருள் வள்ளல், ஆறுமுகப்பூங்கொத்தாகிய சின்னக் குழந்தை சேவடி பற்றி, போற்றி நற்கதியடைவோமாக.

உலகம் உய்ய உதித்தவனே
உலகளந்தான் மருகா சண்முகனே
தமிழ்தந்த தெய்வமே ஞானப்பழமே
தரணியெலாம் புகழ் படைத்த சுப்ரமண்யா சரணம்

பண்டார வேடம் பூண்ட ஞானப்பழமே
பால்வடியும் பவளவாய்ச் சின்னஞ்சிறு குமரா
நீலமயிலேறியே வள்ளி தெய்வானையுடன் நான்
நினைத்தபோது வரவேண்டும் சந்நிதி வேலவனே

ஈடிணையில்லாத பேரழகா
ஈசன் உவந்த சிறு மதலாய்
இசையாலே உனைப்பாடித் தினம் மகிழ
இதயத்தில் கோயில் கொண்டாய் அருள்வாயே.

(தொடரும்....

உ (தொடர்ச்சி....



# கந்தப்பெருமானின் அண்ணன்

**கு. சிவபாலராஜா** அவர்கள்

அவர்தம் பெருமைகள் காண்போம்

விநாயகரின் திருநாமம்- பிள்ளையார் என்பது, அதாவது; அது உலக தலைவர் எனப் பொருள்படும். அவரின் பிறந்த நாள்- ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி. அவரது பெற்றோர்- சிவன், பார்வதி. முருகன், ஐயப்பன், வீரபாகு ஆகியோர் சகோதரர்கள். இவர்கள் தவிர, நவ கன்னிகைகளின் பிள்ளைகள் ஒன்பதின்மர் பிள்ளையாரின் சகோதரர்கள். சிவனுக்கு பிள்ளையாரையும் சேர்த்து பதின்மூன்று பிள்ளைகள். இவர்களில் பன்னிருவர் அப்பா பிள்ளைகள். விநாயகர் மாத்திரம் அம்மா பிள்ளை. பிள்ளையாரின் மனைவியர்கள்- சித்தி, புத்தி, வல்லபை இவர்கள் தவிர மகாவிஷ்ணுவின் புதல்வியரான பன்னிருவர். மகன்கள் இருவர் ஷேமம், லாபம்- இவர்களை, சித்திராங்கதன், புத்திராங்கதன் எனவும் அழைப்பர். மாமனார்- மகாவிஷ்ணு. இருப்பிடங்கள்- கரும்புத் தோட்டச்சூழல், இது திருக்கைலாய மலையின் ஒரு பகுதியாகிய ஆனந்தபுவனம். தவிர; ஆற்றங்கரை, குளக்கரை, மரத்தடி, முச்சந்தி, தெருவோரங்கள் கணபதிப்பெருமானின் இருப்பிடங்களாம். வாகனங்கள்- துவாபரயுகத்தில் மூஷிகம், கிருதயுகத்தில் சிங்கம், திரேதாயுகத்தில் மயில், கலியுகத்தில் குதிரை. பிள்ளையாருக்கு பிடித்த கனி- மாம்பழம். அன்னையும் தந்தையும்தான் இவ்வுலகம் என்பதை உலகுக்கு உணர்த்தியவர். அதனால் சிவனிடம் மாம்பழம் பெற்றவர் கணபதி. இவருக்கு பிடித்த பலகாரம் கொழுக்கட்டை, மோதகம். கஜமுக அசுரனை அழிக்கவும், மகாபாரதம் எழுதவும் தனது தந்தத்தை ஒடித்தவர். காவிரி ஆற்றை உருவாக்கியவர் விநாயகர். ஔவைக்கும், அகத்தியருக்கும், அரசர்க்கும், அடியார்க்கும், பக்தர்களுக்கும், ஞானிகளுக்கும் அருளினார் விநாயகர். ஆணவம், கன்மம், மாயை நிறைந்த அசுரர்களை பிள்ளையார் தனது சக்தியினால் அழித்தார். அவரின் திருஅவதார நோக்கம்- தன்னை நினைத்து தொடங்கும் செயல்களில் குறுக்கிடும் தடைகளை நீக்கியருளி பக்தர்களின் எண்ணிய எண்ணம் ஈடேற அருளுதல் என்பதாகும்.

வெள்ளைப் பிள்ளையார் கதை பற்றித் தெரிந்துகொள்வோம். பாற்கடல் கடைந்த தேவர்களும் அசுரர்களும் இந்திரன் முதலானோரும் அமிர்தம் உண்ணும் ஆசையால் பாற்கடலைக் கடைந்தார்கள். ஆனால் அமிர்தம் வெளிப்படவில்லை. விஷம் வெளிப்பட்டது. தேவர்கள் பயத்தினால் ஓடிச்சென்று சிவனிடம் முறையிட்டார்கள். சிவன் விஷத்தை உண்டு நீலகண்டர் ஆனார். ஆனால் அமிர்தம் கிடைக்கவில்லை. அப்போது சிவன் இந்திரனையும், தேவர்களையும் பார்த்து, "நீங்கள் விநாயகரை வழிபட்டு இக்காரியமாற்றினீர்களா?" என்று சிரித்தபடி கேட்டார்.

அப்போது தேவர்கள் தமது தவ றினை உணர்ந்தார்கள். உடனே பாற்கடலில் பொங்கிவரும் வெண்ணிற நுரையை அள்ளி எடுத்து அதில் ஓர் பிள்ளையார் உருவம் செய்து வழிபட்டார்கள் தேவர்கள். உடனே அமிர்தம் வெளிப்பட்டது. விஷ்ணு அமிர்த கலசத்துடன் வெளிப்பட்டு தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அமிர்தம் வழங்கினார். வெண்நிற நுரையில் பிடித்த பிள்ளையார் என்பதால் வெள்ளைப்பிள்ளையார் என்னும் பெயர் வழங்கியது.

போசனப்பிரியராம் விநாயகர். இவர் கைகளில் உணவுப் பண்டங்களான மோத கம், நெற்கதிர், கரும்பு, அப்பம், லட்டு, நாவற் பழம், மாதுளம்பழம் முதலிய உணவுகளை ஏந்தி இருப்பார். இவருக்கு மேற்படி உணவு களைப் படைப்பது அவசியம். இவர் உழவர் களின் தெய்வம். உழவர்கள் இவரை வழிபட் டால் நல்ல விளைச்சலைப் பெறலாம். விநா யகரைப் போற்றிப் பாடல்கள் பாடும்போது உணவுப் பொருட்களை அடுக்கிப் பாடுவது வழக்கம். இதில் ஒரு மகிழ்ச்சியையும் காண்பர்.

"பாலும் தெளி தேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்"

என ஔவையார் பிள்ளையாருக்கு ஆசை காட்டிப்பாடுவதிலிருந்து, போசனப் பிரியர் என்பதற்கு உதாரணமாகக் கொள்ள வேண்டும். அருணகிரிநாதர்- "கைத்தலம் நிறை கனி அப்பமொடு அவல் பொரி கப்பிய கரிமுகன் அடிபேணி" என்று சில உணவுப் பொருள்களை அடுக்கிப்பாடி விநாயகரை வழிபடுகிறார். இவ்வாறே இருபத்தொருவகை உணவுப்பொருட்களைப் படைப்பது வழக்கம். இருபத்தொரு கணுக்கொண்ட அறுகம்புல், இருபத்தொரு பூக்கள் முதலியவற்றால் விநா யகரை பூஜிப்பது சிறப்புடையது.

திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் விநாயகர் வடிவம் தமிழ் நாட்டில் பெரியது. மிகச்சிறிய வடிவம் ஹம்மியில் இருக்கின்ற வேர்க்கடலை அளவுள்ள விநாயகர் வடிவம். இதைக் கடலைக் கல்லு விநாயகர் என்பர்.

விநாயகருக்கு படைக்கப்படும் மோத கம், அதில் அடங்கிய பொருட்கள் நோய் தீர்க்கும் தன்மையின. ஆன்மீகக் கருத்துக் களும் இதில் உண்டு. தேங்காய்- அதன் வெண்மையான சத்துவ குணமும் மூன்றாம் கண்ணான ஞானக் கண்ணும் சஞ்சலமில் லாமல் ஞானக்கண்ணால் இறைவனைத் தரிசிக்கவேண்டும் என்பதாகும். சிதறு தேங் காய் அடித்தல் அகங்காரத்தின் முடிவைக் கூறுவது. அமுதமான இளநீரை அங்கு அர்ப் பணிக்க வேண்டும். விநாயகருக்கு முன் அகங்கார மண்டையோடு சிதற வேண்டும். வெள்ளரிப்பழம் வைத்து படைப்பது சிறந் தது. இப்பழம் பழுத்தபின் கொடியிலிருந்து விடுபடுவதுபோல, பற்றற்ற ஆன்மா உலகப் பிடியிலிருந்து விடுபட்டு முத்தியடைகின்றது.

(முற்றும்)

---

சொர்கத்தைத் தேடி நாம் எங்கும் போகவேண்டியதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் நாம் காட்டும் தூய அன்பு, நமக்கு உதவமுடியாத ஜீவன்களிடம் காட்டும் கருணை இவற்றினால் நம்முடைய மனதிற்குக் கிடைக்கும் நிறைவே சொர்க்கமாகும்.

-ஒரு சாது-

---

**உழைப்பு பிழைப்புக்காக மட்டுமல்லாமல் உண்மைக்காகவும் இருக்க வேண்டும்.**

(தொடர்ச்சி....

# தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சிக்குமரன்



கனகசபாபதி நாகேஸ்வரன் M.A அவர்கள்

*கந்தரலங்காரத்தில் முருகன்*

அருணகிரிநாதரால் பாடப்பட்ட பிறிதொருநூல் கந்தரலங்காரம். காலனான யமன் வரும்போது யாது செய்யவல்லேன் என்று அருணகிரியார் பாடுவதுமட்டுமல்ல, உலகில் வாழும் மாந்தரும் பெரும் துயர்ப்படுவர் என்பதனை, "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாவது" போல்- ஒரு பாடல் மூலம் நோக்குவோம். உலகவர் முருகக்கடவுளின் பெரும் அருளை உணரல் வேண்டும் என்பது இப்பாடலின் பொருள்.

"ஆங்காரமு மடங்காரொடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார் தினைப்போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக்குள்ளே முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யாரென் செல்வார் யமதூதருக்கே"[27]

என்பது அருணகிரியார் எழுப்பும் வினா.

*பிள்ளைத்தமிழ்குமரகுருபர சுவாமிகள்:*

முருகனை 'வருக' வென அழைக்கும் பாடல்.

"உலகு குளிர வெமது மதியில் ஒழுகுமமுத கிரணமே
உருகு மடிய ரிதய நெகிழ உணர்விலெழுநலுதயமே
கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முருக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியில் அளியுமொளியினிலயமே
அறிவுனறிவை யறியு மவரும் அறிய வரிய பிரமமே
மலையின் மகள் கண் மணியையனைய மதலை வருக வருகவே
வளமை தழுவு பரிதிபுரியின் மருவு குமரன் வருகவே"[28]

முருகக்கடவுள் தமிழ்த்தெய்வமாயினும் கதிர்காமத்திலே சிங்கள- பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களும் வழிபாடாற்றிவருகின்றனர். இதேபோலவே தமிழகத்துப் படைவீடுகளிலும் பல்வேறு மொழியினர், பல்வேறு மதத்தினர், பல்வேறு கொள்கையினரென வழிபாடாற்று வதனைக் காணலாம்.

மனச்சாட்சிக்கு அடங்கி நடப்பதால் எளிதில் தீங்கு செய்ய முடியாது.

**திருப்புகழில் முருகன் புகழ்:**

அருணகிரிநாதராலே அருளிச்செய்யப்பட்ட திருப்புகழிலே முருகக்கடவுளின் பெரும்புகழ் வெகு விரிவாகவும், தாளலய ஓசைச்சிறப்புடனும் அமைந்துள்ளமையைக் காணலாம். அநுபூதி நலம் பயக்கும் சில திருப்புகழ் வரிகளை ஈண்டு நோக்குவோம்.

1. "பழகிய வினைகள் பொடிபட அருளில் படிப்பவர் இதயம்உறுகோவே"
2. "செம்மனத்தர் மிகுந்த மாதவர், நன்மைபெற்ற உளத்திலேமலர்
   செல்வ சிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே"
3. "அடியவரிச்சையி லெவையெவை யுற்றன
   அவை தருவித்தருள் பெருமாளே"
4. "நீதிக்குள் நின்ற அன்பர் ஆபத்திலஞ்சலென்ற பெருமாளே"
5. "கருதுவார் மனம் புகுந்த பெருமாளே"
6. "கழலிணையணியும் அவருடன் முனிவு கனவிலுமறியாப் பெருமாளே"
7. காதலுடன் ஓதும் அடியார்களுடனாடி எனாகொல்
   முருகவே ளெனத் தம் அருள் தாராய்"
8. "குற்றமற்றவருள்ளத்தில் உறைவோனே"
9. "முருகா எனவோர் தரமோதடியார் முடிமேல்
   இணைதாள் அருள்வோனே"
10. "ஒருகால் முருகா பரமா குமரா உயிர்கா எனவோதருள் தாராய்"
11. "ஒருகால் நினைத்திட்டிருக்கால் மிகுத்திட்டுரைப்பார்கள்
    சித்தத்துறைவோனே"

வடசொற்களும், தமிழ்ச் சொற்களும் இணைந்து பாடப்பட்டுள்ள திருப்புகழை அருணகிரிநாதருக்கு அடியெடுத்துக் கொடுத்தவனே முருகக் கடவுள்தான் என்பது திருப்புகழின் வரலாறு. "முத்தைத்தரு" எனப் பாடத்தொடங்கு என்பது முருகப்பெருமான் எடுத்துக்கொடுத்த முதலடி. எனவே முருகனே திருப்புகழைப் பாடுவித்தான் என்பது ஒருதலை.

**முருகக்கடவுள் - தத்துவம்**

பிறப்பிலி, இறப்பிலி; வேல்- ஞானசக்தி; தெய்வானை- கிரியாசக்தி; வள்ளி- இச்சாசக்தி; சூர்கள் (சூரன், சிங்கன், தாரகன்) ஆணவம், கன்மம், மாயையெனும் மும்மலங்கள். முருகக்கடவுளே திருஞானசம்பந்தராயவதரித்துத் தேவாரத் திருமுறைகளை அருளிச்செய்தார் என்பது ஐதிகம். திருவண்ணாமலைக் கோபுரத்திலிருந்து தற்கொலை செய்யத் துணிந்த அருணகிரியாரை இருகரங்கொண்டு தாங்கிக் காத்தருளினார். தவவலிமையினால் தெய்வானையும், வள்ளியும் முருகனை அடைந்தனர். "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்ற கந்தபுராணக் காப்புச் செய்யுளுக்கு வீரசோழிய நிகண்டு சான்றுகாட்டிச் சபையிலே நிறுவினார். ஔவைக்குச் சுட்டபழம் அருளினார்.

*கதிர்காம மான்மியம்*

இம்மான்மியத்தின் ஆசிரியர் அ. சின்னையா சிவம். இவர் கொழும்பு விவேகானந்தா வித்தி யாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இந் நூல் 1954ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந் நூலுக்கு 16.06.1951இல் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கலாநிதி க. கணபதிப்பிள்ளை மதிப்புரை வழங்கியுள்ளார். 26.09.1950இல் இலங்கை வானொலியில் தமிழ் ஒலிபரப்பு அதி காரியாகப் பணிபுரிந்த திரு சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார். அவ்வுரையிலே அவர் குறிப்பிடுவதாவது, "குன்றுதோறாடலில் என்றும் இன்பம் காணும் குமரவேள் அடியார் பொருட்டாக ஆனந்தமாய் ஆடிக்கொண்டேயிருக்கும் திருக்கதிர்காம மான் மியத்தைப்பற்றி எத்தனையோ அறிஞர்கள் எத்தனையோ எழுதியிருக்கிறார்கள். இறைவன் திருநாமத்தைச் சொல்லச் சொல்லத் தெவிட்டா தாகையால், அவ்விறைவன் உறைபதியைப் பற்றியும், அதன் மான்மியத்தைப் பற்றியும் சொல்லச் சொல்லத் தெவிட்டாது இன்பம் பெருக்கி இனிதுவக்கும்" (ப.IV)

கதிர்காம மான்மியம் பற்றி எழுதிய திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் வாழ்த்துரையிலே குறிப்பிடுவதாவது, "டாக்டர் க. கணபதிப்பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாச் சாரியார் முதலிய பெரியார்களால் முன்னுரை அளிக்கப்பெற்ற நூல் "கதிர்காமத்தப்பன்" பக்தர்களிடம் இருக்கவேண்டிய நூல். ஆசிரி யரின் முருகவேள் பற்று ஒவ்வொரு சொல்லி லும் உண்டு". (ப.V-VI)

பழநி சென்னிமலை வேதாகமப் பாட சாலையின் பேராசிரியர் சைவசித்தாந்தசரபம், மகாமகோபாத்தியாயர் ஸ்ரீ காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாச்சார்ய ஸ்வாமிகள் வழங்கிய முன் னுரையில் மேல்வருமாறு 'முருக தத்துவம்' பற்றி விவரித்துள்ளார்.

"ஆன்மாக்களின் இருதய குகைக் கண் வீற்றிருந்தருள்பவர் குகேசப் பெருமானே யாவர். அவ்விருதய குகைதான் சிதாகாசப் பரவெளி எனப்படும் தகராலயம் என நான் மறைகளும் முழங்கும். புறநாட்டமுற்று வாழும் யாங்கள் என்றேனும் அகநாட்ட முற்றே மெய்வாழ்வு வாழக்கடவராவோம். அங்ஙனம் அகநாட்டமுற்றுக் காணவிழை வார்க்குக் காணத் தகும் பரம்பொருளே கதிர மலைத் தெய்வமாம் குகேசன். சிவக்ஷேத் திரங்களில் சிதம்பர ரகசியமும், துவாத சாந்தத் தலமாம் (திருவாலவாய்) மதுரையந் தலமும்போல எமது கந்தவேளுக்குரிய இரகசியத்தானமும் துவாத சாந்தத் தலமு மிக் கதிரையந்தலமேயாகும். இங்குள்ள கோயில் சிதாகாசப் பரவெளியை நினைப் பிக்கும். எவ்வுயிர்களதும் இருதய குகைக் கண் வீற்றிருக்கும் பெருமான் குகப்பரம் பொருளே என்பதனையும் அவரை அகத்தே காணுதல் ஒன்றே பிறப்பின் பயனாமெனப் போதியாநிற்கும் தெய்வத்தலமுமித்தலமே யாகும். ஆணவ மலத்தால் மறைக்கப்பட்ட இச்சா ஞானக் கிரியா சக்திகளையுடைய உயிருக்கு விளக்கந்தரவமைந்த பல புலன் களை உயிர்தன் வண்ணமென மயங்கி நிற்ப, பக்குவமெய்திய ஆன்மாக்களுக்கு ஞானதேசிகன் தோன்றிப் பொய்ந்நிறவைம்புல நிறங்கள் வேறாமெனவும் நீ முற்றறிவனு மில்லை (சிவனுமல்லை); அறியாத பாசமு மல்லை; படிகம்போல் சார்ந்ததன் வண்ண மாய்ச் சதசத்தானவை எவையென விளக்கி இனிப், பல புலன்களைச் சார்ந்து மயங்கா வண்ணம் குகப்பெருமான் அவ்வன்பர்கள் புலனறிவு சாரமே காத்து, இருதய குகைக் கண்ணே நீங்காதுறையும் குறிப்பே மாணிக்க கங்கையும் அப்பெருமானது இரகசியத்

**நான் என்ன செய்கிறேன் என உணர்வது சுயதரிசனம்.**

தானமும் புலப்படுத்தா நிற்கும்" (ப. VII)

கதிர்காம மான்மியத்திலே 'நூன்முகம்' என்ற பகுதியிலே நூலாசிரியர் அ. சின்னையா சிவம் 10.06.1954இல் மேல்வருமாறு எழுதுகிறார்.

"அவனது திருமேனியானது ஆறு திருமுகங்களையும் பன்னிரு திருக்கரங்களையுமுடைத்து, கரங்கள் வெவ்வேறு ஆயுதங்களையுடையனவாகவும், அவ்வாயுதங்களுள் தலைசிறந்தது வேலாயுதமே! அது கந்தவேளது இருதயக் கமலத்தினைச் சிறப்பித்து நிற்கிறது. அவனது வாகனம் மயிலும், கொடி சேவலுமாகும். வள்ளி, தெய்வானையென்னும் தேவிமாரிருவரும் அவனது இருமருங்கிலும் வீற்றுள்ளனர். வாகனமாகிய மயிலானது தனது கால்களின் கீழே ஒரு கருநாக பாம்பினை அடக்கி மிதித்து நிற்கின்றது. அவனது ஆறு சிரங்களும் ஆறு பிராண ஸ்தானங்களைக் குறிக்கும். அவையே, மனித உடலின் நரம்புமண்டல இயக்கத்திற்கு ஆதாரமாக, முள்ளந்தண்டுக் கொடி நெடுக, நெற்றிப் புருவ மையம்வரை அமைந்துள்ள ஆறு சக்கரங்களுமாகும். அம் மையச் சக்கரங்களின் மீது புலன்களைச் செலுத்தித் தியானிப்பதினாலேயே,. தனது கீழான சுபாவத்தை அடக்கவும், மேன்மையடையவும், தத்துவங்கள் வாயிலாக இறைவனுடனே ஒன்றுபடவும் யோகிகள் முயன்றனர். அதுவே சத்தும், சித்தும், ஆனந்தமுமாகிய 'சச்சிதானந்தம்' என்பது. கந்தக் கடவுளது பன்னிரு திருக்கரங்களையுடைய அவனொருவனே, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஐந்து தொழில்களையும் நடாத்துகின்றானென்பதைக் குறிக்கின்றன. வேலாயுதம் என்பது அறியாமைக்குக் காரணமாகிய ஆணவமென்னும் பிசாசை ஊடுருவிக் குத்திக் கிழிக்குஞ் சக்தி வாய்ந்தது. மேலும், அதுவே இராஜயோகியானவன் ஒரே முனையுடைய மனசோடு, சித்திபெறும் ஆயுதமாகும். வேலின் அடிப்புறமாகிய மூலாதாரத்தினின்று அறிவானது புறம்போந்து இடைவெளி நாடிகளினூடாக இலை வடிவாகிய அவ்வேலினது உச்சியை அடைகின்றது. வாகனமாகிய மயிலானது, ஓம் என்னும் பிரணவாட்சரத்தின் வடிவைக் குறிக்கும். அதுவே விந்துருபம்! அதன் காலடியின் கீழுள்ள சர்ப்பமானது பிரணவத்தின் சக்தியால் அசுத்த மாயையானது முற்றும் மேற்கொள்ளப்படுவதைக் குறிக்கின்றது. கொடியிலுள்ள சேவலானது பிரணவத்தின் நாதத்தைக் குறிக்கும். வள்ளி, தெய்வானை, .வேல் என்பன முறையே இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என்பவற்றைக் குறிக்கும். இம்மூன்றும் பரப்பிரமமாகிய சுப்பிரமணியப்பிரானில் உள்ளனவாம். இக் கலியுகத்தில் முருகப்பிரானே பிரத்தியட்ச தெய்வமாகும். எனவே சுப்பிரமணிய தியானம் பிரமத்தினை அறியும் அந்தர்முக அறிவென்ப" (பக். IX- X)

(தொடரும்...

## ஐம்புலன் அடக்கம்

ஆமையைப்போல் ஐந்து புலன்களையும் அடக்கியவருக்கு ஒரு பெரிய சுகம் உண்டாகிறது. வெளியிலே கண்டபடி அலைபவனுக்கு வீட்டிலே போய் நிழலில் சற்று நின்றால் மகிழ்ச்சியாக இருக்கும் அல்லவா? அதேபோல புலன்கள் வெளியிலுள்ள விஷயங்களில் உழல்வதால் கவலை உண்டாகின்றது. அவைகளை உள்ளே திருப்பும்பொழுது ஆனந்தமும், ஆறுதலும் உண்டாகின்றது.

-வாரியார் சுவாமிகள்-

**காலம் வருமென எண்ணி கடமையைக் கைவிடலாகாது.**

உ



# தினம் தினம் ஆனந்தமே...!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்** அவர்கள்

நமது பாரம்பரிய வரலாற்றைப் பார்த்தீர்கள் என்றால், பலவிதமான ஆனந்தத்தைப் பற்றிய குறிப்புக்கள் எங்கும் நிறைந்துள்ளன. அதைப்பற்றி "யோகாவில்" எப்போதுமே பேசப்பட்டிருக்கிறது. 'பிரமானந்தம்' என்றால், இந்தப் படைப்பே ஆனந்தம் என்பதுதான்.

நீங்கள் பார்க்கும் இந்த உடல், மனம் அல்லது உணர்ச்சி- இவை எல்லாமே வெளிப்புறம்தான். இவைகளுக்கு ஆதாரமாக விளங்குவதும், இந்தப் படைப்பிற்கே ஆதாரமாக உள்ளதும் ஆனந்தத்தன்மையே!

'பிரமானந்தம்' என்னும் சொல், படைத்தவனின் இயல்பே ஆனந்தம்தான் அல்லது படைத்ததே ஆனந்தம்தான் என்றால், அவன் என்ன ஏதோ சொர்க்கத்திலா உட்கார்ந்திருப்பான்?

படைத்தவனோ அல்லது இந்தப் படைப்பின் மூலமான ஒன்றோ, வேறெங்கோ உட்கார்ந்து கொண்டு இல்லை. உங்கள் உடலைப் பார்த்தாலே இது புரியும். பிறந்ததில் இருந்து இன்றுவரை அது எவ்வளவு வளர்ந்திருக்கிறது. இது எப்படி நடந்தது?

## 14. இந்தப் படைப்பே ஆனந்தம்

யாராவது வெளியில் இருந்து அதைப் பிடித்து இழுத்து நீட்டிவிட்டார்களா என்ன? இல்லை.... படைத்தவன் உள்ளே இருந்து, தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதாற்றான் வளர்ச்சி சாத்தியமாகிறது.

ஆக, படைப்பின் மூலமே உங்களுக்குள்தான் எப்போதும் இருக்கிறது. அதுதான் ஆனந்தம்.

இந்தப் படைப்பின் ஆதாரமாக விளங்கும் ஆனந்தம், உங்கள் மூலமாகவும் தன்னை வெளிப்படுத்த நீங்கள் வாய்ப்பளித்தால் போதும்; ஆனந்தமாக இருப்பதைத்தவிர உங்களால் வேறுவிதமாக இருக்கவே முடியாது.

ஆனால், இப்போது நீங்கள் வேறுவிதமாக இருப்பதற்குக் காரணமே, உங்கள் உயிரின் மூலத்தோடு ஒத்திசைவாக இயங்காமல் முரண்பட்டு இருப்பதுதான்! அதனால்தான் உங்கள் மனமும் கட்டுப்பாடின்றி தாறுமாறாக இயங்கிக்கொண்டிருக்கிறது.

ஒருவர் வாழ்வில் துன்பப்படுகிறார் என்றால், அவர் வாழ்வில் ஏதோ தவறாகப் போய்விட்டது; சந்தர்ப்ப சூழ்நிலைகள் சரியல்ல என்று அர்த்தமில்லை. ஏனென்றால், சூழ்நிலைகள் உங்களுக்கு வலியைத்தான் தரமுடியும். உங்கள் மனம் நீங்கள் நினைப்பதுபோல செயற்படாததால்தான் நீங்கள் துன்பத்தையும், துயரத்தையும் அனுபவிக்கிறீர்கள்.

உங்கள் கட்டளைப்படி உங்கள் மனம் இயங்கினால் நிச்சயமாக ஆனந்தமாகத்தான் இருப்பீர்கள். இதை யாரும் உங்களுக்குப் போதிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால்

பயங்கரமான பகைவன் மனம்.

ஆனந்தத்தை தேர்ந்தெடுக்கும் புத்திசாலித்தனம் அனைவரிடமும் உள்ளது. 'நான் ஆனந்தமாக இருக்கவேண்டும்' என்பது ஒவ்வொரு மனிதனிடமும் உள்ள அடிப்படையான ஏக்கம்.

'நான் ஆனந்தமாக இருக்கவேண்டும்' என்ற எண்ணம் உங்களிடம் இருக்கின்றது. ஏதோ தத்துவமோ, செயல்முறையோ, மதமோ உங்களுக்குள் இருக்கும் உயிர் ஆனந்தத்திற்காக ஏங்குகின்றது. ஏனென்றால் அது எதிலிருந்து தோன்றியதோ.... அந்தப் படைப்பின் மூலமே "ஆனந்தம்தான்".

**ஆனந்தத்தின் வெளிப்பாடு எது?**

நீங்கள் ஆனந்தமாக இருக்கிறீர்களா அல்லது ஆனந்தமற்று இருக்கிறீர்களா என்று மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏதாவது உள்ளதா, என்ன?

அது உங்கள் உள் அனுபவம். ஆனால் நீங்கள் உங்கள் ஆனந்தத்தை ஒரு குறிப்பிட்ட பாவனையாக ஆக்கிக் கொண்டால், உதாரணத்திற்கு பல்லை இளித்து (சிரித்து) வெளிப்படுத்துகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். பிறகு நிச்சயம் யாராவது ஒருவர் உங்களை தலையில் தட்டி 'இளிப்பதை நிறுத்து' என்று கூற நேரிடும்.

அதுவும், அவர் வேதனையில் தவிக்கும்போது நீங்கள் இளித்துக்கொண்டிருந்தால், இனி நீங்கள் இளிக்கவே முடியாதபடி உங்கள் முகத்தை அவர் உடைத்து விடுவார்.

இப்படி ஒரு குறிப்பிட்ட பாவனையோடு உங்கள் ஆனந்தத்தை அடையாளப்படுத்தாமல் இருந்தால்போதும். சூழ்நிலைக்கேற்ப நடந்துகொண்டு, அதேசமயம் உள்நிலையில் நீங்கள் ஆனந்தமாகவே இருக்கலாம். இதை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. ஆனால் உங்கள் ஆனந்தம் குறிப்பிட்ட பாவனையோடு ஐக்கியமாகி இருந்தால், கட்டாயம் பிரச்சினைதான்.

எந்த தவறான நிர்ப்பந்தமும் இல்லாமல் இருப்பதே ஆனந்தம். உண்மை இப்படி இருக்கும்போது சூழ்நிலைக்குத் தேவையானபடி நடப்பதற்கு எந்த முயற்சியும் தேவையில்லை.

ஒரு இடத்தில் அனைவரும் துக்கம் அனுசரித்துக்கொண்டிருந்தால், நீங்களும் அதில் பங்கெடுத்துக்கொண்டு துக்கம் அனுசரிக்கமுடியும். அதேநேரம் உள்நிலையில் எந்த பாதிப்பு இன்றியும் இருப்பது சாத்தியம்.

இதுதான் ஆனந்தம் தரும் சுதந்திரம். உங்கள் நிர்ப்பந்தங்களை எல்லாம் அது அழித்துவிடும். துயரம்தான் நிர்ப்பந்தத்தின் ஆதாரம். இதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் துயரத்தைப் பார்த்து பயப்படுவதால்தான் உங்களுக்கு நிர்ப்பந்தமே எழுகின்றது. பிறகு நிர்ப்பந்தத்தால் உந்தப்பட்டு, அதன்படி நடந்துகொள்கிறீர்கள். உங்கள் உணவு, நீங்கள் செயல்படும் விதம், பழக்கவழக்கம்.... இவை எல்லாமே குறிப்பிட்ட விதமாக ஏதோ ஒரு நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு இருக்கின்றது. ஏனென்றால், அதேவிதமாக செய்யவில்லை என்றால் எங்கே துன்பம் வந்துவிடுமோ என்று உங்களுக்குப் பயம்.

இந்நிலை மாறிவிட்டால், பிறகு நீங்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். சூழ்நிலைக்குத் தகுந்தவாறு செயல்படலாம். ஏனென்றால் இப்போது எந்த நிர்ப்பந்தமும் இல்லை; அதனால் உங்கள் ஆனந்தத்திற்கும் ஆபத்து இல்லை.

ஆக, நீங்கள் இப்படி இருந்தால், பின்னர் சமுதாயம் ஏன் உங்கள் ஆனந்தத்திற்கு எதிராக இருக்கப்போகிறது?.

(ஆனந்தம் இன்னும் வளரும்....

**அதிக போதை ஊட்டுவது காமம்.**

# நித்தம் + நிமித்தம் = முன்னேற்றம்

சி. ஆறுமுகம் அவர்கள்

நித்தம் சக நிமித்தம் சமன் முன்னேற்றம். இது ஒரு சூத்திரம். அதாவது இறைவன் திருவருளின் மேன்மையைத் தெள்ளிதில் விளக்கிக் காட்டும் இறை சூத்திரம் எனலாம்.

சூத்திரம் என்பது பரந்துபட்ட விரிவாக்கத்தை உள்ளடக்கமாய்க் கொண்டதும், விடுவிக்கப்படாத பல விடயங்களைக் கண்டறியும் இலகு வழியைத் தெரிவிப்பதும், வாய்ப்பான அணுகு முறைகளைக் கொண்டு விடைகளைக் காணும் நடைமுறைகளை உள்ளடக்கியதுமான ஒரு சுருக்கமான சொல்லமைப்பே சூத்திரம் எனில் மிகையில்லை.

இலக்கண இலக்கியங்களைக் கற்றறிந்தோர் சூத்திர மேன்மைகளை எடுத்தியம்புவதை நாம் அறிந்து கொள்ளலாம். நன்னூற் காண்டிகை உரையில் சூத்திரங்கள் இருப்பதை பண்டிதர், புலவர், உயர்தர மாணவர்கள் அறிந்து கொள்வர். இலக்கண பாடத்தில் சூத்திரங்கள் எடுத்து விளங்கப்படுத்தப்படும். விஞ்ஞான கணித பாடங்களிலும் சூத்திரங்கள் உள்ளதை மாணவர்களும் அறிவர்.

கணித பாடத்தில் வட்டிக் கணக்குப் பார்ப்பதற்கு ஒரு சூத்திரம் உள்ளது. முதல் தர (பெருக்கல்) காலம் தர வீதம் கீழே நூறு சமன் வட்டி எனக் குறிப்பிடப்படுகிறது. எவ்வளவு பெரிய தொகையானாலும் இந்த சூத்திரத்தின் படி பின்னத்தை எழுதினால் விடையைக் கண்டறிய முடியும்.

400 மீற்றர் குறுக்களவுள்ள ஒரு வட்டமான மைதானத்துக்கு சுற்றளவு காண்பதாயின் $3^1/_7$ என்ற பின்னத்தால் பெருக்க சுற்றளவு கண்டுவிடலாம். இந்த $3^1/_7$ என்பது சூத்திரக் கணித முறையாகப் பாவிக்கப்படுகிறது.

அவைபோல் இந்த நித்தம் + நிமித்தம் = முன்னேற்றம் என்ற சூத்திரமும் மானிடப்பிறவி எடுத்த மாந்தர்கள் யாவரும் தங்களின் வாழ்க்கைக் காலத்துள்ளே தத்தமது செயல்களின் மூலம் அச் செயல்களின் விளைவுகளால் ஏற்படும் மன வளர்ச்சியினூடே தமது மறுபிறவியைத் தீர்மானிக்கும் வாய்ப்பைப் பெற வழிவகுக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை என உறுதியாகக் கூறமுடியும்.

நித்தம் என்பது யாது? இது ஒரு காலக்குறி. காலத்தை அளவீடு செய்யும் ஒரு கணிதப் பொறிமுறை வார்த்தையாகும். 60 செக்கன் ஒரு நிமிடம் என்பதையும் 60 நிமிடங்கள் ஒரு மணித்தியாலம் என்பதையும், 24 மணித்தியாலங்கள் ஒரு நாள் என்பதையும் நாமறிவோம். இன்னொரு பார்வையில் இதைக் கூறவேண்டுமாகில் 24 மணித்தியாலம் 60 நாளிகை ஒரு நாளிகை 60 விநாடி. ஒரு விநாடி 60 தற்பரையாகும். அதாவது 60 நாளிகை 24X60X60=86400 செக்கன் என்றாகிறது. 1 நாளிகை 1440 செக்கன் என்றாகிறது. 60 விநாடி 1440 செக்கன் எனில் ஒரு விநாடி 1440÷60=24 செக்கன் என்றாகிறது. 24 செக்கன் ஒரு விநாடி எனில் ஒரு செக்கன் $60 \div 24 = 2^1/_2$ தற்பரை என்றாகிறது. இரண்டு விரல்களைச் சுண்டுகின்ற கால வேளையின்

மிகத் தீய குணம் கோபம்.

$2^1/_2$ மடங்காக கால அளவுப் பொழுதானது நித்தம் என்ற கால அளவீட்டைக் குறிக்கும் சொல்லாகும். நமது முன்னோர்கள் வகுத்துள்ள பஞ்சாங்க விளக்கத்தின் அடிப்படையில் இவற்றைப் புரிந்துகொள்ள முடியும்.

நித்தம் என்ற சொல்லானது தற்பரை என்ற கால அளவீட்டையே குறிப்பதாகும். இதுவே எந்தக் கணத்திலும், எந்த வேளையிலும், எப்பொழுதிலும் என்பதைக் குறிப்பதாகும்.

நித்தம் என்றால் என்ன என்பதைப் பார்த்தோம். இனி நிமித்தம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். நிமித்தம் என்றால் காரணம் என்ற பொருளைக் குறிப்பதாகும். குறித்த ஒரு சம்பவம் நிகழ்வதற்கு குறித்த ஒரு விடயம் காரணமாகின்றது.

அன்னதானம் புசிக்க வருபவர்களுக்கு தத்தமது பசியைப் போக்கவேண்டுமென்ற உந்துதல் காரணமாகின்றது. பசி அவர்களைத் தூண்டிவிட பசி போக்கும் இடம் நோக்கி நகர்ந்து வருகிறார்கள். பசி நிமித்த காரணமாகிறது.

திருட்டுக் குற்றவாளி ஒருவன் சிறைக்கு அனுப்பப்படுகின்றான் கைதியாக. அவன் ஆறு மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்ற நீதிபதியின் உத்தரவுக்கு கட்டுப்பட்டிருக்கிறான். அவன் செய்த திருட்டுச் செயல் அவன் சிறைத்தண்டனை அனுபவிக்கக் காரணமாகிறது. திருடிய செயல் நிமித்த காரணமாகிறது.

ஒரு பாடசாலை மாணவன் பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையில் பரிசு பெற வருகிறான் மேடைக்கு. அவனைக் கற்றறிந்த பெரியோர்கள், நலன் விரும்பிகள் பாராட்டிக் கௌரவிக்கிறார்கள். அவன் பரீட்சையில் பெற்ற திறமை சார்ந்த புள்ளிகள் அவன் பாராட்டிக் கௌரவிக்கப்படுவதற்குக் காரணமாகிறது.

அன்னதானம் புசிக்க வருபவர்களுக்கு பசி நிமித்தமாகிறது. கைதி சிறையிலிருப்பதற்கு திருட்டு நிமித்தமாகிறது. மாணவன் பரிசு பெறுவதற்கு அவனது திறமை நிமித்தமாகிறது. ஆக குறித்த ஒரு சம்பவம் நிகழ்வதற்கு குறித்த ஒரு விடயம் நிமித்தமாகிறது.

இனி நாம் முன்னேற்றத்தைப் பற்றிப் பார்ப்போம். நித்தமும் நிமித்தமும் சேரும்போது முன்னேற்றம் வருகிறது என சூத்திரம் சொல்கிறது.

நித்தம் என்று சொல்லப்படுகின்ற எந்த வேளையிலும் நிமித்தம் என்று சொல்லப்படுகின்ற நிமித்த நிகழ்வு சேரும்போது முன்னேற்றம் ஏற்படுகிறது.

பசியால் தூண்டப்பட்டு அன்னதானம் புசிக்கும்போது பசி நீங்குகிறது. அடுத்த கட்டமாக உடல்நிலை தெம்படைந்து சத்து ஊட்டப்பட்டு திடகாத்திரம் பெறும் முன்னேற்ற நிகழ்வு உண்டாகிறது.

திருட்டுச் செய்த காரணத்தால் சிறைத் தண்டனை அனுபவிக்கும்போது குற்றம் செய்தவன் என்ற குற்ற உணர்வால் கூனிக் குறுகிப் போகின்ற ஒருவன் குற்றத்திற்குத் தண்டனை அனுபவிக்கிறேன் என்ற உணர்வின் காரணமாக மனோநிலையில் ஓர் இலகு நிலை, சாந்த நிலை, அமைதிநிலை உண்டாக வாய்ப்பு ஏற்படுகிறது. பிறரால் மன்னிக்கப்பட்டு விடும்போதும் அவனுக்கு இத்தகைய உணர்வு ஏற்பட வாய்ப்பு உண்டாகிறது. தனது பாவச் செயலுக்கான பிராயச்சித்தத்தை அவன் அடைந்து கொள்கிறான். இது அவன் பெற்றுள்ள பிறவியின் போதான முன்னேற்றமான அம்சமாகும். அவன் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் சந்தர்ப்பமும் அதுபோன்ற குற்றச் செயல்களைச் செய்யக்கூடாது என்ற மன உணர்வும் அவனுக்கு ஏற்படுகிறது. அதாவது இதன் மூலம் அவனது எண்ணத்தில், சிந்தனையில்,

**உன்னிடம் உள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்.**

செயலில் முன்னேற்றகரமான மாற்றம் நிகழ வாய்ப்பு ஏற்படுகிறது.

பகிரங்க மேடையிலே பரிசளிக்கப் பட்டு மதிப்பளிக்கப்பட்ட மாணவன் மென் மேலும் தன் திறமையை வளர்த்துக் கொள்ள வும், நல் வழிகாட்டிகளுடன் நல்லிணக்கம் காணவும், நல்லதொரு பிரஜையாக தன்னை உருவாக்கிக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படு கிறது. இது அவன் வாழ்க்கைப் பாதையிலே முன்னேற்றம் ஏற்படுவதற்கும் அடுத்த பிறவிக் கான தேட்டத்தை உருவாக்கிக் கொள்ளவும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

இப்பொழுது மீண்டும் இச் சூத்திரத்தை உற்று நோக்குவோம். நித்தம் + நிமித்தம் = முன்னேற்றம் என்ற இச் சூத்திரம் இக்கட்டுரை யின் முற்பாகத்தில் குறிப்பிட்டதைப்போன்று சதா வேளையிலும் நிகழுகின்ற சம்பவங்களி னூடே பிறவியில்லாப் பெருவாழ்வு நோக்கிய முன்னேற்றத்தைக் காண்பதற்குரியவாறான பிறவிகளைப் பெற்றுக்கொள்ள இக் கருத்தியல் அடித்தளத்தை மாந்தர் யாவருக்கும் இடுகிறது எனக் கொள்ளுதல் பொருந்தும்.

இங்கே குறிப்பிடவேண்டிய முக்கிய விடயம் யாதெனில் மறுபிறவி நம்பிக்கையைக் கொண்டுள்ளவர்களால் மட்டுமே இக்கூற்றை ஏற்றுக்கொள்ள முடியும். புராண இதிகாசக் கதைகளினூடே மறுபிறவிக் கதைகளை பெரி யோர் சொல்லக் கேட்கின்றோம்.

கிருஷ்ண பரமாத்மாவே இராமர் அவதாரம் பெற்றதாகக் கூறுவர்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்கிறார் திருவள்ளுவர்.

இறைவன் திருவருளைப் பெறாதவர் பிறவி எடுக்கும் துன்ப சாகரத்திலிருந்து மீள முடியாது என்றுரைக்கின்றார். பழிச் செயலைச் செய்யாத பண்புடைய நன் மக்களைப் பெற்றால் ஏழு பிறப்புக்கும் ஒருவருக்குத் தீமை சேராது என்கிறார் திருவள்ளுவர். பிறவிகள் உண்டு என்பதே இதன்பால் புரிந்துகொள்ளவேண்டிய விடயமாகும்.

ஒரு மானிடப்பிறவிதனில் நின்றவினை செய்தவினை வந்தவினை என்ற வகையில் ஒவ்வொருவரும் ஆற்றுகின்ற வினைப்பயனை முடிவுறுத்த பிறவிகள் எடுக்கவேண்டும் என்பதே நமது மறுக்கமுடியாத நம்பிக்கையாகும்.

இதனடிப்படையில் மானிடப்பிறவிதனை நாம் எடுக்கும்போது எமது முற்பிறவியில் நாம் செய்த நல்வினை தீவினைகளின்படி பயனைப் பெற்றுக்கொள்ளவும், இப்போதைய பிறவியின் போது எம்மால் ஆற்றப்படுகின்ற நல்வினை தீவினைகளின்படி பயன்களைப் பெற்றுக் கொள்ளவும், நாம் வாழும் சுற்றுச்சூழல் சமூகத்தவர்களுடன் உடன்பாடு கொள்வதன் மூலமும் மறுதலித்துச் செல்வதன் மூலமும் எம்மைச் சார்ந்துவரும் நல்வினை தீவினை களின்படி பயன்களைப் பெற்றுக்கொள்ளவும் மானிடப்பிறவி வாய்ப்பாயமைகிறது.

இந்த மானிடப்பிறவியானது பிறவி எடுக்காத நிலைக்குச் செல்ல வேண்டுமாகில் பயன்விளையும்- அதாவது நல்வினை தீவினைக்கு ஏற்ற பயன்தரும் பிறவிகளை அனுபவித்து முடிப்பதாற்றான் பிறவி கிடைக் காத பெருவாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்லும் என்பதே ஆன்றோர் கருத்தாகும்.

இத்தகைய சீலத்தை நாம் பெற வேண்டுமாயின் ஒவ்வொருவர் வாழ்விலும் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் ஏதோ ஒரு வகையில் காரணமாகி முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதே இச்சூத்திரத்தின் உட் பொருளாகும்.

**மிகப் பலமுள்ள மனிதன் பொறுமைசாலி.**

ஒரு தாழ்வுச் சிக்கலைக் கொடுக்கும் ஒரு சம்பவத்துக்குள் நாம் ஆட்பட்டாலும் சரியே, அல்லது ஓர் உயர்தகைமைப் பண்புகொண்ட செயல்கள்மூலம் என்றாலும் சரியே ஒவ்வொருவரின் மனோநிலையும் மறுபிறவியை நோக்கிய பக்குவத்தை அடைவதற்குக் கணத்துக்குக் கணம் நிகழ்கின்ற இச்சம்பவங்கள் முன்னேற்றகரமான மாற்றத்தைக் கொடுக்கிறது என்பதே இச் சூத்திரத்தின் உட்பொருளாகும்.

நித்தம் + நிமித்தம் = முன்னேற்றம் என்ற இச்சூத்திரம் எமது கடவுட் கொள்கை நம்பிக்கையை மேலும் வலுப்படுத்த உதவுகிறது என நம்புவோமாக.

---

## "அச்சது பொடி செய்த அதிதீரர்" விநாயகர்!

திரிபுரத்து அரக்கர்கள் தேவர்களுக்குப் பலப்பல தீமைகள் புரிந்தார்கள். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டு ஒரு தேரை அமைத்தார்கள்.



நிலவுலகம் தேர்தட்டு; சந்திர சூரியர்கள்; சக்கரங்கள்; சக்கரவாளகிரி அச்சு; கீழேயுள்ள ஏழு உலகங்கள் கீழ் தட்டுக்கள்; மேலேயுள்ள ஏழு உலகங்கள் மேல் தட்டுக்கள். முப்பத்து முக்கோடி தேவர்கள் தேர்ப்பதுமைகள்; எட்டுத் திசைப் பாலகர்கள் எட்டுத் தூண்கள்; ஏழு மேகங்கள் தேர்ச்சேலைகள்; மேருகிரி வில்; ஆதிசேடன் நாண்; பிரம்மதேவர் தேர்ப்பாகன்; நான்கு வேதங்கள் குதிரைகள்; ஆறு அங்கங்கள் கடிவாளங்கள்; திருமால் அம்பு; அக்கினி அதன் வாய்! வாயு அதன் இறகு- இத்தகைய தேரை அமைத்தார்கள். தேர் அமைக்கத் தொடங்குமுன் விநாயகரை வணங்க மறந்து விட்டார்கள்.

சிவபெருமான் அத்தேரில் ஏறியவுடன் விநாயகர் அத்தேரின் அச்சினை உடைத்துப் பொடியாகும்படி செய்துவிட்டார். பின்பு தேவர்கள் தவறுணர்ந்து வழிபட்டதும் அவர் அருள்புரிந்தார்.

இத்தகைய வீர விநாயகர் அடியார்க்கு எளியவர். மாடத்திலும், கூடத்திலும், பீடத்திலும், அரசமரத்தடியிலும், ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும், தெருக்கோடியிலும் இருப்பார். அவருக்கு "எத்துணை கருணையுள்ளம்"

*-வாரியார் சுவாமிகள்-*

**ஒரு குறிப்பு:**

திரிபுரம் எரிக்கச் சென்ற இறைவனின் தேர் அச்சு முறிந்த இடம் (அச்சு+ இறு+ பாக்கம்) "அச்சிறுபாக்கம்" என இன்றும் வழங்கப்படுகிறது. அங்கே பழமை வாய்ந்த சிவ ஸ்தலம் ஒன்றுண்டு. சென்னையிலிருந்து திருச்சி வரும் பிரதான வழிப்பாதையில் 90 கி.மீ தூரத்தில் உள்ளது "அச்சிறுபாக்கம்"

**மலரைவிட மென்மையானது குழந்தைகளின் மனம் எனவே அதனைக் கசக்கி விடாதீர்கள்.**

(தொடர்ச்சி....

# ஈழத்துத் தபோதனர்கள்

நா. சுப்பிரமணியன் அவர்கள்

இராமலிங்க சுவாமிகளின் மாணவராகத் திகழ்ந்து அடுத்துப் பீடாதிபதியானவர் கல்வயல் கிராமத்தைச் சேர்ந்தவரான நமசிவாயம் சுவாமிகள் (1909- 1983) ஆவர். நிறைவுநாள்: 22-11-1983. இவரை அடுத்து பீடாதிபதியானவர் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள் (1944- 2007). இவர் கொக்குவில் தலையாளிப் பகுதியைச் சார்ந்தவர். இராமலிங்க சுவாமிகளால் ஆன்மீக நெறிக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட இவரது நிறைவு பெற்ற நாள்: 25-07-2007. இவரைத் தொடர்ந்து பீடாதிபதியானவர் வேதவித்தியாசாரர் சுவாமிகள். இவருடைய தலைமையிலேயே வேதாந்த மடத்தின் நிர்வாகம் இன்றுவரை தொடர்கிறது. வேதாந்தமடக் குருபரம்பரை தொடர்பாக ஆழ்கடலான் அவர்கள் தமது கட்டுரைகளில் கோடிட்டுக்காட்டும் வரலாற்றின் முக்கிய தரவுகள் இவை.

இக் குருபரம்பரைத் தொடர்பில் நமது கவனத்துக்கு வந்துள்ள மற்றொரு ஆன்மிகச் செல்வர் வடிவேற் சுவாமிகள் ஆவர். இவர் மகாதேவ சுவாமிகளிடம் 'ஆசார்ய அனுபவம்' பெற்றவர் என ஆழ்கடலான் குறிப்பிடுகிறார். இணுவில் மேற்கைச் சேர்ந்த காசிநாதர்- சின்னக்குட்டி தம்பதியருக்கு 24-05-1906இல் மகனாகப் பிறந்த 'வடிவேல்' என்பவர் யோகர் சுவாமிகளின் தொடர்பால் ஞானநிலை கைவரப்பெற்று வடிவேற் சுவாமிகள் ஆனார். இளம்வயதிலேயே வேதாந்த மடம் சார்ந்தவரான மகாதேவ சுவாமிகளின் நெறிப்படுத்தலில் இலக்கிய- இலக்கணங்களையும் சமய தத்துவ நூல்களையும் கற்றுத் தேர்ந்தவராவர். யோகர் சுவாமிகளின் வழிகாட்டலின்படி கிளிநொச்சி சென்ற இவர் அங்கு 'மகாதேவ ஆச்சிரமம்' என்ற திருமடம் அமைத்துச் 'சமய- சமூகப்' பணிகளை மேற் கொண்டவர். (இவரது நிறைவுநாள்: 26-06-1990)

மேற்குறித்தவர்களைத் தவிர ஈழத்துத் தபோதனர்கள் நூலில் நமது கவனத்துக்கு வரும் தனிநிலை ஆன்மிகச் செல்வர்கள் என்றவகையில் வைரவியார் சுவாமிகள், மாம்பழச் சுவாமிகள், ஊதுவத்தி சுவாமிகள், மூச்சம்புலவு சுவாமிகள், இடைக்காட்டுச் சுவாமிகள், ஆறுமுக சுவாமிகள், பெரிய சந்நியாசியார், பஞ்சாட்சர அம்மா, சரவணமுத்துச் சுவாமிகள், சோதியக்கா, சிந்தாமணியர், மயில்வாகனம் சுவாமிகள், முருகுப்பிள்ளை சுவாமிகள், முருகேசு சுவாமிகள், யோகர் கார்த்திகேசு (கரவைக்கிழார்) முதலியவர்களைக் குறிப்பிடலாம்.

இவர்களுட் பலரும் பொருளாசை துறந்த- ஓடும் செம்பொனும் ஒக்க நோக்கும்- பண்பாளர்களாகவும் சமூக ஏற்றத்தாழ்வுகள் கருதாத சமநோக்கினராகவும் நமக்கு இந்நூல் மூலம் அறிமுகமாகின்றனர். சூழவுள்ள சமூகத்தின் மதிப்பீடுகள் பற்றிக் கவலைப்படாதவர்களாகவும் இவர்களிற் பலர் இயங்கினர் எனத் தெரிகிறது. இத்தகைய போக்கு

நாம் எமது தவறுகளைத் திருத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

களுக்கு, 'போயிலைக்குடில் எரியும்போது சுற்றிவந்து ஆடிப்பாடியவரும் குடைச்சுவாமி களைக் கண்டதும் நடு வீதியிலேயே வீழ்ந்து வணங்கியவரு'மான வைரவியார் சுவாமிகள் பற்றிய செய்திகள் முக்கிய சான்றுகளாகின் றன. இவர் இணுவில் கிராமத்தைச் சேர்ந்தவர்.

வாணிகத்தோல்வியால் சந்நியாசம் பூண்டவர் எனச் சுட்டப்படும் மாம்பழச் சுவாமி யார் யாழ்ப்பாணச் சூழலின் தீவகப் பிரதேசம் சார்ந்தவர். ஈழத்தின் பல தலங்களுக்கும் தல யாத்திரை மேற்கொண்டவராக அறியப்படும் இவர் கதிர்காமத்துக்கு மட்டும் 35முறை யாத் திரை சென்று மீண்டவர்.

'ஊதுவர்த்திச் சுவாமிகள்' என்ற பெய ரில் முறையே வல்வை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருவர் வாழ்ந்தனர் என்ற தகவலை இந்நூல் தருகிறது. இவர்களில் வல்வையில் வாழ்ந்தவரான மகாதேவ சுவாமி கள் என இயற்பெயர் பூண்ட 'ஊதுவர்த்திச் சுவாமிகள்' இளம் வயதில் மனைவி இறை பதம் அடைந்த நிலையில் துறவு பூண்டவ ராவார். இவரைப் பற்றியும் இவருடன் தான் கொண்டிருந்த தொடர்புகள் பற்றியுமான செய்திகளை இவரைப் பற்றிய கட்டுரையில் ஆழ்கடலான் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

மூச்சம்புலச் சுவாமிகள் எனப்படுபவர் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி வடக்கிலுள்ள மூச்சன்புலவச் சிவன் கோவிலைச் சார்ந்த சூழ லில் வாழ்ந்ததனால் அப்பெயரால் அழைக்கப் படுபவர். இந்திய மண்ணின் கேரளத்திலிருந்து ஈழம்போந்தவரான இவர் தமது உடலிலிருந்து விபூதி, சந்தனம், குங்குமம் என்பவற்றை வெளிப்படச் செய்யும் அற்புத சக்திகள் வாய்ந் தவராகவும் தீராத நோய்களைத் தீர்க்கும் சிறப்பு ஆற்றல்களுடையவராகவும் திகழ்ந்தவர் என ஆழ்கடலான் குறிப்பிடுகிறார். (பக் 21-22)

யாழ்ப்பாண மண்ணின் இடைக்காடு கிராமத்தைச் சார்ந்தவர் என்றவகையில் அவ் வூர்ப் பெயர்சுட்டி அழைக்கப்படுபவர் இடைக் காட்டுச் சுவாமியார். இவர் கையால் திருநீறு வாங்கிப் பூசியோர் நோயில் இருந்து விடுபட் டனர் எனவும் அவர்கள் நினைத்த காரியங் கள் நிறைவெய்தின எனவும் ஆழ்கடலான் தரும் தகவல்களால் அறியமுடிகிறது. அனலை தீவைச் சேர்ந்தவரான ஆறுமுக சுவாமிகள் எனப்படுபவர் தொலைவில் உணர்தலில் வல்லவராகத் திகழ்ந்தவர் என் பதும் கடைகளில் அவரால் தொடப்பட்ட பொருட்கள் சிறப்பாய் வியாபாரமாகக் கூடியன என்பதும் அவரைப்பற்றிய கட்டுரை தரும் முக்கியதகவல்களாகும். (ப.50)

இணுவில் கிழக்கைச் சேர்ந்தவரும் சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட வருமான பெரிய சந்நியாசியார் 20ஆம் நூற் றாண்டின் தொடக்கப்பகுதியில் வாழ்ந்தவர். 'சிவகாம சுந்தரி' என்ற குல தெய்வத்தின் அருளாசி பெற்றவராகச் சுட்டப்படும் இவர் தன்னை நாடிவந்த பலரின் நோய்களையும் பிசாசுத் தொல்லைகளையும் திருநீற்றின் வலிமையால் அகற்றியவர் என்பதும் ஆல யத் திருப்பணிகள் பலவற்றை மேற்கொண் டவர் என்பதும் அவரைப்பற்றிய கட்டுரையில் அறியப்படும் முக்கியசெய்திகளாகும். (பக். 54-55)

பஞ்சாட்சர அம்மா எனப்படுபவர் இல்லறத்தை இனிதாக நடத்தி, கணவனை இழந்த நிலையில் துறவுநெறி சார்ந்து சமய வாழ்வு மேற்கொண்டவராவார். திருக்கேதீச்சு வரத்திற்கு வந்தடைந்து இறைதொண்டு மேற்கொண்ட அவர் அடியார்க்கு உண வளித்தல் என்ற அறத்தையும் சிறப்பாக பேணி நின்றவர் என்பது அவரைப் பற்றி ஆழ்கடலான் அவர்கள் தரும் முக்கிய செய்தியாகும்.

**இன்பமும் துன்பமும் வாழ்க்கைச் சக்கரம் மேலும் கீழுமாக மாறி வரும்.**

புங்குடுதீவைச் சார்ந்தவரான சரவண முத்து சுவாமிகள் (1906-1003) வர்த்தகப் பிரமுகராகத் திகழ்ந்து சமயப் பணிகள் ஆற்றியவர். இப்பணியிலே அவர் 'சைவப்பெரியார்' சு. சிவபாதசுந்தரனார், குன்றக்குடி அடிகளார் மற்றும் 'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் முதலியவர்களுடன் தொடர்புகொண்டு செயற் பட்டவர் என இவரைப்பற்றிய கட்டுரைத் தகவல் தருகிறது. (பக். 91-93)

சோதியக்கா மற்றும் சிந்தாமணியார் ஆகிய இருவரையும் பற்றி 'இல்லற ஞானியர் இருவர்' என்ற கட்டுரை எடுத்துரைக்கிறது. ஊரெழுவைச் சேர்ந்தவரான சோதியக்கா அவர்கள் (02-08-1919) பக்தி இலக்கியங் களிலும் விரதங்களை அனுட்டிப்பதிலும் விருந்தோம்பலிலும் மிகுந்த ஈடுபாடு கொண் டவர். இவருடைய வீட்டில் அடியார்களும் இசைவாணர்களும் ஒன்றுகூடிப் பாடிப்பரவும் நிகழ்வுகள் (சத்சங்கம்) நடைபெறுவதுண்டு எனக் குறிப்பிடும் ஆழ்கடலான் அவர்கள் அவ் வாறான ஒரு சந்தர்ப்பத்தை மையப்படுத்தி மண்டைதீவைச் சார்ந்தவரான சிந்தாமணியரை அறிமுகம் செய்கிறார். சோதியக்கா அவருக்கு அளித்த ஆடைகளின் பொதியை அவர் தம்மூர் திரும்பியபின் பிரித்தபோது ஆடை மடிப்பில் 15 பவுணுக்கு மேற்பட்டதாக தங்கத் தாலிக் கொடி ஒன்றிருந்ததாகவும் அதனை அவர் உடனே திரும்பவும் ஊரெழு சென்று சோதி யக்காவிடம் சேர்ப்பித்ததாகவும் சிந்தாமணியர் பற்றிய செய்தி அமைகிறது. (பக். 111-112)

மயில்வாகனம் சுவாமிகள், முருகுப் பிள்ளை சுவாமிகள், முருகேசு சுவாமிகள் ஆகியோரைப்பற்றிய செய்திகளை "செல்வச் சந்நிதியில் மூவர்' என்ற கட்டுரை தருகிறது. யாழ்ப்பாணத்தில் ஆனைப்பந்திச் சூழலைச் சார்ந்தவராக அறியப்படும் மயில்வாகனம் சுவாமிகள் தமிழகம் சென்று திருவண்ணா மலையில் வாழ்ந்தவரான ஸ்ரீ ரமணரின் சீட ராகத் திகழ்ந்தவர். பின்னர் இவர், ஈழம் போந்து செல்வச்சந்நிதியில் 'ரமணமன்றம்' அமைத்துச் சமய- சமூகப் பணிகள் மேற் கொண்டார். இவ்வகையில் குறிப்பாக அடிய வர்களுக்கு உண்டியும் உடையும் பயணச் செலவுக்கான கைப்பணமும் இவர் வழங்கி வந்துள்ளார். அல்வாயைச் சேர்ந்தவரான முருகுப்பிள்ளை சுவாமிகள் மறவன்புலவுச் சின்னத்தம்பி சுவாமிகளின் சீடர் ஆவார். இவரும் தமிழகத்தின் ஸ்ரீ ரமணரிடம் ஆன் மிகப் பயிற்சி பெற்றவராகவே அறியப்படு கிறார். தும்பளையைச் சேர்ந்தவராக அறியப்படும் முருகேசு சுவாமிகள் வர்த்தக ராகத் திகழ்ந்து பின்னர் நோய்வாய்ப்பட்ட நிலையில் சந்நிதி முருகனிடம் தஞ்சம் புகுந்து அந்நோய் நீங்கப் பெற்றவர். அங்கு இவர் அறுபத்துமூன்று நாயன்மார்கள் நினை வாக மடம் கட்டுவித்தவர்.

மேற்படி மூவரைப்பற்றியும் இக்கட் டுரையில் இடம்பெற்றுள்ள முக்கிய செய்திகள் இவை.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்தவரான கார்த்திகேசு சுவாமிகள் அம்மண்ணின் 'யார்க் கரு பிள்ளையா'ரைக் குல தெய்வமாகவும் அம்பாளை உபாசனா தெய்வமாகவும் கொண்ட ஒரு நிறைவான பக்தர். சரியைத் தொண்டில் தலை நின்றவர். திருநீற்றின் மகிமை யால் மக்களின் தீராநோய்களை இவர் தீர்த் துள்ளார். இவரைப் பற்றிய கட்டுரை மூலம் அறியப்படும் முக்கிய செய்திகள் இவை.

**வாழ்க்கையில் துணிவு, விடாமுயற்சி இவையன்றோ வெற்றிப்பாதையின் முதற்படிகள்.**

# 3. எடுத்துரைப்பு முறையும் இந்நூற் செய்திகளின் வரலாற்று முக்கியத்துவமும்

மேற்படி ஆன்மிகவாதிகளைப் பற்றிய தகவல்களை எடுத்துரைக்கும் முறைமையில் ஆழ்கடலான் அவர்கள் தானும் ஒரு ஆன்மிக வாதியாக நின்றே செயற்பட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தி யாகும். அதாவது 'தான் கலந்து நின்று' எடுத் துரைக்கும் முறைமையிலேயே அவர் ஒவ் வொருவரைப்பற்றியும் கூறிச் செல்கிறார். இந் நூலில் சுட்டப்படும் தபோதனர்களுட் சிலருடன்- குறிப்பாக திருவாசக சுவாமிகள், மூச்சம்புலவு சுவாமிகள், மாதாஜி பஞ்சாட்சரஅம்மா முதலிய வர்களுடன்- ஆழ்கடலான் அவர்கள் நேரடியான தொடர்பு கொண்டவர். திருவாசக சுவாமிகளை 'அப்பு' என உறவுரிமையுடன் குறிப்பிடும் அளவு நெருக்கத்தை இவர் கொண்டிருந்தார் என்பதை மேலே நோக்கியுள்ளோம். இவ்வாறு நேரடி அநுபவங்களையும் கலந்தமையே மேற் சுட்டிய 'தான் கலந்த எடுத்துரைப்பு முறைமை'க்கான ஒரு முக்கிய காரணியாகும்.

தபோதனர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் பேசும்போது ஆங்காங்கே தமிழின் 'திருமுறை- திவ்வியபிரபந்த'ப் பாசுரங்கள், பிற்கால அருட்பாடல்கள், மற்றும் திருக்குறள், ஔவை யார் பாடல்கள் முதலிய 'அற- ஒழுக்க' இலக் கியப்பரப்பு ஆகிய பலவற்றையும் எடுத்தாண்டு ஆன்மிக உணர்வையும் அறவுணர்வுகளையும் பதிவுசெய்கிறார். இதனால் இந்நூல் ஒரு 'வர லாற்றுப் பதிவு' என்பதோடமையாமல் 'ஆன்மிக ஆக்கம்' என்ற கணிப்புக்குரியதாகவும் திகழ் கிறது. நூலின் இறுதியிலேயே உபகாரிகள் என்ற தலைப்பில் ஆழ்கடலான் அவர்கள் தம் முடைய தேடல்களுக்குத் துணைநின்ற நூல் களின் பட்டியலை முன்வைத்துள்ளார். சித்தர் கள் சிலரின் ஒளிப்படங்கள் நூலில் முகப்பிலும் இறுதி அட்டையிலும் உள்ளேயும் இடம்பெற் றுள்ளன. இவை இவ்வாக்கத்துக்கு அணி செய்கின்றன.

இந்நூல் தரும் செய்திகளின் வர லாற்று முக்கியத்துவம் என்ற வகையில் மூன்று அம்சங்களைச் சுட்டலாம்.

அ. திரு நா. முத்தையா அவர்கள் தந்துள்ள ஈழத்துச் சித்தர் வரலாற்றுச் செய்திகளுட் சிலவற்றை இந்நூல் மீளவும் உறுதிசெய்துள்ளமையாகும். குறிப்பாக, கடையிற் சுவாமிகள், நவநாத சித்தர் முதலிய பலரைப்பற்றிய நா. முத்தையா அவர் களின் வரலாற்றுப் பதிவுகள் பலவும் ஆழ்கடலான் அவர்களால் மீளப்பதிவுபெற்று உறுதி பெறுகின்றன.

ஆ. வேதாந்த மடத்தின் குருபரம்பரையினரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுநிலைப்படுத்திக் கூறியுள்ள முறைமை அத்தொடர்பில் மேலும் ஆய்வுகள் நிகழ்த்துவதற்கான ஒரு தோற்றுவாயாக அமைந்துள்ளது.

இ. இந்நூலில் சுட்டப்பெற்ற ஏனைய ஆன்மிகவாதிகள் பற்றிய செய்திகளுட்பல இனிவரும் தலைமுறைகளில் மேலும் விரிநிலையில் நிகழக்கூடிய பார்வைகளுக்கான தொடக்கநிலைத் தரவுகளாகக் கொள்ளத்தக்கன.

(தொடரும்...

(தொடர்ச்சி....

உ

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

தொடர் - 43

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்** அவர்கள்

பக்குவமான ஞானிகளுக்கு அவர்களின் அகத்திலே சிவன் காட்சி தருவார். உடலின் அங்க அவயவங்கள் அனைத்தும் இறைவனை நோக்கித் திரும்பினால் இறைவனை அகத்திலே காணலாம் எனத் திருநாவுக்கரசர் திருவங்கமாலையிலே குறிப்பிடுகின்றார்.

தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தோடானாத் தேவனை என்னுள்ளே தேடிக்
கண்டு கொண்டேன்" என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும்.

எங்கும் நிறைந்த எல்லாமும் ஆகிநின்ற பரம்பொருள் தனது உள்ளத்தினுள்ளே நின்ற தெய்வீக அனுபவத்தை திருமூலர் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார். சிவன் தனது ஒளிமயமான தேவர் கூட்டத்துடன் தன் அகத்திலே வந்து அகப்பட்டுக்கொண்டார் என்பதை ஆனந்தப் பரவச நிலையில் நின்று பாடுகின்றார். பிறவிக்குக் காரணமான பாசமான இருளைப்போக்கி என் தந்தையாகிய அவன் என்னை ஆட்கொண்டு அருளினான் என்கிறார்.

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே"

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தின் அச்சோப் பதிகத்தில் ஆனந்தக் களிப்புடன் பாடுவதைப்போன்று திருமூலரும்,

"அவன் வந்தென் உள்ளே அகப்பட்டவாறே"

என்று ஆனந்தக்களிப்புடன் பாடுகின்றார்.

சிவன் வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம் வந்திட நின்ற பாசம் அறுத்திட்
டவ னெந்தை யாண்டருள் ஆதிப் பெருமான்
அவன் வந்தென்னுள்ளே யகப்பட்டவாறே"

அன்பு வயப்பட்டு இறைவனை வணங்கும் அடியார்கள் இறைவனை உரிமையுணர்வோடு அணுகுவார்கள். இறையருள் கிடைப்பதில் தடை ஏற்பட்டால் அல்லது தாமதம் ஏற்பட்டால் அன்பினால் ஏற்பட்ட உரிமைப்பாட்டுடன் இறைவனுடன் மோதுவார்கள்.

"ஆரோடு நோகேன் ஆர்க் கெடுத்துரைக்கேன்" என்றும்,
"நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்றும்,

மணிவாசகர் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் அன்புரிமையுடன் இறைவனிடம் வேண்டுகின்றார்.

**அளவுக்கு அதிகமான ஆசை அழிவுக்கு வழி கோலிவிடும்.**

"ஆளாங்கிருப்பின் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பின் திருவாரூரில் வாழ்ந்து போதீரே"

என்பது தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உரிமைக்குரல். உள்ளம் உருகி அழுதால் இறையருளைப் பெறலாம் என்பதை,

"யானும் பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்கிறார் அழுது அரனடியடைந்த அன்பராகிய மணிவாசகனார். பூரண சரணாகதியாக இறைவனை வணங்கும் அடியார்கள்.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத் தேடுவதும்
நின் அடியார் செய்கை பராபரமே"

என்ற நிலையில் ஆடியும், பாடியும், அழுதும், தொழுதும் இறைவனை வணங்குவார்கள் எனத் தாயுமானவர் கூறுகின்றார்.

இறைவனோடு கூடி அனுபவித்த இன்பத்தினை அந்தப் பக்திப் பரவசத்திலே நின்று திருமூலர் பாடுகின்றார். அன்பினால் இறைவன் செய்த உதவியை நினைந்து உருகி அழுவேன். அவன் புகழ் மாலையான தோத்திரத்தைப் பாடுவேன். என் எலும்பு நைந்துருக இரவு பகல் என்ற வேறுபாடின்றி எப்போதும் வழிபடுவேன். ஆர்வ மேலீட்டினால் தனக்குப் பொன்மேனி போன்று காட்சிதரும் இறைவனைத் தின்பன், கடிப்பன், திருத்துவன் என்றெல்லாம் பாடுகின்றார். இறைவனுக்காக இதயம் அன்பினால் உருகுவதும் கண்களில் ஆனந்த அருவி நீர் சொரிவதும், அரற்றிப் புலம்புவதும், ஞான சாதகனின் மெய்ப்பாடுகளாக அமைந்து விடுகின்றன. யோகியும், ஞானியும், சித்தருமாகிய திருமூலர் பக்திப்பரவச நிலையிலே நின்று சிவக் காதலோடு பாடுவதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகின்றது.

"அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என் பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே"

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் இறைவனை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே கண்டு தரிசித்தவர்களே சித்தர்கள். இந்தச் சித்தருக்கெல்லாம் தலைமைச் சித்தராகத் திகழ்ந்தவர் திருமூலர்.

"மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" என்றும்,
"சக்கரவர்த்தி தவராசயோகியெனும் மிக்க திருமூலன்
மேவுநாள் எந்நாளோ" என்றும் திருமூலரைச் சித்தர்களில் மூலவராகவும், யோகிகளில் தவராச யோகியாகவும் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

இறைவன் இந்த மனித உடம்பிலேயே நம் உள்ளத்தில் மறைந்து நிற்கிறான். இந்த உண்மையை உணர்ந்து உள்ளத்தில் நிற்கும் இறைவனைத் தரிசிப்பதே சித்தி என்று நம்முடைய சித்தர்கள் கண்டார்கள். இந்தச் சித்தியை மகத்தான இலட்சியமாக மக்களுக்கு உபதேசித்தார்கள். பாலுக்குள் மறைந்திருக்கும் நெய்போல நமது அகத்துள் அமர்ந்துறையும் அப்பனாகிய இறைவனைக் காணாது பலர் தவிக்கிறார்கள்.

**விரதம் நோற்பது மன வலிமையை நாமே பரீட்சிக்கும் ஒரு பயிற்சிமுறை ஆகும்.**

ஊனக் கண்ணுக்குப் புலப்படாத இறைவனாகிய கள்வனை அடைவதற்காக மனமாகிய உயர்ந்த தேரில் ஏறி அலைந்த நாட்டின் கணக்கினைச் சொல்ல முடியாது பலர் புலம்புகிறார்கள். இறைவனைக் கண்டுபிடிக்கத் திசை தெரியாமல் சிந்தனையைச் சிதறவிட்டு எங்கும் தேடுகிறார்கள். மக்களின் அறியாமையும் பயனற்ற முயற்சியும் இது என்கிறார் திருமூலர். தானும் எம்பெருமானாகிய சிவன் எங்கோ இருக்கிறான் என நினைத்து எண்ணங்களை அவனைத் தேடும்படி எங்கெங்கோ செலுத்தினேன். இறுதியில் இந்த உடம்புக்குள்ளேயே அவன் ஒளிந்திருப்பதைக் கண்டு கொண்டேன் என்கிறார்.

மாயனை நாடி மனநெடுந்தேரேறிப்
போயின நாடறியாதே புலம்புவர்
தேயமும் நாடும் திரிந்தெங்கள் செல்வனைக்
காலமிந்நாட்டிடைக் கண்டு கொண்டேனே

இறைவன்மீது தீவிர பக்திகொண்டு வழிபடும் அடியவர்களை உலகியலில் அழுந்திவாழும் மக்கள் பித்தன், பேயன் என்றெல்லாம் கூறுவார்கள். பிரபஞ்சத்தில் அழுந்திவாழும் நாம் ஆன்மீக நாட்டம் கொண்டவர்களை நம்முடைய அளவைகளால்தான் அளந்து மதிப்பிடுவோம். ஆனால் உண்மையான ஞானிகள் உலகத்தவர்களின் கூற்றினைக் கருத்தில் எடுப்பதில்லை. நல்லூர்த் தேரடியிலே இருந்து ஞான ஆட்சி புரிந்த மகான் செல்லப்பா சுவாமிகளை நம்மவர்கள் 'விசர்ச் செல்லப்பா' என்றுதான் அழைத்தார்கள். ஆனால் ஞானச் செல்வராகிய தவத்திரு யோகர் சுவாமிகளுக்குத்தான் செல்லப்பா சுவாமிகள் யார் என்பது விளங்கியது.

"என்னையெனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலை வைத்தான் எங்கள் குருநாதன்"

என யோகர் சுவாமிகள் தான் அருளிய நற்சிந்தனைப் பாடலில் தனது குருநாதன் செல்லப்பா சுவாமிகளைப் போற்றித் துதிக்கின்றார்.

குறுநில மன்னராக இருந்த திருமங்கை ஆழ்வார் சிறந்த விஷ்ணு பக்தர். நாராயணனின் நாமத்தை 'ஹரி' என்று நாவால் நாளும் துதிப்பவர். இவருடைய பக்தி நிலையைப் புரியாதவர்கள் இவரைப் பித்தன் என்று தூற்றினார்கள். திருமங்கை ஆழ்வார் இதனைத் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

"அத்தா அரியே என்றுன்னை அழைக்க
பித்தா என்று பிறர் பேசுகிறார் என்னை
முத்தே மணி மாணிக்கமே முளைக்கின்ற வித்தே
உன்னை எங்ஙனம் நான் விடுகேனே"

இறைவன் முத்துவகையில் சிறந்த ஆணிமுத்தைப் போன்றவன்; காலையிலே உதயமாகின்ற உதயசூரியன் போன்றவன்; என இறைவனைத் திருமூலர் போற்றித் துதிக்கின்றார். இத்தகைய சிறப்புமிக்க இறைவனை வானவரும் வணங்குகின்றார்கள். அத்தகைய இறைவனைக் காணாது புலம்புகின்ற என்னைப் பைத்தியக்காரன் என உலகத்தவர் கூறுகின்றார்களே என்று வேதனையுடன் திருமூலர் கூறுவதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

"முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணா தரற்றுகின்றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின்றாரே"

இறைவன் பக்தர்களுடைய உள்ளத்துக்குள்ளே புகுந்து நிற்கிறான். புண்ணியத்தின் பயனும், புண்ணியத்தின் சொருபமும் ஆகிய எம்பெருமான் அகத்திலே நிற்பதைக் காணத் தகுந்த பக்தி தோன்றியவுடன் அவன் அகத்திலே நிற்பதை அடியவர்கள் கண்டு கொள்வார்கள். பக்தி மேலிட்டவுடன் காண்பதால் "புகுந்து நின்றான்" என்கிறார். முற்றறிவாளனாகிய ஞானமூர்த்தி தன்னிடத்தில் பக்தி செலுத்துகின்ற அடியார்களின் அகத்திலே உறைவான். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்றே திருவாசகமும் குறிப்பிடுகிறது. இவ்வாறு அகத்திலே புகுந்து நிற்கும் இறைவனை ஆனந்தப் பரவசத்துடன் துதிப்பதைப் பின்வரும் பாடல் தெளிவு படுத்துகிறது.

"புகுந்து நின்றான் எங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்து நின்றான் எங்கள் போதறிவாளன்
புகுந்து நின்றான் அடியார் தங்கள் நெஞ்சம்
புகுந்து நின்றானையே போற்றுகின்றேனே"

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற ஞானக்குழந்தையாகிய சம்பந்தரின் வாக்கும் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற மணிவாசகரின் வாக்கும், இறைவன் அகத்திலே இருந்து அருள் வழி காட்டியதால் தோன்றிய வாக்குகள் ஆகும்.

சித்தவிகாரத்தை நீக்கி நிற்கும் ஞானியர் சிவமாய் விளங்குவார்கள். வானத்திலிருந்து சொரியும் மழைநீர் மிகவும் தூய்மையானது என்றே விஞ்ஞானமும் கூறுகிறது. இந் நீருக்கு வெண்மையும் இன்சுவையும் இயல்பாகவே உள்ளன. ஆனால், அந்நீர் மண்ணில் வீழ்ந்த பின்பு மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு வண்ணமும் சுவையும் மாறுபடுகின்றது. இதே போலத்தான் பூவுலகில் வாழும் மனிதர்களில் பலரும் சார்ந்ததன் வண்ணமாய்த் திகழ்கிறார்கள்.

சேற்றில் கலங்கிநிற்கும் நீரின் உண்மைத் தன்மை தெரியாததுபோல மக்கள் உலகமயமான எண்ணத்தினால் கலக்கமுற்று இறைவனின் தன்மையை உணராமல் தவிக்கிறார்கள். குடிப்பதற்குரிய நீரைக் குளத்தினின்றும் முகந்து ஒரு குடத்தில் வைத்து தெளியச் செய்வதுபோல சிந்தையைச் சிவத்தில் வைத்து தெளிவுபடுத்தினால் சீவன் சிவன் ஆவான்.

மண்ணில் கலங்கிய நீர் போல் மனிதர்கள்
எண்ணில் கலங்கி இறைவன் இவனென்னார்
உண்ணில் குளத்தின் முகந்தொரு பால் வைத்துத்
தெண்ணில் படுத்த சிவனவனாமே

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயலும் ஆருயிர்களைப் பக்தி நெறியறுவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்குவன் இறைவன்" என்பதை மேற்கூறிய திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

**அதிக ஆசை மனதிலே விதைப்பதால் வாழ்வின் அறுவடை வீணாகிப்போய்விடும்.**

உண்மைத் தவத்தை உடையவன் சிவன் என்பதால் அவனை மெய்த்தவத்தான் எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். மிகத் தெளிவானவற்றைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு "உள்ளங்கை நெல்லிக்கனி" என்ற பழமொழியைக் குறிப்பிடுவர். இறைவனை நாடிக் கண்டுகொண்ட பின்பு வேறு எவ்வித ஆசாபாசங்களும் இல்லாமல் மோன சமாதியிலே இருந்த தெய்வீக அனுபவத்தை திருமந்திரம் குறிப்பிடுகிறது. உண்மைத் தவத்தில் விளங்கும் சிவபெருமானை விரும்பும் சாதகர் ஒருவருக்கு உள்ளங்கையில் பொருந்திய நெல்லிக்கனி போல இறைவன் விளங்குவான். தூய்மையானவனும் தூய்மையான நெறியாயும் விளங்கும் தேவதேவனை விரும்பி அவனிடம் பொருந்தி உலகினைக் கடந்து நின்றேன் எனத் திருமூலர் கூறுகின்றார்.

"மெய்த்தவத்தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக்கனி யொக்குஞ்
சுத்தனைத் தூய்நெறியாய் நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந்தொழிந்தேனே"

(தொடரும்...

## சொல்லமுதாய் இனிக்கும் தூய ஞானச்சுடரே வாழ்க



நல்ல பல கருத்துடனே ஞானரசம் ததும்பிடும்
நானிலமே போற்றிடும் கவிதை கட்டுரையுடனே
இல்லமது சிறக்கவே எம்மிதயமது களிக்கவே
ஈசனார் திருமகனாம் ஈராறு கரமுடையோன்
சொல்லமுதமாய் இனிக்கும் தூய ஞானச்சுடரே நீ
சோதிமயமாய் ஒளிவீசி எம்கரங்களில் தவழவே
மெல்ல வெளிவந்தே மேதினியோர் போற்றி நிற்க
மாண்புடனே பல்லாண்டு வாழியவே! வாழியவே!!



கண்ணியமும் கட்டுரையும் கவிதையும் பலதாங்கி
காலத்தின் தேவைதனைக் கருத்துடனே நிலைநிறுத்தி
எண்ணிலாக் கருத்துரைகள் ஏற்றமுடன் தந்திடும்
ஏரம்பன் தம்பியவன் முருகன் திருவருளால்
மண்ணிலே நல்லபடி மாண்புடனே வெளிவந்து உன்
வருகையால் எம்முள்ளம் குதூகலம் கொள்ளுமே
புண்ணியஞ் செய்ததனால் புத்தகமாய்க் கரங்களிலே
பூப்போல நீயிருக்கப் பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

-இராசையா ஸ்ரீதரன்-

நேர்மையாக முயன்று கொண்டிருந்தால் நிச்சயம் நிறைவில் வெற்றிதான்.

உ

(தொடர்ச்சி...

# ௨௦௧௦ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| உ. ரமணன் | இருபாலை தெற்கு | 2000. 00 |
| G. மனோகரன் | லண்டன் | 100பவுண்ஸ் |
| மகேஸ்வரி வேலாயுதம் | கொழும்பு | 2000. 00 |
| J. மாதினி | கொழும்பு- 6 | 1000. 00 |
| தங்கராசா அன்னபூரணம் | கொடிகாமம் | 2000. 00 |
| வே. பாண்டியர் | கைதடி | 5000. 00 |
| பண்டிதர் சரவணமுத்து சுதுமலைமேற்கு | மானிப்பாய் | 10000. 00 |
| ரமணிமாலா சிந்துரா (கனடா) | கொக்குவில் மேற்கு | 30000. 00 |
| குணசிங்கம் தர்சன் | மானிப்பாய் | 10000. 00 |
| தாட்சாயிணி செல்வமாணிக்கம் | உடுப்பிட்டி | 2மூடை அரிசி, 2000. 00 |
| திரு தர்மகுலேந்திரன் | பருத்தித்துறை | 1மூடை அரிசி, 10k. பருப்பு |
| சே. இராஜதிலகம் | இடைக்காடு | 5000. 00 |
| திருமதி S. நேசரத்தினம் | லண்டன் | 10000. 00 |
| N. ஜெயக்குமார் | லண்டன் | 10000. 00 |
| வே. தங்கவேலாயுதம் | உடுப்பிட்டி | 10000. 00 |
| கதிர்காமநாதன் காந்தரஞ்சனா | அச்சுவேலி | 5000. 00 |
| ந. நல்லலிங்கம் | வல்வெட்டி | 10000. 00 |
| திரு கமலக்கண்ணன் | கொம்மந்தறை | 10000. 00 |
| பொன்னையா கிருபாகரன் | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| அமுதா புலேந்திரன் | வல்வை (ஜேர்மனி) | 5000. 00 |
| ஞா. மோகனகுமார் குடும்பம் | வல்வை (லண்டன்) | 12000. 00 |
| க. அரியரெத்தினம் (கதிர் தொ.தொ.நி) | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| யோ. நந்தன் | கோண்டாவில் | 16200. 00 |
| நகுலன் சுரேஸ் உடுப்பிட்டி வீதி, | தொண்டைமானாறு | 1மூடை அரிசி |
| திருமதி சுவாமிநாதன் | ஆவரங்கால் | 3000. 00 |
| க. குணாளன் | மாவிட்டபுரம் | 2000. 00 |
| பொ. மகேஸ்வரன் | வல்வெட்டி | 5000. 00 |
| பா. அர்ச்சனா | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| யாதவன் கர்ஷன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| ஐ. காளிங்கநடனம் | கொக்குவில் | 2000. 00 |

குறைவாகப் பேசி நிறைய வாசித்தறி.

| | | |
|---|---|---|
| நா. ராஜசுந்தரம் | அராலி மத்தி, வட்டுக்கோட்டை | 1000. 00 |
| முத்தையா சிவகுணநாதன் | உரும்பராய் | 5000. 00 |
| சாவித்திரி அருணாசலம் | தும்பளை, பருத்தித்துறை | 7000. 00 |
| ந. சிவராஜா குமரக்கோட்டம், | கோண்டாவில் | 500. 00 |
| திரு. தியாகலிங்கம் | தொண்டைமானாறு | 5000. 00 |
| மோ. சேதனன் (க. கமலினி, மிதுளன்) இமையாணன் | உடுப்பிட்டி | 2000. 00 |
| Dr. P. சிவபாலன் | கொழும்பு | 5000. 00 |
| த. மயூரன் | கொழும்பு | 5000. 00 |
| க. தம்பிராசா | அவுஸ்திரேலியா (நீர்வேலி) | 5000. 00 |
| N. வரதீசன் | கொழும்பு | 5000. 00 |
| க. அப்பாத்துரை | உடுவில் | 5000. 00 |
| நா. குணரத்தினம் | புன்னாலைக்கட்டுவன் | 15000. 00 |
| இ. சிவயோகநாதன் சொகிசாபுர, | மொறட்டுவ | 3000. 00 |
| திருமதி சிவபாலன் | கொழும்பு | 500. 00 |
| த.ந. பஞ்சாட்சரம் | நீர்வேலி | 2000. 00 |
| V.R. ரஞ்சன் B.A. தம்பி ஒழுங்கை | யாழ்ப்பாணம் | 70k அரிசி |
| கோ. பத்மநாதபிள்ளை | வாசல ரோட், கொட்டகெனா | 5000. 00 |
| சுப்பராங் தொலைத் தொடர்பு நிலையம் | கதிரிப்பாய் | 1மூடை அரிசி |
| திருமதி பாக்கியரெத்தினம் நினைவு | | 2000. 00 |
| க. நடராசா | பத்தமேனி | 1மூடை அரிசி 2000. 00 |
| K. சிவசோதி | கோண்டாவில் கிழக்கு | 1மூடை அரிசி |
| S. பத்மலிங்கம் வசந்தம் | ஆவரங்கால் | 5000. 00 |
| செல்வி திலகவதி பெரியதம்பி | பருத்தித்துறை | 5புட்டி அரிசி, 10k பருப்பு, 1புட்டி சௌவரிசி |
| செ. குகதாசன் | ஆவரங்கால் | 3000. 00 |
| திருமதி வாணிதாசன் | வல்வெட்டி | 1500. 00 |
| ம. ஸ்ரீதரன் | வல்வெட்டித்துறை | 25000. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | கனடா | 20000. 00 |
| வைரமுத்து ஜெயச்சந்திரா | ஊரிக்காடு | 5000. 00 |
| ஐ. சத்தியமூர்த்தி தம்பாலை, | அச்சுவேலி | 5000. 00 |
| நவரத்தினம் தேவராசா | ஆவரங்கால் | 5000. 00 |
| செ. முத்துக்குமாரசாமி | உடுப்பிட்டி | 1000. 00 |
| சு. சரஸ்வதி | உடுப்பிட்டி | 1000. 00 |
| நாகரத்தினம் சிவகுமார் | அச்சுவேலி | 5000. 00 |
| நடராசா தங்கேஸ்வரன் | அல்வாய் கிழக்கு | 1000. 00 |
| த. சிவகுருநாதன் மூலம் மங்களேஸ்வரன் குடும்பம் | லண்டன் | 15000. 00 |
| பொன்னம்பலதாசன் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| சி. ஐங்கரன் | கொக்குவில் | 10000. 00 |

(தொடரும்...


அறியாமையில் இருந்து கேடு விளைகிறது.

உ

# ஆறுமுகம் பெருமானும்

நீர்வைமணி அவர்கள்

கலியுகவரதனாகிய ஆறுமுகப்பெருமான் ஆன்மாக்களுக்கு அருள்புரிய வேண்டி ஆறு கார்த்திகைப் பெண்கள் மகிழ ஆறு திருமேனிகொண்டு அவதரித்தார். அண்டினோர்க்கு அருள்புரிய வேண்டி ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, ஸ்வாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை ஆகிய திவ்விய சேத்திரங்களில் கோவில் கொண்டு எழுந்தருளினார்.



மண்ணுலக மாந்தர் தம் வாழ்விற்கு ஆதாரமான அறுவகைச் சிறப்புக்களையும் தெய்வீகமாகக் கொண்டு அவதரித்த ஆறுமுகப்பெருமான் வைதாரையும் வாழ வைக்கும் தெய்வமாகக் கலியுகத்திலே ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றார்.

இந்த விதத்திலே வாழ்விற்கு ஆறின் தேவைகள், ஆறின் சிறப்புக்கள், ஆறு ஆறாக நம் வாழ்வினுடன் ஒன்றியிருக்கும் பல்வேறு விடயங்களையும் நாம் நன்கு அறிந்து, தெரிந்து அனுபவிப்பதற்கு நம் வாழ்க்கையை வழிநடத்தும் ஆறுகள் எவை எவையெனத் தருவதில் நாமும் முருகப்பெருமான் அருளைப் பெறுவதுடன், இதனைப் படிப்போரும் அவனருள்பெற்று நல்வாழ்வு வாழப் பயனுடைத்தாய் இருக்குமென எண்ணி ஆறின் சிறப்புக்களைத் தொகுத்துத் தருகின்றோம்.

ஆறுமுகப் பெருமானையும் ஆறின் தனிச்சிறப்பையும் மனதிற்கொண்டு வழிபட்டு நற்பேறு நாடுவோம்.

க. *சமயம் ஆறு:-*

சைவம், வைஷ்ணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம்.

உ. *அத்துவாக்கள் ஆறு:-*

மந்திரம், வன்னம், பதம், தத்துவம், புவனம், கலை.

ங. *ஆதாரங்கள் ஆறு:-*

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை.

ச. *அரச அங்கங்கள் ஆறு:-*

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

# அறுவகைச் சிறப்புக்களும்

ஏமத்துவாழ்வடஞ்ஞானம்

உள்ளமும் உணர்வும் ஒன்றுபடுவதே உன்னத வாழ்வு.

**5. அந்தணத்தொழில் ஆறு:-**

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல். ஏற்றல், ஈதல்.

**6. அகச்சமயம் ஆறு:-**

சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம்.

**7. அகப்பாட்டுச்சமயம் ஆறு:-**

பாடாணவாத சைவம், பேதவாதசைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராத்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம்.

**8. எழுத்துக்கள் ஆறு:-**

வல்லினம் 6, மெல்லினம் 6, இடையினம் 6

**9. இறைவனின் குணங்கள் ஆறு:-**

சுவதந்திரத்வம், சர்வஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்த சக்தி, அநந்தசக்தி. ஐஸ்வர்யம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்.

**10. சக்திகள் ஆறு:-**

பராசக்தி, ஆதிசக்தி. ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி, குடிலாசக்தி.

**11. வேதாங்கங்கள் ஆறு:-**

சிட்சை, வியாகர்ணம், சந்தஸ், நிருத்தம், யோதிஷம், கல்பம்.

**12. அறிவு ஆறு:-**

சுவையறிவு, ஊறு அறிவு, ஒளிஅறிவு, ஓசைஅறிவு, கந்த அறிவு, பகுத்தறிவு.

**13. இரசங்கள் ஆறு:-**

இனிப்பு, கசப்பு, புளிப்பு, உறைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு.

**14. ருதுக்கள் ஆறு:-**

வசந்தருது, கிரீஸ்மருது, வர்சருது, சரத்ருது, ஏமந்தருது, சிசிரருது.

**15. பருவங்கள் ஆறு:-**

கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில், முதுவேனில்.

**16. சக்கரவர்த்திகள் ஆறுவர்:-**

அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், காத்தவீரியன்.

**17. சாஸ்திரங்கள் ஆறு:-**

வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை.

**18. பகைகள் ஆறு:-**

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

## வரவும் செலவும்

வியாபாரி ஒருவன் கடையை மூடும்போது, வரவு செலவு பார்த்து இருப்புத்திட்டம் காட்டுகிறான். அதேபோல் நீயும் கண்ணை மூடி உறங்குமுன் நீ செய்த புண்ணிய பாவங்களை நிறுத்துப்பார்த்து புண்ணியத்தை இருப்புக் காட்டுவாயாக.

-வாரியார் சுவாமிகள்-

**இன்பமான செயல் இதமாகவும் இருக்க வேண்டும்.**

திருவாசகம்

உ



# கீர்த்தித் திருவகவல்

## சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை தில்லையிலருளிச் செய்யப்பட்டது நிலமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
[யாழ்ப்பாணம், காரைநகர்]

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியு மழித்தும்
என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பு
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியுங்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்

**பதவுரை:**

தில்லை மூதூர் ஆடிய திருவடி- தில்லையென்னும் பழமையாகிய ஊரின் கண்ணுள்ள திருச்சிற்றம்பலத்தில் ஐந் தொழில் நடனஞ்செய்கின்ற அழகிய திருவடி கள், பல் உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி- பலவகைப்பட்ட உயிர்கள் எல்லாவற்றுள்ளும் பொருந்தப்பெற்றனவாகி, எண் இல் பல் குணம் எழில்பெற விளங்கி- அளவில்லாத பல அருட் பண்புகளும் எழுச்சிபெற விளங் கப்பெற்று, மண்ணும் விண்ணும் வானோர் உலகும்- மண்ணுலகிலும் விண்ணுலகிலும் அதற்கு மேற்பட்ட நான்முகன் முதலிய தேவத்தலைவர்களது உலகங்களிலும், துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்- செறிந்த கலையறிவினைத் தோற்றுவித்தும் பின்னர் அதனை அழித்தும், என்னுடைய இருளை ஏற துரந்தும்- என்னுடைய ஆணவ இருளை முழுவதும் போக்கியும், அடியார் உள்ளத்து அன்பு மீதூர- அடியவர்களது உள்ளத்திலே அன்பு மேம்படுதலால், குடியா கொண்ட கொள்கையும் சிறப்பும்- அவர் உள்ளத்தையே தமது இருக்கையாகக் கொண்ட கோட்பாடும் தலைமையும்.

எவரையும் மனம் நோகப் பேசாதே.

மூதூர்- பழமையாகிய ஊர். பண்டு தொட்டுத் தில்லை மூதூரின்கண் இறைவன் திருக்கூத்து இயற்றுதலின் 'தில்லை மூதூராடிய திருவடி' என்றார். எல்லாவுயிர் களுள்ளும் இறைவன் பொருந்தியிருந்து அவற்றை இயக்குதலின் 'பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி' என்றார். பயிலுதல்- பொருந் துதல். இறைவன் உயிர்களுக்கு அருளும் அருட்பண்பு அளவற்றதாகலின் 'எண்ணில் பல்குணம்' என்றார்.

"ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதிமாண்பும்
கேட்பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா" (தே.312:4)

எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியவாறுங் காண்க. இனி, எண்ணில் பல்குணம் என்பதற்கு, அளவைகளுக்கு அடங்காத தன்வயத்தனாதல் தூயவுடம்பின னாதல் இயற்கையுணர்வினனாதல் முற்று முணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை என்னும் எண்வகைப் பட்ட குணங்கள் எனினுமாம். "எல்லையிலா தன எண்குணமானவை" (திருவாசகம், திருப் படை 7) என வருதலுங் காண்க.

விண்- தேவருலகு. மண்ணுலகமும் விண்ணுலகமும் கூறப்பட்ட பின்னர் வானோர் உலகு என்று கூறியது நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய கடவுளர்கள் பொருந்தும் உலகங்களைக் குறித்தது.

கல்வியென்றது கலையறிவினை, கலைகள்: நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீத கலை என்னும் ஐந்துமாம். இவ்வைந்து கலை களிலும் பதினொரு மந்திரங்களுள்ளும் எண் பத்தொரு பதங்களுள்ளும் ஐம்பத்தொரு அக் கரங்களுள்ளும் இருநூற்றிருபத்துநான்கு புவனங்களுள்ளும் முப்பத்தாறு தத்துவங்களுள் ளும் எவ்வெவை எவ்வெக் கலைகளுக்கு உரியனவோ அவ்வவற்றை அவ்வக்கலை களில் உள்ளனவாகச் சோதித்தறிதல் கலா சோதனை எனப்படும். இதனையே 'துன்னிய கல்வி தோற்றியும்' என அடிகள் அருளிச் செய்தனர். பின்னர் அக்கலைகளில் உயிர் களுக்குப் போகங்களை ஊட்டி அதன்பின் அக்கலைகளைச் சங்கார கிரமத்தில் ஒடுக்கி அருளுவதனை 'அழித்தும்' என அடிகள் அருளிச்செய்தனர். இது கலாசுத்தி எனப் படும். இங்ஙனம் கலைகளைத் தோற்றுவித் தலும் அழித்தலும் உயிர்கள் வீடுபேறு அடைவதற்கு ஏதுவாகும்.

என்னுடை இருள் என்றது என் னுடைய அறிவை மயக்குகின்ற ஆணவ வல்லிருளை இறைவன், அருளுபதேசத் தினால் ஆணவ இருளின் வலியை முழு வதும் கெடுப்பானாதலின் 'இருளை ஏறத் துரந்தும்' என்றார். ஏற- முழுவதும்.

உயிர்கள் எல்லாவற்றுள்ளும் இறை வன் உளனாயினும் தன்பால் அன்பு மீதூர்ந்த அடியாருள்ளத்தில் இடையறாது வெளிப்பட்டு அருளுவானாதலின் 'அடியா ருள்ளத் தன்பு மீதூரக் குடியாக் கொண்ட கொள்கையும்' என்றார். மீதூர்தல்- மேன்மேல் வளருதல். "துன்பமே மீ தூரக் கண்டும்" (நாலடி 60) என்புழிப்போல. மீதூரும் அன்பு என்றது சிவப் பேற்றிற்குரிய அயரா அன்பை. "அயரா வன்பி னரன்கழல் செலுமே" என்றார் சிவஞான போதத்தும். குடி- குடியிருப்பு. கொள்கை- கோட்பாடு, சிறப்பு- தலைமை. "துனையுநர் விழைதக்க சிறப்புப் போல்" (கலி 141:1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

மன்னு மாமலை மகேந்திரம் அதனில்- நிலைபெற்ற பெரிய மலையாகிய மகேந்திரத்திலிருந்து, சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்- முன்னொருகால் உமைக்குச் சொன்ன ஆகம நூலை மீட்டும் உலகினர் பொருட்டு வெளிப்படுத்தியருளியும்.

மகேந்திரமலை பொதிகைமலைக்கு தெற்கேயுள்ளது எனச் சிவதருமோத்தரம் கூறும். மகேந்திரமதனிற் றோற்றுவித்தருளியும் என இயையும். சொன்ன ஆகமம் என்றது இறைவன் உமாபிராட்டிக்கு உபதேசஞ் செய்த அறிவு நூலாகிய ஆகமத்தினைக் குறிப்பதாகும். தோற்றுவித்தருளியுமென்றது முன்னொருகால் இறைவன் ஆகம நூற் பொருளை உமையம்மையார் கேட்ப உப தேசஞ்செய்யும்போது அவற்றைக் கருத்தூன் றிக் கேளாமையால் இறைவன் வெகுண்டு எம்மையகன்று வலைஞன் மகளாகப் பிறந் திடுதி என உமையம்மையாரைச் சபித்தனர். அதனை அறிந்த மூத்த பிள்ளையார் இறை வன் கையிலிருந்த ஆகமத்தினை எடுத்துக் கடல்மீது எறிந்தனர். இளைய பிள்ளையாரும் அவ்வாகமங்களிற் சிலவற்றைப் பறித்துக் கிழித்தனர். அதனைக் கண்ட இறைவன் இளைய பிள்ளையாரை மதுரை மன்னும் உயர்குல வணிகனுக்கு ஒரு மூங்கைப் புதல் வனாகப் பிறத்தியெனவும், பிள்ளையார்கள் இருவரையும் உள்ளே புக விடுத்த நந்தி தேவரை நீ கடலிற் சுறவு மீனாகத் தோன்றி அவ்வாகம நூலைத் தாங்கி உலவுதி என வும் சாபமிட்டனர். சாபம் எய்திய மூவரும் நடுங்கி இறைவனை வணங்கிச் சாபவிடுதி வேண்டி நின்றனர். இறைவன் அவர்களுக்குச் சாபம் நீங்கும் ஆற்றினையும் கூறியருளினர். கூறியவாறே இறைவன் வலைஞன் வேடத்திற் றோன்றி, வலைஞர்களுக்கு அலக்கண் செய்த சுறவினைப் பிடித்து மடுத்து வலை ஞர் மகளான உமாபிராட்டியை மணஞ்செய் தருளினன். அப்போது சுறவினிடத்து எடுத்த ஆகமநூலை மீட்டும் மகேந்திர மலையில் எழுந்தருளியிருந்து உலகினர்க்குதவுமாறு வெளிப்படுத்தியருளியமையைச் 'சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்' என்பது குறிப்பதாகும்.

கல்லாடத்து கலந்து இனிது அருளி- கல்லாடம் என்னும் திருப்பதியிலே அம்மை வழிபட்ட திருவுருவிற் கலந்து இனிது எழுந் தருளி, நல்லாளோடு நயப்பு உறவு எய்தியும்- அவ்வுமையம்மையாரோடு பேரின்ப நட்புக் கொண்டும்.

கல்லாடம்- ஒரு சிவதலம். நயப்பு- இன்பம். உறவு- நட்பு.

(தொடரும்...

## பற்றில்லாத புண்ணியத்துக்கும் பயன் இல்லை


புண்ணியம், பாவம் இரண்டுமே பிறவியை அளிப்பன. கர்ணன் தான தர்மங்கள் செய்யும்போது பயன்கருதியே செய்தான். கண்ணனுக்குத் தான் செய்த புண்ணிய பலன் அனைத்தையும் தானம் செய்தபோது பற்றில்லாமல் அதாவது எதையும் எதிர்பார்க்காமல் செய்தான். இதனால் இந்தத் தானத்துக்கு எந்தப் பலனும் விளையவில்லை. புண்ணியம் செய்தவர் மேலான பிறவியையும், பாவம் செய்தவர் கீழான பிறவியையும் அடைவார்கள். எந்தப் புண்ணியமும் விளையாத நிலையில் கர்ணன் இறைவனுடைய திருவடியை அடைந்தான்.

**சுயநலத்தினால்த்தான் மக்கள் துக்கப்படுகிறார்கள்.**




## பெரியபுராணக் கதை

சேர நாட்டில் அவிநாசி என்று ஓர் ஊர் உள்ளது. அந்த ஊரில் சிவன் திருக்கோவிலுக்குச் செல்லும் வழியில் அந்தணர்கள் வாழ்ந்து வந்தனர். அங்கு வாழ்பவர்களுக்கு குடிப்பதற்கும் மற்ற பயன்பாட்டுக்கும் உதவுவதற்காக பொதுக்குளம் ஒன்று இருந்தது. சிறியவர், பெரியவர் என்று அனைவருமே அந்தக் குளத்தில்தான் குளிப்பதை வழக்கமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். அந்தக் குளத்தில் ஓர் பயங்கரமான முதலையும் இருந்தது. அதனால் ஊர் மக்கள் யாவரும் பயந்தனர். அந்தக் குளத்தை பயன்படுத்துபவர்களையும் எச்சரிக்கையாக இருக்கும்படி கூறினர். அந்த அந்தணர் வீதியிலே மறையன் என்ற வேதியரும், அவருக்கு எதிர் வீட்டில் வேள்விசதுரன் என்ற வேதியரும் வசித்து வந்தனர். மறையனுக்கும் வேள்விசதுரனுக்கும் முறையே செல்லன், நல்லன் என்ற ஐந்து வயதுக் குழந்தைகள் இருந்தனர். இருவருக்கும் எதிர் எதிர் வீடு என்பதால் எப்பொழுதும் செல்லனும், நல்லனும் கூடியே விளையாடிக்கொண்டு இருப்பார்கள்.



ஒரு சமயம் விளையாட்டில் வசப்பட்டு செல்லனும், நல்லனும் அந்த முதலை உள்ள குளத்தருகே சென்று விட்டனர். அங்குள்ளோரும் அந்த விபரீதத்தை அறியாமல் அவரவர் பணி நிமித்தமாக சென்றுகொண்டிருந்தனர். செல்லனும், நல்லனும் குளத்தில் இறங்கினர். செல்லன் கரையின் அருகில் இருக்க நல்லன் முதலில் நீரில் இறங்கினான். நல்லன் தண்ணீரில் இறங்கியதும் அவனை அதில் இருந்த முதலை கவ்வியது. முதலை கவ்வியதில் நல்லன் கதறிச் சத்தமிட ஆரம்பித்தான். அதைக்கண்டு செல்லனும் கூக்குரலிட்டு அழுதான். அங்கு சென்றவர்கள் செல்லனை ஓடிவந்து தூக்கினர். ஆனால், நல்லனை அதற்குள் முதலை விழுங்கிவிட்டது. செல்லனைக் காப்பாற்றியவர்கள்

அவனை அவனது இல்லத்தில் விட்டுவிட்டு நடந்த துயர சம்பவத்தை வருத்தத்துடன் நல்லனின் வீட்டில் தெரிவித்தனர்.

அதைக்கேட்டு வேள்விசதுரனும் அவனது துணைவியாரும் கதறி அழுதனர். இச்சம்பவம் நடைபெற்று ஓராண்டு கழிந்தது. அப்பொழுது மறையன் தனது மகனான செல்லனுக்கு பூணூல் போடும் விழா எடுக்க முற்பட்டான். எதிர்பாராத விதமாக செல்லனுக்கு பூணூல் இடும் நாள் நல்லன் இறந்த நினைவு நாளாக அமைந்தது. அதனால் அன்று செல்லன் வீட்டில் மேளம், நாதஸ்வரம் போன்ற மங்கல ஒலி கேட்டது. அதற்கு எதிர் வீடான நல்லன் வீட்டில் அழுகுரல் கேட்டது.

அப்பொழுது சுந்தரர் என்னும் கடவுளின் நண்பர் அந்த ஊரில் உள்ள சிவபெருமானாகிய அவிநாசி இறைவனை வணங்க அவ்வழியே வந்தார். நடந்த நிகழ்வுகளைக் கேட்டறிந்தார். மேலும், வேள்விசதுரன் சிவனடியார்மீது மிகுந்த அன்பு உடையவன். சுந்தரர் வந்திருப்பதை அறிந்து வேள்விசதுரன் தனது துணைவியுடன் வந்து அவர் அடிகளில் விழுந்து வணங்கினார். வேள்விசதுரனின் நிலைகண்டு வருந்திய சுந்தரர், "முதலை விழுங்கிய குளம் எங்கு உள்ளது" என்று கேட்டார். வேள்விசதுரன் சுந்தரரை அழைத்துச்சென்று அந்தக் குளத்தைக் காட்டினான். குளம் அந்த ஆண்டின் கடும் கோடையினால் நீரில்லாமல் காய்ந்திருந்தது. அந்த முதலையும் காணாமல் போயிற்று. சுந்தரர் வேள்விசதுரனைப் பார்த்து, "நீங்கள் கவலைப்படாதீர்கள். நல்லனை உயிர்ப்பித்து உங்களிடம் தருகிறேன்" என்று வாக்களித்தார்.



இறந்த மகனை எப்படி இவர் கொண்டு வருவார் என அனைவரும் வியப்படைந்தனர். ஏதோ ஆறுதல் கூறுகிறார் என்று மறையன் நினைத்தான். "அவிநாசியாகிய 'திருப்புக்கொளியூர்' என்ற இவ்வூரில் அருள்புரிய வீற்றிருக்கும் இறைவனே! "உனது திருக்குளத்துத் தண்ணீர் பட்டால் பாவங்கள் நீங்கும் புண்ணியம் சேரும் என்பார்கள். எனக்குச் சேவை புரியும் வேள்வி சதுரனின் மகன் நல்லன் செய்த தவறு யாது?" "பாவங்களை நீக்கி நீண்ட ஆயுளைத் தரும் புனித குளம் அச்சிறுவனை ஏன் விழுங்கியது? எனவே எமனையும் முதலையையும் அந்த மகனைத் திரும்பத்தர நீங்கள் ஆணையிடுங்கள்" என்று மனமுருகிப் பாடி வேண்டினார். தனது தோழனான சுந்தரர் வேண்டிக்கொள்ள சிவபெருமான் திருவுள்ளம் இரங்கினார். வரண்டு இருந்த குளம் பெருத்த பேய் மழை பெய்து உடனே நிறைந்தது. தண்ணீர் மிகுந்த அந்தக் குளத்தில் பார்ப்பதற்கு பயங்கரமான முன்பு

இருந்த முதலையும் தோன்றியது. தோன்றிய முதலை அகலமாக வாய் திறந்தது. அதைக் கண்டு இப்பொழுது யாரை விழுங்கப் போகிறதோ என்று அங்குள்ளோர் பின் சென்றனர். கரையோரமாக வந்து நல்லனை தனது வயிற்றிலிருந்து வாய்க்கு கொணர்ந்து வெளியே விட்டது. நல்லன் தனது தாய் தந்தையைக் கண்டு "அப்பா, அம்மா" என்று ஓடி வந்து கட்டிக்கொண்டான். நல்லனைக் கண்டு பெற்றோர்கள் மகிழ்ந்தனர். நல்லன் செல்லனைப் போலவே ஓராண்டு வளர்ச்சியும் பெற்றிருந்தான். சுந்தரரின் திருவடியில் குடும்பத்துடன் விழுந்து நன்றி பாராட்டினான் வேள்விசதுரன்.

சிவபெருமானுக்கு தனது வணக்கத்தைத் தெரிவித்து அவரின் கருணை அளப்பரியது என்பதை உணர்ந்தார் சுந்தரர். தானே முன்னிருந்து நல்லனுக்கு பூணூல் விழா மேற்கொள்ளச் செய்தார். இருவரின் (மறையன்- வேள்விசதுரன்) வீட்டிலும் மங்கல ஒலி பெருகியது. அனைவரும் சிவனருளால் ஆனந்த வெள்ளத்தில் திகழ்ந்தனர்.

# செல்வச் சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை— 16

**பல்லவி**

தஞ்சமெனத் தாளைச் சரண்புகுந்தேன் முருகா!
அஞ்சலென் றருளாயோ? அபயகரம் நீட்டி

**அநுபல்லவி**

வஞ்சியர்கள் சூழ வடிவேல் வருமழகை
நெஞ்சகம் நிறைவாக நிகழ்த்திடச் சொன்ன கந்தா

**சரணம்**


மஞ்சையில் மாதரொடு மகிழ்வுடனே வரும்வேளை
வஞ்சகன் தலைகள் கிள்ளி எறிடக்கண்டு அஞ்சி
கிஞ்சித்தும் கல்வியிலா மூடனென் செய்வனென்றே
கஞ்சமலர் பணிந்த கதிர்காமற் கருளியவா

கெஞ்சியோர் பிராமணனால் செய்யவுத் தரவுகேட்க
அஞ்சிடா தாற்றிடுநீ ஆட்கொளா டாக்களாக
பஞ்சின்மெல் வழிநடந்து பத்தாம்நாள் முடிப்பனென்றே
செஞ்சொல் வருள்தந்த செல்வச்சந் நிதியானே! [தஞ்ச]

-இராசையா குகதாசன்-

மிகச் சிறந்த மனிதன் அன்புள்ளவன்.

உ




# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் மற்றும் சிவன் தேவஸ்தானங்களுக்கு ஒரு பகிரங்க விண்ணப்பம்


**ம. திருக்குமரன்** அவர்கள்

இலங்கைத்தீவின் கலை வரலாற்றைக் கற்கக்கூடிய தரப்பினர் அதன் ஒரு பெரும் பகுதியாக பௌத்த விகாரைகளில் உள்ள சுவரோவிய மரபுகளைப் பற்றிப் பேசுவர். திவங்கப்படிம வீட்டிலும், தெகல்தொருவாவிலும், கோத்தமி விகாரையிலும் என ஒரு நீண்ட பாரம்பரியத்தைப் பேசுவதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கே இருக்கிறது. அவற்றின் முதன்மையை அறிந்து அதனை அவர்கள் காக்கவும் செய்கின்றனர். சுமார் 800 வருடங்களுக்கு முற்பட்ட கோயிற் சுவரோவியங்களும் அதற்கு முற்பட்டதும் பிற்பட்டதுமான சுவரோவியங்களுமாக பரந்த காலத்தால் முற்பட்ட சுவரோவியங்கள் இலங்கைத் தீவின் ஒரு பகுதியில் பாதுகாக்கப் படுகிறது. அவற்றைக் காணவும்- ஆய்வு செய்யவுமென ஆயிரக்கணக்காக மக்கள் ஆண்டுதோறும் அவை அமைந்துள்ள பகுதிகளுக்கு வருகிறார்கள். இந்தப் பண்டைய அமைவுகளால் அப்பிராந்தியங்கள் பெருமையடைவது மட்டுமன்றி பொருளாதார ரீதியாகவும் ஏற்றம் பெறுகின்றன. சிகிரியாவைச் சுற்றியுள்ள பிராந்தியங்கள் அதனைக் காணவரும் ஆயிரக்கணக்கான மக்களினால் பெருமளவிலான நிதியீட்டத்தினைப் பெறுகிறது.



நமது பெருமை மிகுந்த மரபுரிமைகள்

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் மற்றும் சிவன் தேவஸ்தானங்களுக்கு ஒரு பகிரங்க விண்ணப்பம்


இதுபற்றி எல்லாம் அறிந்து இதனையெல்லாம் கரைத்துக் குடித்துப் பரீட்சைகளில் மீள அவற்றை வாந்தியெடுத்து 'பெருமைப்படத்தக்க' பரீட்சைப் பெறுபேறுகளை ஈட்டும் படித்தவர்கள் எனத் தற்பெருமைபேசும் யாழ்ப்பாணத்தவர்கள் ஏன் எமது சுவரோவிய மரபு பற்றி நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை? எமது மரபினைத் தேடிச்செல்ல பாதுகாக்க ஏன் எம்மால் முடியவில்லை?




வல்வை சிவன் தேவஸ்தானத்தின் கோபுர வாசலின் நடுவேயுள்ள கீழ் விதானத்தில் உள்ளும் புறமும் கீறப்பட்டுள்ள சித்திரங்கள்



உண்மை பேசுதல் ஞான வாழ்வின் ஆரம்பம்.



வல்வை அம்பாள் தேவஸ்தான கோபுர வாசலின் முன்பாக உள்ள மண்டப விதானத்தில் வரையப்பட்டுள்ள சித்திரங்களுள் சில



சினம்போல் பகைவர் இவ்வுலகில் இல்லை.

ஒருவேளை இப்பந்தி தேவையற்றுப் புலம்புகிறதா? எங்களிடம் என்ன இருக்கிறது? என்று கேட்கிறீர்களா? கலாகேசரி தம்பித்துரை பிற்கால யாழ்ப்பாணச் சுவரோவியங்கள் என ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் மாவிட்டபுரம் முருகன் கோயிலிலும், சட்டநாதர் சிவன் கோயிலிலும், யாழ்ப்பாணம் பாங்சால் வீதியில் உள்ள கிட்டங்கிகளிலும் இருந்த ஓவியங்கள் சிலவற்றினது புகைப்படங்களைப் பிரசுரித்துள்ளார். தென்னிலங்கையுடன் ஒப்பிடத்தக்க பழையது அல்லாது விடினும்- (இதற்கு போர்த்துக்கேயர் கால சைவக்கோயில் இடிப்புகளும் ஒரு பகுதி காரணம்) எம்மிடம் தப்பிப்பிழைத்த பழையவையாக இருந்த இவற்றில் ஒன்றுகூட எம்மிடம் இன்றில்லை. அவ்வளவிற்கு எமது வரலாற்றுப் பண்பாட்டு- கலை உணர்வுகள் உள்ளன. சிறுபிள்ளைகளை வருத்தி துஷ்பிரயோகம் செய்யும் ஐந்தாமாண்டு பரீட்சையைக் கொண்டாடும் கல்வியறிவுள்ள சமுகம்தானே நாங்கள்- இதற்குமேல் ஏன் யோசிக்கப்போகிறோம்?

பழையவற்றை உடைப்பது- அழிப்பது- வெள்ளை பூசி மறைப்பது என அற்புதமான கடந்தகால தடயங்களைக்கொன்று மூன்றாம் தரத்து இன்றைய உற்பத்திகளை வாங்கி மாட்டிக்கொள்ளும் நாம் இதுபற்றி எல்லாம் யோசிக்கப்போவதில்லைதான். சரி அவையெல்லாம் மிகைப்பழையவை இல்லாவிடினும் எமது கலை- பண்பாடு- சமூக வரலாற்றின் ஒரு பெரும் பகுதிகள். இதனைக் காணவும், பேசவுமென இவ்விடயங்களை நோக்கி வந்திருக்கக்கூடிய பெருமையையும்- தற்சிறப்புக்கான வாய்ப்பையும் நாமே அழித்துவிட்டிருக்கிறோம்.

இவ்வாறு பேசும்போது, யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழக சித்திர வடிவமைப்பு மாணவரானா க. ஜெயசீலன், சுமார் 50 வருடங்களிற்கு முற்பட்ட சுவரோவியங்களைத் தமது இறுதிவருட ஆய்விற்கூடாக வல்லை ஶ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலிலும், சிவன் தேவஸ்தானத்திலும் இனங்கண்டுள்ளார். இதுவரைக்கும் எம்மிடமுள்ள, எஞ்சியுள்ள கோயிற் சுவரோவியங்களில் பழையவை இவைதான். அந்தப் பெருமையை இக்கோயில்கள் இரண்டும் இன்று தம்வசமாயிருக்கின்றன. இவை ரெம்பரா (Tempara) எனப்படும் முறைக் குட்பட்டவையாகவும் பழைய இயற்கை வர்ணப் பிரயோகம் உடையவையாகவும் இணங்காணப்படுகின்றன. இதனை "நாராயண சாமி" என்பவர் வரைந்ததாகவும் அறியமுடிகிறது. ஆனால் இப்பந்தியின் கவலை "இதற்கு ஏதாவது ஊறு நிகழ்ந்து விடுமோ" என்பதுதான். சமகால யாழ்ப்பாணம் அவ்வாறுதான் பழைய பெருமை மிகுந்தவற்றை அழித்துவிட்டுப் புதியதை அது பெருமளவிற்கு எமது பழையவற்றை விடப் பல சமயங்களில் வலிமையற்றதாயினும் அதனைச் செய்ய முற்பட்டுக் கொண்டிருக்கிறது. சட்டநாதர் கோயில் தனது பழைய ஓவியங்களை- எமது வரலாற்றின் தடயங்களை இழந்தது போல இவற்றையும் அழித்துவிட்டுப் "புதியதை வரைவதே சிறந்தது" என முடிவுக்கு வந்துவிடுவார்களோ என யோசிக்கவேண்டி இருக்கிறது. புதியவற்றை வரையக்கூடாது என்பது அல்ல. பழையவற்றோடு புதியதையும் வரையலாம். அவ்வாறுதான் உலகின் பல்வேறு இடங்களிலும் நிகழ்ந்துள்ளன. பழையவை கால ஓட்டத்தால் பழுதாகி வரும்போது "அழித்துவிடுவோம்" என அவர்கள் முடிவெடுக்கவில்லை. பதிலாக, அதற்கான சரியான- பயிற்சி பெற்றவர்களைப் பயன்படுத்தி முறைப்படி காப்புவேலைகளைச் செய்துள்ளனர்- செய்தும் வருகின்றனர்.

இந்தப் பின்னணியில் இப்பந்தி

வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலிடமும் சிவன் தேவஸ்தானமிடமும் ஒரு பகிரங்க விண்ணப்பத்தைச் செய்ய விரும்புகிறது. உங்களிடமுள்ள மேற்படி சுவரோவியங்களே இதுவரை எமக்குக் கிட்டியுள்ள பழமையான இன்னும் வாழும் சான்றுகள்- இவற்றைப் பேணிப் பாதுகாப்பதன்மூலம் தங்கள் கோயிலினதும் யாழ்ப்பாணத்தினதும் தமிழ்ச் சமூகத்தினதும் சமூக பண்பாட்டு வரலாற்றைப் பாதுகாப்பதில் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள் ஆவீர்கள். இதன் பெயராலேயே நாளை உங்கள் ஆலயத்தை நோக்கி எதிர்காலச் சமூகம் வர இருக்கிறது. கொண்டாட இருக்கிறது.

எனவே அவற்றைக் காத்து, காலங்காலமாக நிலைத்திருக்க வழி செய்யுமாறு அன்புடன் இப்பந்தி கேட்கிறது. காணவும் பேணவும் எம்மிடம் உள்ள சிலவற்றில் தங்கள் கோயிற் சுவரோவியங்களும் அமைந்துள்ளன. எனவே பெருமைக்குரிய இந்த அரை நூற்றாண்டிற்கு முற்பட்ட ஓவியப் பாரம்பரியத்தை எமது எதிர்காலத்திற்கும்- பண்பாட்டு வரலாற்றுக்கும் காத்துத்தரும் அரிய வேலையைத் தாங்கள் செய்வீர்கள்? என எதிர்பார்க்கிறோம்.

அதேவேளை அவற்றை- அதற்கான முறைப்படி காப்புச் செயற்பாட்டிற்கு உள்ளாக்கினால்த்தான் அவை நின்று நிலைக்கும். எனவே அவற்றைக் காப்புச்செய்ய முற்படும் போது அதற்கான பயிற்சி பெற்றவர்கள் உள்ளார்கள்- அவர்களைப் பயன்படுத்துமாறும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எமக்கும் உங்களுக்கும் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தைச் சரியான வழியில் உபயோகிக்க இன்னொரு உறுதி எடுப்போம்.

***நன்றி: உதயன், 01-01-2011***




தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.

நாவலர் பக்கம்: உ (தொடர்ச்சி...



# திருவிளையாடல்

## இசைவாது வென்ற படலம்

-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்-

படலம்: ௪௪

வரகுணபாண்டியன் இறைவனடி சேர்ந்தபின் அவன் குமாரனாகிய இராசராச பாண்டியன் அரசு செய்து வந்தான். அவனுக்கு மனைவியர் பலர். காமக்கிளத்தியர்களும் பலர். அந்தக் காமக்கிளத்தியருள் ஒருத்தி அரசனுக்கு உயிர் போன்றவள். அவள் கீதத்தில் மிகவும் வல்லவள். அவளுக்கும் பாணபத்திரன் மனைவிக்கும் கீதத்தினாலே பகை மூண்டது. காமக்கிளத்தி பொறாமை காரணமாக, பாண பத்திரன் மனைவிக்கெதிராக, "ஒரு விறலிப் பெண்ணைப் பாடவைத்து அவள் செருக்கை அடக்கவேண்டும்" என்று நினைந்து, அதனைப் பாண்டியனுக்கும் தெரிவித்தாள்.

பாண்டியன் ஈழநாட்டினின்றும் ஒரு விறலியை அழைப்பித்தான். அவ்விறலி பாண்டியன் எதிர்வந்து வணங்கி, இசை பாடினாள். இதனால் மகிழ்ந்த பாண்டியன், "நீ நாளைக்குப் பாணபத்திரன் மனைவியைப் பாட அழை. எப்படியும் போட்டிக்கு வரச் செய்துவிடு. போய்..... நாளை வா...." எனச் சொல்லியனுப்பினான். பின்பு பாணபத்திரன் மனைவியை அழைப்பித்து, "என்னோடு இசைபாட வல்லவர் உண்டோ? என ஒரு விறலி வந்திருக்கிறாள். நீ அவளோடு இசை பாடுவாயா?" என்று கேட்டான். அதற்கு அவள், "மகாராசாவே! சோமசுந்தரக் கடவுளின் கிருபையினாலே அடியேன் அவளைப் பாடி வெல்வேன். ஒருபோதும் பின்னில்லேன்" என்றாள். பாண்டியன் அவளையும் "நாளை வா" என்றனுப்பிவிட்டான்.

மறுநாள், பாண்டியன் இருவரையும் சபைக்கு அழைப்பித்து பாடும்படி பணித்தான். முதலில் ஈழநாட்டு விறலியும் பின்னர் பாண பத்திரன் மனைவியும் பாடினார்கள். சபையோர்கள் பாண்டியன் மனக்கருத்தை அறியாமல் பாணபத்திரன் மனைவியின் பாடலை வியந்தார்கள். பாண்டியனோ ஈழநாட்டு விறலியின் பாடலை வியந்து பாராட்டினான். அதைப் பார்த்த சபையோரும் பாண்டியன் உட்கிடக்கைக்கு ஏற்றபடி ஈழநாட்டு விறலியின் பாடலைப் பாராட்டினார்கள். பாண்டியன் சபையோரையும், பெண்கள் இருவரையும் பார்த்து, "இது ஒரு நாளில் தீர்மானிக்கக்கூடியதல்ல. அதனால் இருவரும் போய் நாளை வாருங்கள்" என்று கூறியனுப்பினான்.

ஈழநாட்டு விறலி இருக்கை சேர்ந்து, பாண்டியன் தன் பாடலைப் புகழ்ந்தமை பற்றி மிக்க பெருமிதங்கொண்டு களிப்புற்றிருந்தாள். பாணபத்திரன் மனைவியோ சோமசுந்தரக் கடவுள் சந்நிதியைச் சென்றடைந்து கண்ணீர் மல்க, "எம்பெருமானே! பாண்டியனே ஓர வழக்குப் பேசுகிறான். இனி, நடுவுநிலைமை தூக்கிப் பேசுவோர் யார் உளர்? நீ தமியேன் மீது திருவுளங்கொண்டு துன்பத்தைத் தீர்த்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தாள். அப்பொழுது ஆகாயத்தினின்றும், "பெண்ணே!

உழைப்பில்லா உணவு உப்பில்லா உணவு.

நாளைக்கு நீயே வெல்லும்படி அருள் செய் வோம். அஞ்சாமல் வீட்டுக்குப் போ!" என்று ஒரு வாக்குத் தோன்றிற்று. இது கேட்டு நிம்மதி யடைந்த பாணபத்திரன் மனைவி வீட்டுக்குப் போயினாள்.

பாண்டியன் மறுநாளும் இருவரையும் அழைப்பித்துப் பாடக்கேட்டு, முதல்நாட் சொல்லியது போன்று சொல்ல சபையோரும் அப்படியே சொன்னார்கள். பாணபத்திரன் மனைவி, "மகாராசாவே! நீ ஓர வழக்குச் சொல்லுதலினாலே சபையோரும் அப்படியே சொல்லத் துணிந்தார்கள். இருவரும் சோம சுந்தரக் கடவுள் சந்நிதியில் போய்ப் பாடு வோம். அங்கே இருவரதும் பாடலையும் கேட்டு "யார் வென்றார்கள்"? என்று நீ சொன்னாற் போதும்" என்றாள். பாண்டியனும், "அப்படியே செய்வோம்... செய்வோம்" என்றான்.

மறுநாள், பாண்டியன் மந்திரிமாரோ டும், வித்துவான்களோடும் சோமசுந்தரக் கட வுளின் சந்நிதியில் போய் இருந்துகொண்டு இருவரையும் அழைப்பித்தான். சோமசுந்தரக் கடவுளும் இரத்தினாபரணங்கள் தரித்து ஒரு வித்துவானாகி வித்துவான்கள் நடுவே எழுந் தருளியிருந்தார். முதலில் ஈழநாட்டு விறலி யும், பின்னர் பாணபத்திரனின் மனைவியும் பாடினார்கள். பாணபத்திரன் மனைவியின் பாடலைக்கேட்டு சபையோர் குதுகலமடைந் தனர். பாண்டியன் முன்போலவே தீர்ப்புச் சொல்ல முற்பட்டவேளை, சிவபிரானது திரு வருளினாலே ஓரவஞ்சனையும் பாரபட்சமும் நீங்கிவிட, "பாணபத்திரன் மனைவியே வென் றாள்" என்று அறிவித்தான். அப்பொழுது, வித்துவான் வடிவங்கொண்டு வந்திருந்த சிவ பெருமான், "இது அற்புதம்... அற்புதம்...." என்று சொல்லிக்கொண்டு எல்லோரும் காண மறைந்தருளினார். அது கண்ட யாவரும் வியந்து, "இது சிவபெருமானுடைய திரு விளையாடலே" எனத் தெளிந்து, சிவபெரு மானுடைய திருவருளையும் அடியவளுடைய அன்பையும் நினைந்து பேரானந்தக் கடலில் மூழ்கினர்.

பாணபத்திரன் தான் முன்பு ஓர வழக்குச் சொன்னதை நினைந்து பயந்து, பாண பத்திரன் மனைவிக்குப் பற்பல வரிசைகள் கொடுத்துச் சிறப்பித்ததுடன், அந்த ஈழநாட்டு விறலிக்கும் சில வரிசைகள் கொடுத்தான். சபைக்கு வந்திருந்து, பின்னர் திருக்கோயிலில் புகுந்து வீற்றிருந்த பெரும் புலவரான சிவபெரு மானுக்கும் இரத்தினாபரணம் முதலியன அணி வித்து வலஞ்செய்து வணங்கிக்கொண்டு தன் மாளிகையை அடைந்தான். அவன் ஒரு புத்திரனைப்பெற்று "சுகுண பாண்டியன்" எனப் பெயர்சூட்டி வாழ்ந்திருந்தான்.

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட உற்சவ தினங்கள்

**தை**

**01.01.2011 மார்கழி 17 சனி**
மங்கள புத்தாண்டு ஆரம்பம்

**15.01.2011 தை 1 சனி**
தைப்பொங்கல், கார்த்திகை விரத தினம், காலை 10மணி விசேட உற்சவம்

**20.01.2011 தை 6 வியாழன்**
தைப்பூசம், பகல் விசேட உற்சவம்

**மாசி**

**11.02.2011 தை 28 வெள்ளி**
கார்த்திகை விரத தினம்

**18.02.2011 மாசி 6 வெள்ளி**
மாசிமகம்

வித்தைக்குத் தோழர் விளையமும் விவேகமும்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்ட கடந்த ஆண்டுக்கான சேவை சமூகப்பணிகள் (19.02.2010 - 19.12.2010)

1. யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களுக்கான 500 கழுத்தப் பட்டிகள் 19.02.2010 அன்று ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டது.
2. தொண்டைமானாற்றைச் சேர்ந்த தொழிலாளியான S. சுப்பிரமணியம் என்பவருக்கு அவரது இல்லத்தின் திருத்தப்பணிக்காக 100மட்டை கிடுகு (ரூபா: 2200) 26.03.2010 அன்று வழங்கப்பட்டது.
3. பருத்தித்துறை சர்வோதயப் பாலர் பாடசாலையின் 45 மாணவர்களுக்கான பாவனைப் பொருட்களாக 45 சில்வர் கிண்ணங்களும், 45 சாப்பாட்டுத் தட்டுக்களும் 30.04.2010 வெள்ளிக்கிழமை ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டது.
4. சிவன்வீதி, ஆவரங்காலைச் சேர்ந்த மாணவி தே. துர்க்கா என்பவருக்கு பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி 21.05.2010 வெள்ளி வாராந்த நிகழ்வினில் வழங்கப்பட்டது.
5. மாற்றுவலுவுடைய பயனாளிகள் நால்வர் தெரிவு செய்யப்பட்டு, மூன்று சில்லு சைக்கிள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டதன்படி, புலோலி முறாவிலைச்சேர்ந்த கந்தையா கிருஷ்ணகோபால், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஜோசப்பு பூமலர், குடவத்தை கரவெட்டியைச் சேர்ந்த பொன்னன் சண்முகம் என்பவர்களுக்கு மாதாந்த "ஞானச்சுடர்" வெளியீட்டு நாளான 28.05.2010 வெள்ளியன்று ஆச்சிரம கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டது.
6. நான்காவது பயனாளியான யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய மாணவன் சின்னராசா ஜனகன் என்பவருக்கான முச்சக்கர சைக்கிள் வண்டி நேரடியாகக் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டது.
7. பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகனைச் சென்று பார்த்துவர விரும்பிய அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த க. பரமேஸ்வரன் என்பவருக்கு அவரது வசதியின்மை கருதி பயணச் செலவுப் பணமாக ரூபா 2500, 01.06.2010 வெள்ளியன்று வழங்கப்பட்டது.
8. தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவன் செ. யோகராஜ் என்பவருக்கு, 02.07.2010இல் ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டது.
9. தொண்டைமானாறு கலைவாணி முன்பள்ளி விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்கள் 48 பேருக்கும் புத்தகப்பையும், ஆசிரியை மூவருக்கும் சேலைகளும் 06.08.2010 வெள்ளி வாராந்த நிகழ்வின்போது வழங்கப்பட்டது.

அசட்டை மனப்பான்மை அறிவை மழுங்கச் செய்யும்.

10. தொண்டைமானாறு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது.
11. வல்வை அ.மி.த.க பாடசாலையில் நடைபெற்ற வடமராட்சி முன்பள்ளி மாணவர்களின் ஒன்றுகூடலை (கண்காட்சியும்- கலைவிழாவும்) முன்னிட்டு 150 மாணவர்களுக்கு தண்ணீர்ப் போத்தல்கள் 01.10.2010இல் வழங்கப்பட்டது.
12. முதியோர் தினத்தை முன்னிட்டு செல்வச்சந்நிதி ஆலயத்தில் தங்கியிருக்கும் முதியோர் 73பேருக்கு 01.11.2010 திங்கள் அன்று போர்வைகள் வழங்கப்பட்டன. (இது ஒரு வருடாந்த வழங்கலாகும்)
13. வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளி மாணவர்களின் கலைவிழாவினைச் சிறப்பிக்கும் முகமாக 90 புத்தகப் பைகள் 19.11.2010 வெள்ளியன்று ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது.
14. நவக்கிரி புத்தூர் மேற்கைச் சேர்ந்த திருமதி சாந்தினி யோகலிங்கம் அவர்கட்கு 03.12.2010 வெள்ளியன்று மூன்று சில்லு சைக்கிள் வழங்கப்பட்டது.
15. கரவெட்டி கிழக்கைச்சேர்ந்த மாணவியான செல்வி வீ. விஜயதர்ஷினி அவர்கட்கு 10.12.2010 வெள்ளிக்கிழமை பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.
16. பருத்தித்துறை ஆத்தியடி சைவ மன்ற முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியின் பரிசுப் பொருட்களாக 30 தண்ணீர்ப்போத்தல்கள் 10.12.2010இல் வழங்கப்பட்டன.
17. பருத்தித்துறை தம்பசிட்டி சர்வோதய பாலர் பாடசாலை மாணவர்களுக்கான தண்ணீர்ப் போத்தல்கள், புத்தகப் பைகள், ஆசிரியர்களுக்கான 3 சேலைகள் 17.12.2010 வெள்ளி வாராந்த நிகழ்வின்போது வழங்கப்பட்டது.
18. யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை ஒளி விழாவும், பரிசளிப்பு விழாவும் 20.12.2010இல் நடைபெற்றது. மேற்படி விழாவுக்கான பரிசுப்பொருட்கள் 19.12.2010 அன்று மாலையில் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.
19. பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டத்தின் அடிப்படையில், யாழ் பல்கலைக்கழகம்- கண்டி பேராதனைப் பல்கலைக்கழகம்- மட்டக்களப்பு பல்கலைக்கழகம்- வெளிவாரிப் பட்டப்படிப்புக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு அவரவர் கல்விபெறும் பல்கலைக்கழக வங்கிக் கிளைகளுக்கு பிரதி மாதமும் ஆச்சிரமத்தால் பணம் அனுப்பப்படுகிறது. மாணவர்கள் நேரடியாக அந்தந்த இடங்களிலேயே உதவியினைப் பெற்றுக்கொள்கிறார்கள். (இது ஆச்சிரமத்தின் மாதாந்த உதவித் திட்டமாகும்)
20. வறுமைக்கோட்டிற்குக் கீழ்ப்பட்டோருக்கான உதவித்திட்ட அடிப்படையில், 25க்கும் மேற்பட்டோருக்கு மாதாந்த உதவிப்பணமும், அரிசியும், பிள்ளைகளின் தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வி கற்றற் செலவுக்கான பணம், (சிலருக்கு) மாதாந்த உதவிப்பணம் ஆகியவை ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமை மாலை வேளைகளில் வழங்கப்படுகிறது.

# இலவச மருத்துவ சேவை

மந்திகை வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரைவேற்பிள்ளை அவர்களினால் 14.10.2001இல் இலவச மருத்துவசேவை சந்நிதியான் ஆச்சிரமத்து வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரதி ஞாயிறுதோறும் அவரே இச் சேவையினைத் தொடர்ந்து செய்து வந்தார். சில காலத்தில் வைத்திய அதிகாரி மா. யோகேஸ்வரதேவர் அவர்களின் பூரண ஒத்துழைப்புடன் சேவை தொடர்ந்தது.

இச்சேவை நிமித்தம் ஒரு சில காலங்களில் அச்சுவேலி வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகப் பணிபுரிந்து இளைப்பாறிய வைத்திய அதிகாரி சி. இராசலிங்கம் அவர்களும், டாக்டர் இ. ஞானதீரன் அவர்களும் பங்குபற்றி இச்சேவையினை சிறப்புடன் செய்து வந்தனர். இதனடிப்படையில் பிரபல மகப்பேற்று நிபுணர் டாக்டர் **G.** பவானி அவர்களும் இச்சேவையில் இணைந்து தனது பங்களிப்பினையும் வழங்கி வந்தார். காலக்கிரமத்தில் கண் வைத்தியர் டாக்டர் **S.** குகதாசன் ஆச்சிரமத்திற்கு வருகைபுரிந்து கண்பார்வைக் குறைபாடு உடையவர்களைப் பரிசோதித்து அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டது. பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும் ஆச்சிரமத்தினால் மூக்குக் கண்ணாடி வழங்கப்படும் செயற்பாடும் இடைக்கிடை இடம்பெற்று வந்தது.

வாராந்தம் நோயாளர்களின் கூடுதல் வரவு அவதானிக்கப்பட்டதால், வைத்திய அதிகாரி பொன் சின்னத்தம்பி அவர்களின் உதவியுடன் 11.01.2004 முதல் புதன்கிழமைகளிலும் வைத்திய சேவை விரிவுபடுத்தப்பட்டது. பின்னர் டாக்டர் சி. சிவயோககுரு அவர்களும் சேவையில் இணைந்து கொள்ளவே தற்சமயத்தில் வாரத்தில் இரு நாட்களும் (புதன்- டாக்டர் பொன். சின்னத்தம்பி, ஞாயிறு- டாக்டர் சி. சிவயோககுரு) சராசரி 120பேர் வரை பயன்பெற்று வருகின்றனர். பொது வைத்தியக் கவனிப்புடன் சலரோக நோயாளிகளுக்கான பரிசோதனை- இரத்த அழுத்த சோதனை- ஆகியவையும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், கடந்த வருட ஆரம்பத்தில் (01.01.2010. மகேஸ்வரன் ஞாபகார்த்த தினத்தன்று) சந்நிதியான் ஆச்சிரமத்தினால் புதிதாக நிர்மானிக்கப்பட்டுள்ள "மகேஸ்வரன் ஞாபகார்த்த வைத்திய சேவைக் கட்டிடத்திற்கு" ஆச்சிரமத்து வைத்திய பிரிவு முழுமையாக மாற்றப்பட்டது. கடந்த ஆண்டு (2010இல்) மொத்தம் 6120பேர் இவ் இலவச மருத்துவ சேவையினால் பயன்பெற்றுள்ளனர். எந்தச் சந்தர்ப்பத்திலும் நோயாளர்களுக்கான மருந்துகள் எதுவும் "வெளியே வாங்கும்படி"யாக சிட்டைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

மாலைவேளையினில் மருத்துவசேவைகள் முடிவடைந்த பின்னர், "குறைந்திருக்கும் மருந்துகள் பட்டியலிடப்பட்டு" அடுத்த சேவை நாளின் முன்னதாக "மருத்துவ மனையின் மருந்தறைக்கு" மருந்துகளைக் கொண்டுவந்து சேர்ப்பதில் ஆச்சிரமத்து சுவாமிகள் அதீத கவனம் செலுத்துவார்.

புதன்- ஞாயிறு இரு நாட்களும் மருத்துவசேவையாற்றி வரும் டாக்டர் திரு சின்னத்தம்பி, டாக்டர் திரு சிவயோககுரு இருவரதும் தன்னலமற்ற சேவை பாராட்டப்பட வேண்டியதே.

04.01.2011 செவ்வாய் முதல் இதே வைத்திய சேவை வளாகத்தில், "ஆயுர்வேத கிளினிக்"கும் நடைபெற்று வருகிறது. மாதமிருமுறை (ஒன்றுவிட்ட ஒரு செவ்வாய்) கைதடியில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சேவை வைத்தியர்கள், தாதியர்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனைத்தும் அவர்களது அம்புலன்ஸ் வாகனத்திலேயே கொண்டுவந்து தமது சேவையை ஆரம்பித்துள்ளனர். முதல் நாளான 04.01.2011 செவ்வாயன்றே 51 நோயாளர்கள் "ஆயுர்வேத கிளினிக்"கில் பயன்பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலே கூறப்பட்ட அனைத்துப் பணிகளும் கடந்த பல வருடங்களாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றமை அனைவரும் அறிந்ததே.

இச் சமூகப் பணிகளுக்காக ஆச்சிரமத்தினால் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது. இப்பணிகளைச் செம்மையாக நிறைவேற்றுவதற்கு சுவாமிகள் ஒருவரையும் அணுகுவதில்லை. நித்திய அன்னப்பணிக்கென அடியார்கள் அளிக்கும் நிதியினைக் கொண்டுதான் இவ்வகைப் பணிகளை ஆச்சிரமம் செயலாற்றி வருகின்றது. இதற்குக் காரணகர்த்தாவாக விளங்குவது சந்நிதிவேற் பெருமானது கருணையும் பரிசுத்தமான செயற்பாடும் என்றுதான் கூறவேண்டும். இவ்வகையில் இச்செயற்பாட்டில் இணைந்துகொண்ட அன்பர்கள் போற்றப்பட வேண்டியவர்களே.

தை மலராகிய இம் மலரில் சந்நிதியான் எனும் பகுதி இடம்பெறாவிட்டாலும் இப்பணிகள் எல்லாவற்றிற்கும் மூல காரணமாக அமைபவர் சந்நிதியானே என்பதைக் கருத்திற் கொண்டே அவரைப் போற்றி வழிபடுவோமாக.

---

## ஞால உலாவரும் சந்நிதி வேலன்

பார்போற்று மாற்றங்கரை வேலன்
பூவரசமரத்தடியில் வீற்றிருந்து
கார் நீல வண்ண மயில்மீ தேறி
ஞான உலா வரும்
தேர் ஊர்ந்து பவனிவந்து ஆவணித்
திருநாளில் வேலன்
நீர் பூத்த தொண்டைமானாற்றில்
நிறைந்தருள் புரிவான்

-இணுவை தம்பி குமார்-

---

பேராசை என்பது ஒரு பெரிய அரக்கி.

வாரியார் பக்கம்:

உ

# அருணகிரிநாதர் அருளிய

# கந்தரநுபூதி

-வாரியார் சுவாமிகள் உரையுடன்-



**முன்னுரை:**

ஆன்மாக்கள் ஆணவ இருளில் கட்டுண்டு முழுத் துன்பத்துடன் அறிவு சிறிதும் இன்றிக் கண்ணில்லாக் குழவிகளைப்போல் கிடந்தன. இறைவன் தனது அளப்பற்ற கருணையினால் அவ்வுயிர்கட்கு இந்த உடம்பையும் உடம்பில் உள்ள கரணங்களையும், உலகத்தையும், உலகநுகர் பொருள்களையும் பிரகிருதி மாயையிலிருந்து உண்டாக்கி வழங்கியருளினான். அது குளிரால் நடுங்கும் ஒருவனுக்குச் சட்டை தருவது போலவும், கண்ணில்லாதவனுக்குக் கோல் தருவது போலவும் எனவுணர்க.

எந்நாட்டவர்க்கும் இறையென்று விளங்குகின்ற பரம்பொருளைச் "சிவம்" என்று வேதாகமங்களும் திருமுறைகளும் கூறுகின்றன. "செம்பொருள்" என்று பொதுமறை கூறுகின்றது.

"முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்"

-திருவாசகம்-

பிறப்பெனும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு

-திருக்குறள்-

இத்தகைய சிவத்துடன் தொடர்புகொண்டது "சைவம்". சைவம் எல்லாச் சமயங்கட்கும் தாயாகவும் நாயகமாகவும் விளங்கும் ஒப்பில்லாத உண்மைச் சமயமாகும்.

செல்வம் மிகுந்த வாழ்வும் மையல் செய்யும். வறுமையும் மையல் செய்யும். ஆகவே, வாழ்வு- வறுமை என்ற இரு சிறுமைகளுமின்றி, "அடக்கம்" என்ற பெருமையுடன் சிவசமயம் சார்ந்து சரியை கிரியை யோகங்களைச் செய்து சிவஞானம் பெற்றவர் சிவனருள் பெற்றுச் சிவமாம் பேற்றினைப் பெறுவர்.

பூக்களில் சிறந்தது தாமரை; தண்ணீரில் சிறந்தது கங்கைநீர்; மணிகளில் சிறந்தது உருத்திராட்சம்; பெண்களிற் சிறந்தவர் உமாதேவியார்; மலைகளிற் சிறந்தது இமயமலை; இதுபோல் சமயங்களிற் சிறந்தது சைவசமயம்.

வலிமை மன உறுதியிலிருந்தே உண்டாவது.

சைவசமயமே சமயம்; சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டும் இந்தக்
-கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி புகுதவேண்டாம்;
-முத்தி தரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே.

-தாயுமானவர்-

இறைவனுடைய ஐந்து திருமுகங்கள். ஈசானம்; தற்புருடம்; அகோரம்; வாமதேவம்; சத்யோஜாதம் என்பனவாகும். இவை முறையே ஆகாயம், கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்ற ஐந்து திசைகளை நோக்கியுள்ளன. இந்த ஐந்து முகங்களுடன், கீழ் நோக்கும் "அதோ" முகமும் சேர்ந்து "ஆறுமுகம்" ஆகி சிவம் உயிர்கட்குத் தனிப்பெருங் கருணை புரிகின்றது.

"ஐந்து முகத்தோ டதோமுகந் தந்து
திருமுகங்கள் ஆறாகி"

-கந்தர் கலிவெண்பா-

இத்தகைய எங்கள் கந்தவேளின் இன்னருள் பெற்ற பலருள், "பிரணவ மந்திர" உபதேசம் பெற்றவர்கள் இருவராகும். ஒருவர் அகத்தியர். மற்றொருவர் அருணகிரிநாதர். அருணகிரிநாதர் அருளிச்செய்த நூல்கள் ஆறு. திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், வேல்மயில் விருத்தம், கந்தரநுபூதி என்பன. இந்த ஆறு நூல்களில் கந்தரநுபூதி வடிவத்தில் சிறியது; மகிமையில் பெரியது. இதன் பெருமையையுணர்ந்த தாயுமானவர் கூறுவதைக் காண்க.

"கந்தரநு பூதிபெற்றுக் கந்தர நுபூதி சொன்ன
எந்தையருள் நாடியிருக்குநாள் எந்நாளோ"

அருணகிரிநாதர் வெறும் இலக்கண அறிவால் பாடிய நூலன்று கந்தரநுபூதி. கந்தருடைய அநுபூதியைப் பெற்றுக் கந்தரநுபூதியைப் பாடியருளி, ஐம்பத்தொரு மலர்களால் தொடுத்த அச் செஞ்சொல் மலர் மாலையை வேலையேந்திய விமலனுக்குச் சாத்தினார்.

"கந்தன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள் உள:

1. கந்தன் பகைவர்களுடைய ஆற்றலை வற்றச் செய்பவன்.
2. ஆறு திருமேனிகளும் ஒன்றாகப் பொருந்தியவன்.
3. கந்து+ அன்= கந்தன். கந்து- பற்றுக்கோடு. ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாகத் திகழ்பவன்

"அநுபூதி": அநு- உடன்; பூதி- ஆதல். ஆன்மா இறைவனுடன் ஒன்றாவது அநுபூதி. ஒன்றாவதால் உண்டாவது "அநுபவ ஞானம்" ஆகும்.

ஆதலால் இந்தக் கந்தரநுபூதியைக் காதலால் தினம் ஓதுவோர் கந்தவேளுடன் கலந்து அத்துவிதம் எய்திச் சிவஞானம் பெற்றுப் பேரின்பம் எய்து

அன்பன்

(signature)

(மாசி இதழிலிருந்து கந்தரநுபூதி பாடலும்- உரையும் ஒவ்வொரு இதழிலும் தொடர்ந்து வரும்)

ஏங்கி நிற்போர் தூங்கிச் சாவார்.

உ

# இலக்கியச்சுவை சேர்ந்த தத்துவம்

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்** அவர்கள்

தத்துவம் என்பது வரட்சியானது என்பதே பொதுவானஅபிப்பிராயமாகும். சமய தத்துவங்களையும் அவ்வாறே கூறுவர். ஆனால் நம் தேவாரதிருவாசகங்களை நோக்குமிடத்து அவை இலக்கியச்சுவை நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. இதனால் நாம் இலகுவில் அவற்றை மனங்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு சுவைக்கக்கூடியதாக உள்ள சில பாடல்களைப் பார்ப்பது மனதிற்கு மகிழ்ச்சி தருவதுடன் சில நற்கருத்துக்களை அறிந்துகொள்ளவும் உதவும்.

அத்தகைய ஓரிரு பாடல்களை நாமிங்கு பார்ப்போமா?

இலங்கை யானைகளுக்குப் பெயர் பெற்ற ஓரிடமாகும். ஆனால் இன்று அவற்றினால் மக்கள் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. ஒரு யானையையே அடக்க முடியாது திண்டாடுகின்றனர்.

அப்படியிருக்கையில் ஒரு சிறிய மென்மையான மலரிலே யானையொன்றைக் கட்டி வைத்துவிடுகின்றனர். எவ்வளவு ஆச்சரியமான விடயம்! ஆனால் இது உண்மை.

கணபதி யானைமுகங்கொண்டவர். பிரணவப்பொருளான அவரை பிரணவ உருவமான யானைமுகத்துடனும் அதற்கேற்ற உடற்பருமனுடனும் உருவகித்து நாம் வழிபடுகின்றோம். அவரை நம் உள்ளங்களுள் குடிகொள்ளச் செய்துவிடுகிறோமல்லவா? உள்ளம் மலரை ஒத்ததல்லவா? ஆகவே மலரில் யானை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

யானையை எப்படி அங்கே கொண்டுவரலாம்?அதுவும் கடினமான விடயம். ஆனால் யானையைக் கட்டிக்கொண்டு வந்தால் அது சாத்தியமாகும். அப்படித்தான் இந்த யானையையும் கொண்டுவந்திருக்கிறார்கள். எதனால் கட்டியிருக்கிறார்கள் தெரியுமா? அன்பினால் கட்டியிருக்கிறார்கள். அன்புதான் இங்கு கயிறாகப் பயன்பட்டிருக்கிறது .யானையை அவ்வளவு சுலபமாகக் கட்டிவிடமுடியுமா? முடியாது. சாதாரண அன்பினால் கட்டிக்கொண்டுவருவது கடினம். யானையைக்கட்டும் கயிறு எவ்வளவு பலம் பொருந்தியதாக இருக்கவேண்டும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். அது போன்று இந்த அன்பும் வலிமை கொண்டதாக இருக்க வேண்டும்.

யானையைப்பார்க்கும் போது பயமாகத்தான் இருக்கும். தன்னைக் கட்டும் கயிற்றை அறுத்துவிடும். கடலைக் கூடக்கலக்கி அட்டகாசம் புரியும். ஆனால் அந்த யானையே கட்டுண்டு நின்றால் எப்படியிருக்கும்? யானை முகனும் இப்படித்தான் நிற்கிறார்.அவர்

அறுக்கும் தளையும் கலக்கும் கடலுந்தான் வேறுபட்டவை. நம்மைக்கட்டி வைத்திருக்கும் பாசத்தளையையே அதாவது எம்மைப் பிணித்துள்ள மலங்களாகிய பாசத்தளையையே அவர் அறுக்கின்றார். பாவமாகிய கடலைக் கலக்குகின்றார்.அன்புக் கயிற்றினால் கட்டுண்டு தானே வந்து எம் உள்ளங்களுள் நிற்கின்றார்.அப்படி வந்து நிற்கும் யானை சாதாரணமானதல்ல. அது ஒப்பற்ற யானை. ஒரு அல்லது ஓர் எனக் கூறும்போது ஒப்பற்ற என்ற கருத்துப்படும். ஓரானை என்னும் போதும் அவ்வாறே கருத்துக் கொள்ள வேண்டும். குமரகுருபரர் அருளிய பின்வரும் பாடலைப் பாருங்கள்.

பாசத் தளையறுத்துப் பாவக் கடல் கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்குமே - உருவாக்கும்
காரார் வரைசுன்ற கன்னிப் பிடி அளித்த
ஓரானை வந்தென் உளத்து.

இவன் ஏன் இத்தகைய தோற்றத்துடன் இருக்கிறான்? எல்லாம் வம்சாவளியால் வந்ததுதான்.என்ன சொல்கிறேன் என்று சிந்திக்கிறீர்களா? இமவான் அதாவது இமயமலை பெற்றெடுத்த பெண் உமையவளின் மைந்தனல்லவா இந்தக் கணபதி? அவனுக்கும் மலை போன்ற தோற்றந்தானே இருக்கும். குமரகுருபரரின் சுவையான பாடலிது.

இவர் இப்படிப் பாடினால் பரஞ்சோதிமுனிவரோ மற்றொரு கற்பனையைக் கொண்டுவருகிறார். ஆனால் இங்கும் யானைமுகனும் யானையுந்தான் வருகிறார்கள். யானை கட்டுமிடம் ஒன்றென்றாலும் கற்பனைதான் வித்தியாசப்படுகிறது. உள்ளம் கூடமாகக் கற்பனை செய்யப்படுகிறது. அங்கே யானையைக் கட்டுவதற்கு ஒரு தறியும் இருக்கிறது. ஊக்கம் என்கின்ற தறியில் அந்த யானையைக் கட்டுகிறார். .கட்ட உபயோகிப்பது அதே அன்புத்தளைதான். கருணை என்கின்ற மதத்தைப் பொழிந்துகொண்டிருக்கிறான் கஜமுகன்.

அங்கே பாசத்தளையறுத்து பாவக்கடல் கலக்கியவன் இங்கே கொடூரமான பாசமாகிய கள்ளவினையையுடைய சீவபோதமாகிய கவளத்தையிட மகிழ்வுடன் உண்டுவிட்டுக் கருணையை வெள்ளமாகப் பொழிகின்றான். உள்ளக்கூடத்திலிருக்கும் யானையை நினைந்தால் வரும் வினைகள் தீர்ந்துவிடும். இனிப் பாடலைப் பார்ப்போமா?

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனும்
தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசு போதக்கவளமிடக்

களித்துண்டு கருணை யென்னும்

வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை

நினைந்து வரு வினைகள் தீரப்பாம்.

என்பது பரஞ்சோதி முனிவர் அருளிய பாடல். இரண்டு பாடல்களுமே பிரணவப் பொருளான யானைமுகனை மனத்திலிருத்தி வினையறுத்து ஈடேற்றம் பெறுவது பற்றியே கூறுகின்றன. அதை அப்படியே கூறாமல் கற்பனையுடன் கலந்து தருவதனால் கூறப்படும் தத்துவக் கருத்து மனதிலே ஆழப்பதிந்துவிடுகிறதல்லவா? எமது சமயதத்துவங்கள் பெரும்பாலும் இவ்வாறே கூறப்படுவதை நீங்கள் தேவாரதிருவாசகங்கள் மற்றும் திருமுறைப்பாடல்களை ஓதும்போது உணரலாம். இதனால் தத்துவக்கருத்துக்களின்பால் நாமும் ஈர்க்கப்படுகிறோம்.

---

# உமைப்போலினி யாருளர்!

அழகு தமிழால் அறமுரைத்தருளி – துர்க்கா
ஆலயம் வடிவமைத்து அன்னையே!
மெழுகு மனதால் உலகை வென்ற
முதல்வியே! தமிழன்னையே!, வெல்க

தொழுது வரும் அடியவரை என்றும்
தோற்றிடாமல் தொண்டு செய்யவே,
பழுதிடாத பெருவாழ்வு தந்த 'அப்–
பாக்குட்டி தங்கம்மா' ஓர் அவதாரமே.

முழுவதும் உண்மையாக, முறையாக ஒன்றை
முகாமையுடன் முயன்று முடிப்பவராக
பொழுதெல்லாம் அம்பாளுக்காய் வாழ்வளித்து
பொற்கோயிலாய் பேறளித்த பெருந்தகையே!

வாய் திறந்தால் தமிழ் சொரியும், வையகம்
போய் வந்தால் அறம் பொலியும், சேயாக
தாய் என்றால் கை கொடுக்கும், துரந்தரியே!
தூய உமைப் போலினி யாருளர்! தாயே!

கே.எஸ். சிவஞானராஜா

---

கோபம் ஒரு தற்காலப் பைத்தியம்.

உ



# தென்கிழக்காசிய நாடுகளில் அகத்தியர் வழிபாடு

புவிலோகசிங்கம் அருள்நேசன் அவர்கள்

## நோக்கம்

தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் இந் நாடுகளில் அகத்தியர் வழிபாடும் செல்வாக்குப் பெற்றிருந்தது. கம்போடியா, யாவா (இந்தோநேசியா) ஆகிய நாடுகளில் அகத்தியர் வழிபாடு முதன்மை பெற்றிருந்தது. இதற்குக் காரணம், இந்நாடுகளில் இந்து சமயத்தினை பரப்பியவராக அகத்தியர் கொள்ளப்படுகின்றார். இதனால் அகத்தியர் இங்கு சிவகுரு, பாரதகுரு, பட்டாரகுரு, குடமுனிவன் என மறுபெயர் களால் அழைக்கப்படுகின்றார். இவ்வாறாக இந் நாடுகளில் முதன்மை பெற்றிருந்த அகத்தியர் வழிபாட்டினை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## அறிமுகம்

அகத்தியர் என்றதும் நமது நினைவில் வருபவர் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்தவர். முத்தமிழுக்கும் முறைமை சொன்னவர். தமிழ்முனி என்று தமிழ் இலக்கியங் களால் புகழ்ந்து உரைக்கப்படும் மாமுனிவரேயாவர். எனினும் இவரைத் தவிர புராணங் கள், இதிகாசங்கள், பண்டைய தமிழ் நூல்கள், வரலாற்று நூல்கள் என்பவற்றிலும் அகத்தியர் என்ற பெயர் காணப்படுகின்றது.[1] இதன் மூலமாக அகத்தியர் என்ற பெயர் கொண்ட பலர் காலத்திற்குக் காலம் வாழ்ந்து வந்திருப்பதாகத் தோன்றுகின்றது. இத னையே Heritage of the tamil siddha medicine என்னும் நூலின் ஆசிரியரான சுப்பிரமணியன் பின்வரு மாறு கூறுகின்றார்.[2]

"சமஸ்கிருத நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அகத்தியர்கள், வசிஷ்டர்கள், விசுவாமித்திரர்கள் ஆகியோர் ஒவ்வொரு கால கட்டத்திலும் தோன்றி மறைந்து மீண்டும் தோன்றி அந்நூற்களைப் படிப்போரைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றனர். இவர்கள் ஒரே அகத்தியர், ஒரே வசிஷ்டர், ஒரே விசுவாமித்திரர் அன்று. அவர்கள் யாவரும் இப்பெயர்களைக் குடும்பப் பெயர்களாகக் கொண்டு தொடர் வரிசையாகத் தோன்றிய பல்வேறு மனிதர்களாவர்".

மேலும் அகத்தியர் என்ற பெயரில் பல்வேறு காலங்களில் பலர் வாழ்ந்திருந்து சாதனைகள் பல புரிந்துள்ளமை தெளிவாகின்றது. குறிப்பாக அகத்தியர் என்ற பெயர் கொண்ட புலவர்களும், முனிவர்களும், சித்தர்களும், மருத்துவர்களும், சாதாரண மனிதர்களும், அரசியல் தூதுவர்களும் காலத்துக்குக் காலம் வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் காலத்துக்குக் காலம் பல துறைகளில் சாதனைகள் புரிந்துள்ளமையினைக் காணலாம். இதனையே Siddhars science longevity and kalpa medicine in india என்ற நூலின் ஆசிரியர் சண்முகவேலன் என்பவர் பின்வரும் கருத்தினைக் கூறியுள்ளார்.[3]

செல்வம் குவிக்கப்படும் இடத்தில் மனிதர்கள் அழிகிறார்கள்.

"மருத்துவம், சோதிடம், தத்துவம், இரசவாதம் முதலிய பல்வேறு துறையில் பல ஆய்வேடுகள் அகத்தியரால் எழுதப்பட்டவை எனக் கூறப்படுகின்றது. ஆனால் இவை யாவும் அகத்தியரால் எழுதப்பட்ட மூல நூற்களாகக் கருதப்பட முடியாது. அவை யாவும் பிற்றைய ஆசிரியர்களால் எழுதப்பட்டு அகத்தியர் என்ற பெயரில் உரித்தாக்கப்பட்டவையாகும்".

## தென்கிழக்காசிய நாடுகளில் அகத்தியர்

அகத்தியர்களது இப் பணிகள் தமிழகத்தில் மட்டுமன்றி இந்துப்பண்பாடு பரவியிருந்த கடல் கடந்த நாடுகளிலும் பரவியிருந்ததைக் காணலாம். அந்த வகையில் தென்கிழக்காசிய நாடுகளில் பரவியிருந்த அகத்தியர் வழிபாட்டினை வரலாறுகள், தொல்லியல் சான்றுகள் என்பவற்றின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**கம்போடியா**

கம்போடியாவில் ஒரு செவிவழிச் செய்தி உள்ளது. அகத்தியர் தமிழ்நாட்டிலிருந்து அங்கே வந்தார். அரசமரபு ஒன்றைத் தோற்றுவித்தார் என்பதே அச்செய்தி என திரு K.A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுகின்றார்.[4] இவ் அகத்தியர் பற்றி The hindu colony of cambodia என்ற நூலின் ஆசிரியர் திரு பனீந்திரநாத்போஸ் என்பவர் பின்வருமாறு கூறியுள்ளார்.[5]

"வடதேசத்தில் அகத்தியன் என்னும் பெயரையுடைய பிராமணன் ஒருவன் இருந்தான். இவன் வடமொழி தென்மொழிகளில் வல்லவன். இந்த அகத்தியன் கடல்கடந்து கம்போடியா நாட்டிற்குச் சென்று அங்கே அந்த நாட்டு அரசனாக அப்போது இருந்த யசோவர்மன் என்பவனுக்கு உற்ற நண்பன் ஆனான். இதனால் இவ் அகத்தியன் யசோமதி அகத்தியன் என்று அழைக்கப்படுகின்றார்".

இவ் அகத்தியன் கல்வியிலும், ஒழுக்கத்திலும், உருவிலும், அரசியல் அறிவிலும் சிறந்து இருப்பதை அரசன் கண்டு தன் குமாரியாகிய யசோமதியை அகத்தியனுக்கு விவாகம் செய்து கொடுத்தான். யசோமதிக்கும் அகத்தியனுக்கும் நரேந்திரவர்மன் என்ற ஆணும் நரேந்திர இலக்குமி என்ற பெண்ணும் பிறந்தார்கள். இதனையே,

> "வேதங்களில் வல்லவரும் பிராமணராகிய அகத்தியர் ஆரிய
> பூமியிலிருந்து வந்து மகிட வம்சத்திலுள்ள யசோமதியை மணந்து
> ஒரு மகனைப் பெற்றார். அவன் நரேந்திரவர்மன் எனப்படுவான்".

என கம்போடியாவில் சக ஆண்டு 811இல் வெட்டப்பட்ட கல்வெட்டுக் கூறுகின்றது. இவ் அரச பரம்பரை பற்றி ஏனைய பட்டையங்களும் கூறுகின்றன. யசோவர்மன் இறந்ததும் நரேந்திரவர்மன் "நரேந்திர ஆரியா" என்ற பட்டத்தை வகித்து முடிசூடிக்கொண்டு ஆட்சி புரிந்தான். நரேந்திரருடைய தங்கை நரேந்திரஇலக்குமி இராஜபதிவர்மன் என்ற அரசனை மணந்தாள். நரேந்திர இலக்குமிக்கு இராஜேந்திரதேவி என்ற ஒரு பெண் பிறந்தாள். இராஜேந்திரதேவியை இரண்டாம் ஜெயவர்மனுக்கு (820-850) (பரமேஸ்வரன்) கல்யாணம் செய்து கொடுத்தார்கள். இந்த இரண்டாம் ஜெயவர்மன்

காலத்தில் கம்போடியா மிகப் பிரபலமாக வளர்ச்சி அடைந்து இருந்தது. இவனே புகழ் பெற்ற அங்கோர் இராச்சியத்தை அமைத்தான்.[6]

இவனுக்குப்பின் ஆட்சிசெய்த இரண்டாம் இந்திரவர்மன் (ஈஸ்வரலோகன்- 877-889). தான் அகத்தியர் வழியில் வந்தவன் என்று தன்னைக் கூறிக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.7 இவ் அகத்தியர் கம்போடியாவிலுள்ள சிவன் கோவிலில் உள்ள பத்திலோகஸ்சுவரர் என்னும் இலிங்கத்தையும், ஜாவாவிலுள்ள சிவன் கோயிலின் பட்டரகஸ்சுவரர் என்ற சிவலிங்கத்தையும் பூசித்துப் பேறு பெற்றார் என்று அந்நாட்டுச் சரித்திரம் கூறுகின்றது.

இவர் மலாய தீபகற்பத்திலுள்ள (மலேசியா) மலய மலையில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு சில நாள் அங்கு தங்கியிருந்ததற்கு அங்கே அடையாளங்கள் காணப்படுகின்றன.

அகத்தியர் போர்னியோ, சந்தாத் தீவுகளுக்கும், மலாய தீவுகளுக்கும், சாவகம் முதலிய தீவுகளுக்கும் சென்றார் எனவும், மலாய தீவில் மலைய பர்வத்தில் இருப்பவராகவும் குறிப்பிடுகின்றது.

வாயுபுராணம் கூறுகின்றது. மலேசியாவின் பெராங்கு மாநிலத்தில் அகத்தியரின் வெண்கலச் சிலை கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தாடி, உருத்திராட்சமாலை, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்டவராக வயிறு பெருத்தவராக, தியானம் செய்யும் நிலையில் கிடைத்துள்ளது. இது அகத்தியரின் சிலையாக இருக்கலாம் என்று குவாரிட்ச் வேல்ஸ் குறிப்பிட்டுள்ளார்.[8]

(தொடரும்....

# செல்வச்சந்நிதி

## வெண்கலிப்பா

பண்ணார்ந்த இசைபரப்பிப் பரவிவரு மடியவரும்
கண்ணாரக் கண்டுமிகக் களிப்போடு துதிப்போரும்
உண்ணாடும் மனங்கசிந்து உருகியுளம் நைவோரும்
நண்ணாதா ரெவருமினர் நம்முருகன் சந்நிதியை
தனைமறந்த யோகமதோ தனிவிகரில் ஞானமதோ
நிலைபெறுநல் லில்லறமோ நினைக்க தெனாந் தரவல்லான்
அன்னதானக் கந்தன்முன் அரைநிமிடம் நின்றாலே
அன்றுறும் ஆனந்தப் பேறு

-மு. தியாகராசா-

கஷ்டங்கள் எம்மைச் சுத்திகரிக்கின்றன.

# செய்திச் சிதறல்கள்

- கலாநிதி அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்களின் 86ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா 07.01.2011 வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தலைவர் திரு ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

- அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்துஒளி"யின் ஜனவரி- மார்ச் வெளியீடு 24.01.2011 திங்கட்கிழமை துர்க்காதேவி தேவஸ்தான மகாகும்பாபிஷேகச் சிறப்பிதழை இந்துமாமன்றத் தலைவர் வி. கயிலாசபிள்ளை தம்பதியினர் வெளியிட்டு வைத்தனர்.

- பொலிகண்டி தியலம்பற்றை வீரபத்திரர் ஆலயத்தில் வீரபத்திர சுவாமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 1008 சங்காபிஷேகம் 25.01.2011 காலை 10.30 மணியளவில் நடைபெற்றதோடு தொடர்ந்து மகேஸ்வரபூசையும் இடம்பெற்றது.

- சுவாமி விவேகானந்தரின் 149ஆவது ஜெயந்திவிழா 26.01.2011 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு மானிப்பாய் வீதி தாவடியிலுள்ள ஸ்ரீ இராம கிருஸ்ண சமித்தி மண்டபத்தில் த. முருகானந்தா தலைமையில் இடம்பெற்றது.

- உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் மணவாளக்கோலவிழா 27.01.2011 வியாழக்கிழமை நடைபெற்றது. அன்றைய தினம் முற்பகல் 9மணிக்கு சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி 1008 சங்காபிஷேகம், விசேட பூசை என்பன நடைபெற்றன.

- சைவசமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ஆம் மற்றும் மார்ச் மாதம் 6ஆம் திகதிகளிலும், செயல்முறைப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி பெப்ரவரி 3ஆம் திகதியாகும். பரீட்சையிலும், போட்டியிலும் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கான பரிசில்கள் ஏப்ரல் 2ஆம் திகதியன்று வழங்கப்படும். மேற்படி பரீட்சையிலும், போட்டிகளிலும் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல. 82, நாவலர்வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கடவுள் நமக்கு மிகவும் வேண்டியவர்.**

உ

# சைவம் தமிழ் காத்த அன்னை



பு. கதிரித்தம்பி அவர்கள்

ஆதியும் அந்தமும் இல்லாத எம்பெருமானை அடியவர்கள் அன்றும், இன்றும், என்றும் உள்ள பொருளே என்று போற்றித் துதிக்கின்றனர். கலியுகத்தில் அடியார் துயர் துடைக்கும் பெருமானாக உதித்தவர் முருகன். இதனால் அடியவர்கள் கந்தனைக் கலியுகவரதன் என்று போற்றிப் புகழ்கின்றனர். அவர்தம் அருள்பெற்று "ஞானப் பழம் நீ" என உள்ளம் உருக வேண்டியவர் ஔவைப்பிராட்டியார் என்பதை அறியாதார் இவர். தனக்கென வாழாது, சைவமும் தமிழும் இரு கண்ணென உணர்ந்து அயராது உழைத்தவர் ஔவைப்பிராட்டியார் என்று கூறினால் அது மிகையாகாது.

ஔவைப்பிராட்டியாரை அறியாத தமிழர்கள் இல்லையென்றே கூறலாம். சிறு குழந்தைகளுக்கு நிலாவின் களங்கத்தை "ஔவைப்பிராட்டியின் உருவமென" கூறி வருவது தமிழர்களின் நெடுங்கால வழக்கம். ஔவையாரின் அறநூல்கள் தமிழர்களுக்கு ஒழுக்கமாகிய இரத்தத்தை உடலில் ஓடச் செய்கின்றதென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். சைவமும் தமிழும் நலிவடைந்த காலத்தில் நாயன்மார்களோ, ஔவைபோன்ற அறிஞர்களோ தோன்றியிராவிட்டால் இன்று எம்நிலை என்னவாகி இருக்கும்? ஞான சம்பந்தரும், அப்பரும் சமணருடன் வாதிட்டு சைவத்தை நிலைநிறுத்தி மன்னர்களை கோவில்கள் கட்ட வைத்தார்கள். அதுபோல் ஔவையும் அரங்கேறாது இருந்த நூல் திருக்குறளையும் சங்கப் பலகையில் வைத்து அரங்கேற வைத்த பெருமை அன்னை ஔவையாரைச் சார்ந்ததாகும்.

ஔவையார் பெண்மணியாகப் பிறந்தாலும் உலக மக்கள் அறநெறி வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்னும் நூல்களை வடித்தார். குழந்தைப் பருவம், பிள்ளைப்பருவம், வாலிபப்பருவம், முதுமைப்பருவம் எனத் தனது நூல்களை ஆக்கியுள்ளார். ஆத்திசூடி குழந்தைப்பருவத்தினருக்கும், கொன்றை வேந்தன் பிள்ளைப் பருவத்தினருக்கும், மூதுரை வாலிபப் பருவத்தினருக்கும், நல்வழி முதுமைப் பருவத்தினருக்கும் பாடல்களாக அமைந்திருப்பதை அறிஞர்கள் ஏற்றுக்கொள்வார்களென நம்புகின்றேன். ஆத்திசூடி குறள்கள் பன்னிரண்டை நோக்குவோம்.

1. அறஞ்செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புர ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்

இவைகள் யாவும் "அ" தொடக்கம் "ஔ" வரையுள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் முதல் எழுத்துக்களாகக் கொண்டு அருளியது குழந்தைகளுக்கு வாய்ப்புடையதாகும். அதுமட்டுமன்றி உயிர் எழுத்துக்களையும் நன்கு கற்றுக் கொள்கின்றனர். "ஃ" என்னும் எழுத்தையும் அவர் தவறவிடவில்லை. "அஃகஞ் சுருக்கேல்" எனப் பாடியுள்ளார். இவ்வாறு நூற்றெட்டுக் குறள்களையும் பிஞ்சு உள்ளங்கள் விரும்பிப் படிக்கக்கூடிய முறையில் ஆக்கியமை அவரின் தெய்வீகப் புலமைத் தன்மையை வெளிப்படுத்தி வருகின்றது. வள்ளுவன் இரு அடிகளால் உலகை அளந்தான். அன்னை ஓரடியால் பிஞ்சு உள்ளங்களை அளந்தார். ஆத்திசூடி இரண்டு அல்லது மூன்று சொற்களால் ஆனது. ஆனால் கொன்றை வேந்தன் மூன்று அல்லது நான்கு சொற்களால் ஆனவை. குழந்தை கடந்த பிள்ளைப் பருவத்திற்கேற்ப பாடியதை உணர வைக்கின்றது.

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
3. இல்லற மல்லது நல்லறமன்று

இவைபோன்ற முப்பத்தொன்பது குறள்கள், உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் முதலாகக்கொண்டு ஆக்கியது அவர் ஞானத்தை வெளிப்படுத்துகின்றது.

வாலிபப் பருவத்திற்கென கணிக் கப்படுவது மூதுரை எனக்கொள்ளலாம். மனித வளர்ச்சிப் பருவங்களில் மிகவும் பொல்லாத பருவம் வாலிபப்பருவமாகும். இவர்கள் பெற்றோரைவிட நண்பர்களை நம்பி நடக்கும் பருவம். எதையும் தன்னால் செய்ய முடியுமென எண்ணும் பருவம். பால் உணர்ச்சியால் தூண்டப்படும் பருவம். வாலி பர்களின் மனப்பாங்கை மாற்றும் வகையில் மூதுரைப்பாடல்கள் அமைந்துள்ளன. நல்வழி முதியோரை இல்லற வாழ்க்கையின் தத்து வத்தை உணரவைத்து பிறப்பு ஒழிய செய்ய வேண்டிய கருமங்களைக் கூறுகின்றன. எனவே ஔவைப்பிராட்டியாரின் பாடல்கள் தமிழர்களைச் சிறப்பாக சைவ தமிழ் மக்களை அறநெறியில் ஒழுக வைத்தன வெனக் கூறினாலும் தவறில்லை.

ஔவையார் அனுதினம் விநாயகரை உள்ளமுருகிப் பூசிப்பவர். எக்கருமம் இருப் பினும் விநாயகரைப் பூசிப்பதை மறந்த தில்லை. ஒருகால் விநாயகரை முறையாகப் பூசைசெய்து கொண்டிருந்தார். அந்நேரம் கைலை மலையிலிருந்து வெள்ளை யானை சுந்தரரை அழைக்க வந்தது. சுந்தரர் வெள்ளை யானையில் ஏறிக் கைலைக்குப் புறப்பட்டார். இதை அறிந்த சேரமான் பெரு மாள் நாயனார் தானும் கைலைக்குப் புறப்பட விரும்பி தனது குதிரையின் செவியில் பஞ்சாட்சரத்தை ஓத, அது கடிது விரைந்தது. இவற்றைக் கேள்விப்பட்டார் ஔவையார்.

தானும் கைலை செல்ல எண்ணி, திருக் கோவிலூர் பெரியகணபதி முன்நின்று "சீதக் களபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பு பல இசைபாட... தத்துவ நிலையைத் தந்தென யாண்ட வித்தக! விநாயக! விரைகழல் சரணே" என்னும் விநாயகர் அகவல் பாடி னார். விநாயகர் அம்மையாரைத் தூக்கிச் சென்று கைலாயத்தில் சேர்த்தார் என்பதை அறிகின்றோம். இன்னும் அவர் வரலாற்றில் முருகப்பெருமான் இடையன் போலத் தோன்றி "சுட்டபழம் வேண்டுமா", சுடாதபழம் வேண்டுமா?" எனக்கேட்டு ஔவையைப் பாட வைத்தான். ஔவையும், தன்மேற்கொண்ட அன்பை உணர்ந்து பல பாடல்களைப் பாடினார். இவ்வாறாக ஔவையார் பாடிய பாடல்கள் காலம்பூராகவும் நிலைத்திருக்கும்.

# அன்பின் வலிமை

சண்டைக்கும் சச்சரவுக்கும் இரண்டுபேர் தேவைப்படுகின்றனர். அதேபோல, சமாதானம் செய்து கொண்டு ஒத்துப்போகவும் இருவர் தேவை. அன்பெனும் சுடரைத் தூண்டிவிட்டாலொழிய இது சாத்தியமில்லை. உங்கள் உள்ளம் முழுவதும் அன்பு வெள்ளம் பாய்ந்து நிறையட்டும். உங்களுடன் சண்டை போட்டவரின் கண்களை உற்றுப் பாருங்கள். அங்கே உங்களுடைய அன்பு மயமான பிம்பத்தைக் கண்டு தழுவிக்கொள்ளுங்கள்.

அந்த நேரத்தில் நீங்கள் பேசிக்கொள்ளத் தேவையில்லை. உங்கள் இருவருடைய கண்களிலும் நிறைந்து நிற்கும் ஆனந்தக் கண்ணீர் உங்களுடைய சச்சரவுக்கு ஆதாரமான வேற்றுமைகளைக் கழுவி நீக்கிவிடும். அந்த நேரத்தில் உங்கள் இருவருடைய மனமும் ஒன்றிவிடும். இப்படி ஒவ்வொரு முறையும் அன்பின் மலர்ச்சியை நீங்கள் உண்மையாகவே காண்பீர்கள். இதுதான் அன்பின் சக்தி. இதுவே அதன் முழு வலிமையும் கூட. அன்பின் இணைப்பு பலவீனமாகி மெலிந்து விட்டால் குற்றங்குறைகள் பெருகித் தோன்றுகின்றன. நம்மை அன்புவெள்ளம் சூழ்ந்துகொண்டு அலைமோதும்போது, அதன் நயத்தை நாம் மீண்டும் கண்டு உணரும் வேளையில் குற்றங்களும், குறைகளும் கரைந்து அழிந்து விடுகின்றன. அங்கே அழகின் தரிசனம் கிடைக்கிறது. இதுதான் அன்பு செய்யும் ரசவாதம். இதுவே அது செய்து காட்டும் அதிசயம்.

உள்ளம் முழுவதும் அன்பு மலர்ந்து நிறையும்போது வாழ்க்கையே ஓர் அழகும் ஆனந்தமும் படர்ந்த சமவெளியாகத் தோன்றுகிறது. அங்கே தெய்வ பக்தியும் மானுடக் காதலும் கைகோர்த்து நடனமிடுகின்றன.

உ

# சந்நிதி வேலவா தாலேலோ

தி. மயூரகிரிசர்மா அவர்கள்

வண்டமிழ் ஈழத்தின் வரமருளும் நாயகனே
திண்தோள் பன்னிரண்டுடை திவ்வியனே - என்றும்
மண்ணாளும் மன்னவரும் பணியும் மன்னவனே
என்கண்ணார்க்கருளிய ஈசனே தாலேலோ

பாரார் போற்றும் செல்வச் சந்நிதி யுறைவோனே
சீரார் ஆற்றங் கரைதனிலே உறைவோனே
வீராதி வீரன் வீரவாகு பூசை ஏற்றோனே
வீராதி வீரா வேலவா தாலேலோ

கதிர்காமர் பூசை கருத்துடனே ஏற்றோனே
விதிமாற்ற வல்லோனே வேலாயுதனே
மதிசூடும் மன்னர்க்கு உபதேசஞ் செய்தோனே
பதிக்கும் பதியாம் சந்நிதி பரமனே தாலேலோ

வீடு பேறளிக்கும் சந்நிதிப் பதியிலுனை
பாடும் அன்பர்க்கு பரமுத்தி அளிப்போனே
நாடுவிட்டு நாடு கோயில் கொண்டேனே - உனை
தேடுமன்பருள்ளத் துறைவோய் தாலேலோ

வீறுகொண்ட சூரன்தனை வேல்விடுத்து
கூறுபோட்ட சந்நிதி குமராவுனை நாம்
நறுமலர் தூவி நாளும் பணிகின்றோம்
ஆறுமுகவா! அநாதரட்சகா தாலேலோ

பயத்தை மாற்ற பச்சிலை இல்லை.

# பிறவி

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

"புல், பூடு, புழு, மரம், பல்விருகம், பறவை, கல், மனிதர், பேய், கணங்கள், வல்லசுரர், முனிவர், தேவர்" என பிறவிகளை வகுத்துக்கூறியுள்ளார் மணிவாசகர்.

இவற்றுள் மனிதப்பிறவிபற்றிப் பேசுவோம். மனிதன் பிறக்கின்றான்; இறக்கின்றான். "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்கும்" என்பது தெரியாது.

பிறப்பு ஒரு உயிர் பிறவி எடுத்தல், ஜெனனம். இறப்பு உயிர் உடலை விட்டு நீங்கல் மரணம், சாவு. பிறப்பும் இறப்பும் மாறி நிகழ்வன. பிறப்பதும் இறப்பதும் எது? நமது உடம்பு.

அப்படியாயின் நமது உடம்பு இயங்குவது எதனால்?

உடம்பினுள் குடியிருக்கும் உயிரினால். உடம்பு அழியும்- உயிர் அழிவதில்லை. அப்படியாயின் அந்த உயிர் எங்கே போகும்? இன்னோர் உடம்பினுள் புகும். இதுவே பிறப்பு, பிறவி.

இப்பொழுது நாம் மறுபிறவி பற்றிப் பேசுவோம்.

பிறப்பின் தொடர்பு இறப்பு,
இறப்பின் தொடர்பு மறுபிறவி.

உயிர் உள்ள உடம்புக்கு பெயர் மயில்வாகனம், அரசன், ஆண்டி, மகான், வள்ளல். அவர்கட்குரிய பட்டம் பதவி மகாராஜா மாண்புமிகு, மேதகு, ஜனாதிபதி, கௌரவ, மந்திரி, பேராசான், சிவசிறீ, சித்தவைத்தியர் என்று இப்படிப்பல. இவையாவும் உயிர் உடம்புள் இருக்கும்வரையே. ஆனால், உயிர் உடம்பைவிட்டு நீங்கினால் யாவரும் பிணம், பிரேதம், சவம், சடலம், என்றே உடம்பை அழைப்பர். உயிர் போனபின் உடம்பை ஏன் பிணம் என்று சொல்வர். அது உதவாது. உடனே அடக்கம் பண்ணுவர் அல்லது தகனம் (எரிப்பு) செய்வர். மனிதர் மனிதனின் பிணத்தை அழித்தாலும் அந்தப் பிணத்துக்காக நாய், நரிகள், பேய், காகம், கழுகுகள் காத்திருக்கும்.

"பருத்த தொந்தி நம்மதென்று நாமிருக்க
நாய், நரிகள்,பேய், கழுகு தம்மதென்று தானிருக்கும்"

இது பட்டினத்தடிகள் கூறியது.

இந்த மனிதன் தன் உடம்பை போஷாக்காக வைப்பதற்காக உயிர் அற்ற மீன் வகைகள், கோழி, ஆடு, மாடு, மான், மரை, பன்றி, முயல் இவற்றின் இறைச்சியை

உண்கின்றான். சுடுகாட்டில் இறந்தவர்களின் பிணத்தைப் பேய்கள் உண்பதாகவும் பேசப்படுகிறது. இந்த மீன் இறைச்சி வகைகளை மாமிசம், புலால் என்றும் சொல்வர். இறந்த மனிதனைப் "பிணம்" என்று சொல்பவர்கள் மீன் பிணம், ஆட்டுப்பிணம், மாட்டுப் பிணம் என்று சொல்வதில்லை. ஏன்? இறைச்சி எனப் பெயரிட்டுள்ளனர்.

"இன்று என்ன கறி என்று கேட்டால் மீன் கிடைக்கவில்லை. ஆடு, கோழிதான்" என்பார்கள். மனிதன் இறந்தால் அவன் உடல் மண்ணுள் மறையும்; இல்லை எரிந்து சாம்பலாகும். ஆனால் செத்துப்போன மீன் முதலிய மாமிசவகை மனிதனின் வயிற்றில் அப்பெயரோடே பிறப்பெடுத்து உழன்று இறந்து வெளியேறி மண்ணுக்கே இரையாகும்.

கடலில் ஒரு மனிதன் இறப்பானாயின் அவன் கடலில் வாழும் மீன்களுக்கே இரையாகின்றான். முன்பு மனிதனுக்கு மீன் இரையானது. இப்போ கடலில் மனிதன் மீனுக்கு இரையாகின்றான்.

"இரைபோடும் மனிதர்க்கே இரையாகும் வெள்ளாடு"

இதுவரை பிறப்புப்பற்றிப் பேசிய நாம் இறப்பைப் பற்றியும் அறிவோம். பிறப்பும் இறப்பும் மாறிமாறி வரும். "பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்." அப்படியானால் அதற்கு முடிவு இல்லையா? இருக்கிறது. அது எப்போ வரும்? பட்டினத்தடிகள் புலம்புகிறார்.

"முன்னை யெத்தனை யெத்தனை ஜென்மமோ
இன்னும் எத்தனை எத்தனை ஜென்மமோ"

யான் அறியேன்? மூவகைக் கன்மாவின் பலனாக பிறவிகள் அமையும். உயிர்கள் பல பிறவி எடுக்கும். ஒவ்வொரு முறையும்,

எத்தனை எத்தனை அன்னைக்கும் அப்பனுக்கும் பிள்ளையாக
எத்தனை எத்தனை மனைவியர்க்கு கணவனாக;

கணவர்க்கு மனைவியாக, பிள்ளையாகப் பிறந்த எனக்கு எத்தனை எத்தனை மனைவியர், புத்திரர்கள் ஜெனிப்பார்களோ எதுவும் நான் அறியேன். கன்ம வினை முடிய பிறவியும் முடியும். அப்போதுதான் பிறவாமையும் இறவாமையும் உண்டாகும்.

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"
"மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமல்"
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு வீடுபெறும் நிலைவரும்.

இதுதான் இறைவனை அடையும் நிலை. அல்லல் பிறவி அறுந்த நிலை. பிறவாமையும் இறவாமையும் உள்ள பேரின்பநிலை.

இந்நிலையை அடைய நாம் என்ன செய்யவேண்டும்.

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி
முத்தி இன்பம் பெறுவதற்கேயாம்"

என நாவலர் பெருமான் கூறுகிறார். நாமும் அவ்வழி நடக்க முயற்சிப்போம்.

**மிகுந்த ஆவலுடன் எதையும் எதிர்பார்க்காதே.**

தமிழகத் திருக்கோயில் வரிசை: உ

# விருத்தாசலம்

## (திருமுதுகுன்றம்)

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்



கோயிற் சிறப்பு:

"திருமுதுகுன்றம்" என்பது தமிழ்ப்பெயர். "விருத்தாசலம்" என்பது சமஸ்கிருதப் பெயராயினும் தற்போது "விருத்தாசலம்" என்கிற பெயரே வழங்கப்படுகிறது. இத்தலத்தின் பெயர் "குன்றம்" என்றிருப்பினும் மருந்துக்குக்கூட மலை இல்லை. குன்று பூமியடியில் அமிழ்ந்தி பூமிக்கடியில் நிறைந்திருப்பதாக தலவரலாறு கூறுகிறது. எல்லா மலைகளும் தோன்றுவதற்கு முன்னரே இம்மலை தோன்றி மறைந்தமையால் இதற்குப் "பழமலை - முதுகுன்றம்" என்று பெயர் வந்தது. இதற்குப் பொருத்தமான தகவலுமொன்றுண்டு. விருத்தாசலத்துக்கு அருகில்- சற்று மேற்கே- ஆதிமலை என்று வர்ணிக்கப்படும் திருவண்ணாமலையும் (ஞானச்சுடர்- கார்த்திகை 2009), மிக அருகில் நெய்வேலியில் (ஞானச்சுடர்- மார்கழி 2008) நிலக்கரிப் படிவமும், சற்று வடக்காக திருவக்கரையில் (ஞானச்சுடர்- ஆனி 2010) புதை படிவங்களுமாக மலையும் மரங்களும் பூமியில் புதைவதால் ஏற்படும் கால மாற்றங்கள் "குன்றம்" என்ற சொல்லுக்குப் பொருத்தமாகவே படுகிறது.

விருத்தாசலம் அருள்மிகு விருத்திகிரீஸ்வரர் கோயில் பெரிய சுற்று மதில்களுடன் கூடிய மிகப்பெரிய கோயில். நாற்புறமும் வானளாவ உயர்ந்து நிற்கும் நான்கு கோபுரங்களும் ஒரே அளவினதாகவும், ஐந்தாவதான "கண்டராதித்தன் கோபுரம்" அளவில் சற்று சிறியதாகவும் காணப்படுகின்றன. மணிமுத்தாறு நதிக்கு மேலாகக் கட்டப்பட்டுள்ள பாலத்திலிருந்து பார்த்தால் கோயிற் கோபுரங்களையும், நாலு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள கோயில் வளாகத்தினையும் ஒன்றுசேரக் காணலாம்.

பலவீனர்கள் மற்றவர்களைத் தூற்றுவார்கள்.

கந்தபுராணக் கூற்று:

இத்தலத்தில் இறப்பவரின் உயிரை இறைவன் தன் தொடைமீது கிடத்தி மந்திர உபதேசம் செய்ய, இறைவி முந்தானையால் விசிறி இளைப்பாற்றுகிறாள் என்பது "கந்தபுராணம்- வழிநடைப்படலம்" தரும் அரிய தகவல்.

"தூசினால் அம்மைவீசத் தொடையின்மேற் கிடத்தித் துஞ்சும்
மாசிலா உயிர்கட் கெல்லாம் அஞ்செழுத்தியல்பு கூறி
ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல்பால் அந்த
காசியின் விழுமிதான முதுகுன்ற வரையும் கண்டான்"

விருத்தாசலத்தில் வசிப்பவர்களும் விருத்தாசலத்துக்குச் சென்று வந்தவர்களும் காசிக்குச் செல்லவேண்டியதில்லை என்பது ஐதீகம். இறைவனும் இறைவியும் நிகழ்த்துகின்ற திருவிளையாடல்கள் ஏராளம். மாதொரு பாகனாக - அர்த்தநாரீஸ்வரராக- அம்மையப்பனாக- தாயும் தந்தையுமாக அந்தப் பரம்பொருள் வழங்கும் அருளுக்கு எல்லையே கிடையாது.

அமைவிடம்:

திருச்சியிலிருந்து (தனி வாகனத்தில்) சென்னை நோக்கிய பாதையில், "பெரம்பலூர்" தாண்டிய பின்னர் வருகின்ற (மொத்தம் 85 கி.மீ) "வேப்பூர்" சந்தியில் வலதுபக்கம் திரும்பி "கடலூர்" பாதையில் பயணித்தால் விருத்தாசலத்தை அடையலாம். சென்னையிலிருந்தோ, திருச்சியிலிருந்தோ பேருந்தில் பயணிப்பவர்கள் விழுப்புரம் நகரத்திலோ, அல்லது உளுந்தூர்ப்பேட்டை சந்திப்பிலோ இறங்கினால் இலகுவாக விருத்தாசலம் பேருந்தினைப் பிடிக்கலாம்.

"சோறு கொண்டு வா":

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் "குரு நமச்சிவாயர்". திருவண்ணாமலையிலிருந்து தில்லை செல்வதற்காகப் புறப்பட்ட குரு நமச்சிவாயர் வழியில் திருமுதுகுன்றத்தில் இரவு தங்கினார். பழமலை நாதரையும் பெரிய நாயகியையும் தரிசித்துவிட்டு கோயிலின் ஒரு பக்கத்தில் படுத்திருந்தார். பசி மிகுந்தது. பசி உண்டானபோதெல்லாம் அம்பிகையைப் பாடி உணவைப்பெற்று உண்ணும் வழக்கமுடையவர். இவர் பெரிய நாயகியைத் துதித்துப் பாடுகிறார்.

"நன்றி புனையும் பெரிய நாயகி எனுங்கிழத்தி
என்றும் சிவனாரிடக் கிழத்தி - நின்ற
நிலைக் கிழத்தி மேனி முழுநிலக் கிழத்தி
மலைக் கிழத்தி சோறு கோண்டு வா"

பாட்டும் முடிந்தது. வழமையாகப் பாடி முடிக்கு முன்னரே அம்பிகை ஓடிவந்து உணவளிப்பாள். ஆனால்.... இன்று பாடி முடிந்துங்கூட அம்பிகையையும் காணோம்.... உணவையும் காணோம். என்ன நடந்தது? ஏன் அம்பிகை ஓடி வரவில்லை? கூர்மையாகப் பார்த்தார் குரு நமச்சிவாயர். தூரத்தே ஒரு வயோதிப மாது..... மெதுவாக மிக மெதுவாக..... வந்து கொண்டிருந்தாள். சாப்பாடு எங்கே?

**மன்னித்துவிடுதல் மிகப்பெரிய தண்டனை ஆகும்.**

கிழப் பெண்ணாகி வந்த அம்பிகை, "ஏனப்பா... கிழத்தி.... கிழத்தி... என்று வாய் ஓயாமல் பாடினாயே... கிழவியால் சாப்பாட்டையும் தூக்கிக்கொண்டு ஓடிவந்து எப்படிக் குனிந்து பரிமாற முடியும்"? என்றாள். "கிழத்தி" என்ற சொல்லுக்கு "உரிமையுடையவள்" என்ற பொருள்பட குரு நமச்சிவாயர் பாட, "கிழ" என்பது "முதிய" என்று பொருள்பட அம்பிகை ஆடிய நாடகம் இது. பாட்டி வேடத்தில் வந்து பக்குவமாகக் கேள்விகேட்ட அம்பிகையின் அங்கலாய்ப்பைப் புரிந்துகொண்டு மீண்டும் பாடுகிறார் "குரு நமச்சிவாயர்".

"முத்தி நதி சூழும் முதுகுன் றுறைவாளே
பக்தர் பணியும் பதத்தாளே - அத்தன்
இடத்தாளே முற்றா இளமுலை மேலார
வடத்தாளே சோறு கொண்டு வா"

அம்பிகையும் மகிழ்ந்து அறுசுவை உணவு பரிமாறினாள். பரிமாறிய இடம் விருத்தாசலம் கோயிலின் உள்ளே உள்ள "பாலாம்பிகை திருக்கோயில்". இளநங்கையாம் பாலம்பிகை அம்பாள் பசிப்பிணியை மட்டுமல்ல பாவப் பிணியையும் நீக்கவல்லவள்.

**இறைவனும் இறைவியும்:**

இறைவன்: விருத்திகிரீஸ்வரர், பழமலைநாதர், பெரிய நாயகர்
இறைவி: விருத்தாம்பிகை, பாலாம்பிகை, பெரிய நாயகி
தீர்த்தம்: மணிமுத்தாறு, அக்கினி தீர்த்தம், குபேர தீர்த்தம்

**வெளிச்சுற்று- "கைலாசப் பிரகாரம்":**

கிழக்குக் கோபுர வாசலின் முன்னால் வெளியேயுள்ள பதினாறுகால் மண்டபத்தின் விதானத்திலும், வடக்குத் தெற்குச் சுவர்களிலும் 72 வகையான பரதநாட்டிய பாவனை உருவங்கள் புடைச் சிற்பங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. கிழக்கு வாசலின் உட்புறம் இருப்பது "கைலாசப்பிரகாரம்". கைலாசப் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் 28 ஆகமக் கோயில் உள்ளது. முருகக் கடவுள் 28 ஆகமங்களையும் சிவலிங்கங்களாகப் பூசித்தார் என்பது வரலாற்றுச் செய்தி. அருகே, முன்னால் உயர்ந்து நிற்கும் கருங்கல் மண்டபம் "தீபாராதனை மண்டபம்" எனப்படும். அடுத்து மேற்குப் புறமுள்ள பெரிய மண்டபம் "நந்தி மண்டபம்" ஆகும். ஆடிப்பூரத்தன்று நடைபெறுகின்ற "கல்யாணப் பெருவிழா" இங்குதான் நடைபெறுகிறது. இதன் தென்புறமாக உள்ளது "விபச்சித்து முனிவர்" மண்டபம்.



அரைகுறை படிப்புக்கு அகந்தை அதிகம்.

மாசிமகத்து 6ம் திருவிழாவில் வருடத்தில் ஒரே ஒரு நாளில் உலா வருகின்ற - உற்சவ மூர்த்தியான "பெரிய நாயகர்", விபச்சித்து முனிவருக்குக் காட்சி கொடுத்த விழா இங்குதான் நடைபெறுகிறது. இம் மண்டபத்தின் நேர் கிழக்காக "அக்கினி தீர்த்தம்" உண்டு. கோயில் வளாகம் பெரியதாகையால்- இந்த மண்டபங்கள் மட்டுமல்லாமல்- பல இடங்களிலும் அங்கு முத்தியடைந்த முனிவர்கள்- ரிஷிகள் பெயரால் மண்டபங்கள் அங்கங்கே காணப்படுகின்றன.

**"ஆற்றில் போட்டுகுளத்தில் எடுத்த கதை"**

பிரகார வலத்தின் தென் பகுதியில், சுற்றுமதிலும்- சிறிய கோபுரமும்- இறங்குவதற்குப் பல படிகளும் கொண்ட தனிக்கோயில் யாருடையது? இந்தத் தலத்து நாயகரும், தல விநாயகருமான **"ஆழத்துப் பிள்ளையார்"** இங்கு கொலுவீற்றிருக்கிறார். இவரைப் பற்றி நாம் ஏற்கனவே "பார்த்த" அல்லது "கேட்ட" ஞாபகம் வருகிறதா? இவரை நமக்கு அறிமுகப்படுத்தியவர் திருவாரூர் கமலாலயக் குளக்கரை "மாற்று உரைத்த விநாயகர்". இருவருமே கணக்கில் வல்லவர்கள்.

பழமலைநாதரிடம் சுந்தரர் வாங்கிய பன்னிரண்டாயிரம் பொற்காசுகளையும், ஒருவருமறியாமல் ஆழத்துக்குக் கொண்டுபோய் எண்ணிப் பார்த்து, (ஆழத்தில் வைத்து எண்ணியமையாலேயே இவர் "ஆழத்துப் பிள்ளையார்" ஆனார்.) "சுந்தரா! கணக்கு சரியாகவே இருக்கிறது" என்றுரைத்ததும், அவரையே சாட்சியாக வைத்து பொற்காசுகளை மணிமுத்தா நதியில் இட்டார் சுந்தரர். திருவாரூர் கமலாலயக் குளத்தில் எடுத்த பொற்காசுகள் (இந்தக் காலத்துக் குதிரைப் பவுண்போல) உண்மையானதுதானா? எனக் குளக்கரையிலிருந்து உரைத்துப் பார்த்து, "சுந்தரா! மாற்றுக் குறையாத தங்கமிது" எனச் சுந்தரருக்குச் சான்றிதழ் வழங்கியவர் அங்குள்ள "மாற்றுரைத்த விநாயகர்". மாற்றுரைத்த விநாயகருக்கும் இங்கே சந்நிதி உண்டு. இந்த வரலாற்றில் வரும் "மணிமுத்தாறு"தான் விருத்தாசலத்தின் ஸ்தலத் தீர்த்தமாகும்.

அருளுமிக் கனக மெல்லாம் அடியனேற் காரூர் உள்ளோர்
மருளுற வியப்ப அங்கே வரப்பெற வேண்டும் என்னத்
தெருளுற எழுந்த வாக்கால் செழுமணி முத்தாற் றிட்டிப்
பொருளினை முழுதும் ஆரூர்க் குளத்திற்போய்க் கொள்க என்றார்.

பெரியபுராணம் - பாடல் இல: 3262.

**"பெரியநாயகி" சந்நிதி:**

"பெரியநாயகி அம்பாள்" திருக்கோயில் கிழக்குப் பார்த்தபடியான தனிக்கோபுரம் கொண்ட திருக்கோயிலாகும். பெரிய நாயகியான **"விருத்தாம்பிகை சந்நிதி"**யின் முன்னால் உள்ள அலங்கார மண்டபத்தில் கொடிமரமும். கொடிமரமருகே நந்தியும், பலிபீடமும் உள்ளன. பொதுவாக அம்பாள் சந்நிதிகளில் "சிம்மம்" காணப்படுவதே வழமை. ஆனால், இங்கு "நந்தி" காணப்படுவது ஒரு மாறுபட்ட அம்சமாகத் தெரிந்தது. நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் - அழகிய தோற்றப்பொலிவுடன்- அருள்பாலிக்கிறார் அம்பிகை. சந்நிதியின் முன் மண்டபம், நிறைந்த சிற்பங்களுடனான விசாலமான மண்டபமாகக் காணப்படுகிறது. அம்பாள் கருவறையின் கோஷ்ட மூர்த்தங்கள் (கருவறைச் சுவர் மாடங்களில்)

வரிசையில் வைரவர் காணப்படுவதும் ஒரு வித்தியாசமான அம்சம். சண்டிகேஸ்வரிக்கு தனிச் சந்நிதி உண்டு. சுற்றுச் சுவர் முழுவதும் அம்பாள் திருவுருவங்களை வண்ணக் கலவைகளில் வரைந்துள்ளார்கள். அடுத்திருப்பது இளமை நாயகியான பாலாம்பிகை கோயிலாகும். பெரிய நாயகியே இளமை நாயகியாகி குரு நமச்சிவாயருக்கு உணவளித்தாள் என்பதுபற்றி நாம் ஏற்கனவே பார்த்தோம்.

**இடைச்சுற்று- "வன்னிமரப் பிரகாரம்":**

இரண்டாம் பிரகாரத்திற்கு "வன்னியடிப் பிரகாரம்" என்று பெயர். மடப்பள்ளிக்குப் பக்கத்தே தலமரமான "வன்னிமரம்" உள்ளது. வன்னிமரத்துக்கு முன்பாக உள்ள மேடையில் கணபதியும், பல்வேறு முனிவர்களின் உருவங்களும் உள்ளன. இப் பிரகாரத்தில் வல்லப கணபதி, மீனாட்சி சொக்கநாதர், விசுவநாதலிங்கம், ஆறுமுகர், சகஷ்ரலிங்கம், ஏகாம்பரலிங்கம், ஜம்புலிங்கம். அண்ணாமலையார் சந்நிதிகள் உள்ளன. இப்பிரகாரத்திலிருந்து பெரிய நாயகி கோயிலுக்குச் செல்வதற்காக அமைந்துள்ள வழியில் நவக்கிரகங்களும் தண்டாயுதபாணி சந்நிதியும் உள்ளன. இசை மண்டபம் எனப்படுகின்ற அலங்கார மண்டபத்தில் உற்சவரான "பெரியநாயகர்" உடன் பெரியநாயகியும் அமர்ந்துள்ளார். எல்லாச் சிறப்புக்களும் இங்கு இவருக்குத்தான். இருந்தும், மாசி மக விழா- 6ஆம் திருவிழாவன்று மட்டுமே பெரியநாயகர் வெளி உலாக் கொள்வார். மற்றைய விழாக் காலங்களில் **"சிறிய பழமலை நாயகர்"** வீதி உலா வருவதே வழமை. பௌர்ணமி, பிரதோஷ காலங்களில் "பெரியநாயகரை" வழிபடவரும் பக்தர்கள் கூட்டம் எண்ணிலடங்காது. இசை மண்டபத்தின் வடபுறம் உள்ள "நடராஜர் சபை"யுடன் "வன்னிமரப்பிரகாரம்" நிறைவடைகிறது.

**உட்சுற்று: "அறுபத்துமூவர் பிரகாரம்"**

பேரெழிலுடன் காட்சிதரும் பெரியநாயகரை வணங்கி, மூலவர் சந்நிதிக்குள் நுழைகிறோம். இதுவே மூன்றாம் பிரகாரமான **"அறுபத்துமூவர் பிரகாரம்"**. தெற்குச் சுற்றில் அறுபத்துமூவரும், தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கிய தனிச் சந்நிதியில் "சின்ன பழமலைநாதர்" கொலுவீற்றிருக்கிறார். இவருக்கு வலப்பக்கத்தில் மாற்றுரைத்த விநாயகர், சுப்பிரமணியர், வல்லபகணபதி சந்நிதிகளைத் தரிசிக்கிறோம்.

மகாமண்டபத்தைக் கடந்து, ஸ்நபன மண்டபம் தாண்டி, துவார பாலகர்களை வணங்கி அர்த்த மண்டபத்தில் நின்றபடி மூலவரைத் தரிசிக்கிறோம். அருள்மிகு பழமலைநாதர்-விருத்திகிரீஸ்வரர், முதுகுன்றீசர் எல்லாம் இவரே. வட்ட வடிவமான ஆவுடையாருடன் கூடிய அழகே உருவான சிவலிங்கத் திருமேனியைக் கைகூப்பித் தொழுகிறோம். கருவறையின் கோஷ்ட மூர்த்தங்களான முப்பிள்ளையாரை (உண்மையில் மூன்று பிள்ளையார்கள்) அருகருகே- ஒன்றாக தரிசிக்கும் வாய்ப்பு ஒரு வித்தியாசமான அனுபவமாகவே இருந்தது. அடுத்து தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, கங்காதரேஸ்வரர், சண்டிகேஸ்வரர் உள்ளனர். மனநிறைவான தரிசனத்துடன் கருவறையை விட்டு வெளியே வருகிறோம்.

விருத்தாசலம் கோயிலின் பற்பல சிறப்புக்கள் போலவே, சுவாமி- அம்பாள் எழுந்தருளுவதிலும் ஒரு சிறப்பு உண்டு. பெரியநாயகர்- பெரியநாயகி இருவருமே உற்சவ மூர்த்தங்கள். அத்துடன் பாலாம்பிகைக்கும், விருத்தாம்பிகைக்கும் உற்சவத் திருமேனிகள் உண்டு. உற்சவகாலத்தில் பெரியநாயகி அருகிருக்க, விருத்தாம்பிகையும் பாலாம்பிகையும்

எழுந்தருளிவிட்டால்..... ஆஹா... அக் காட்சியினைக் காணக் கண்கோடி வேண்டும். மூன்று சக்திகளுடனும் சுவாமி எழுந்தருளுவது, "இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி எல்லாமும் அந்த அம்மையப்பனே" என்பதை விளக்குவதாகவே அமைகிறது.

*திருப்பணிகள்:*

திருமுதுகுன்றமாகிய விருத்தாசலம் கோயிலுக்குக் காலத்துக்குக் காலம் திருப்பணி செய்துவந்த மன்னர்கள் அநேகர். நூற்றுக்கால் மண்டபம், அர்த்த மண்டபம் எனவும் இன்னும் பல திருப்பணிகளும் நன்கொடைகளும் அளித்ததாகக் கல்வெட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும்பாலான கல் கட்டுமாணப் பணிகள் (கருவறை உட்பட) கண்டராதித்த சோழரின் பட்டத்து மகாராணியும், உத்தமசோழப் பேரரசரின் தாயாரும், ராஜராஜசோழனின் பெரிய தாயாருமான செம்பியன் மாதேவியார் கட்டுவித்ததாக (கல்வெட்டுத் தகவல்களை ஆதாரமாக வைத்து) ஸ்தல வரலாற்று நூல் விபரம் கூறுகிறது.

*ஆங்கிலேயரின் திருப்பணி:*

கைலாசப் பிரகாரத்துக்குத் தளம் அமைத்துக் கொடுத்தவர் ஓர் ஆங்கிலேயர் என்றால் நம்புவது கடினம்தான். தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியராக இருந்தவர் "**ஹைட்**" எனும் ஆங்கிலேயர். விருத்தாசலம் இறைவனால் ஈர்க்கப்பட்ட "ஹைட்" பிரகாரத்துக்குத் தளம் அமைத்ததுடன் இன்னும் பல திருப்பணிகளையும் செய்து கொடுத்துள்ளார். யாத்திரீகர் தங்குவதற்காக "ஹைட்" அமைத்த சத்திரம் இன்றும் "**ஹைட் சத்திரம்**" என்றே அழைக்கப்படுகிறது.

*ஸ்தலப் பாடல்கள்:*

சம்பந்தர் 7 பதிகமும், அப்பர் 1 பதிகமும், சுந்தரர் 3 பதிகமுமாக மூவர் பாடலுடன், அருணகிரிநாதரின் "திருப்புகழும்", குமாரதேவர் பாடியுள்ள "பெரியநாயகி அம்மன்" பதிகமும்", குருநமச்சிவாயர் பாடியுள்ள "சேஷத்திரக் கோவையும்", வள்ளலாரின் "குரு தரிசனப் பதிகமும்", சொக்கலிங்க அடிகளார் எழுதிய, "பெரியநாயகி பிள்ளைத் தமிழும்" இத் தலத்தினைச் சிறப்பிக்கின்றன.

*நிறைவுப்பகுதி:*

பெயரில் "பழமை" இருந்தாலும், என்றும் புதியவராகவே காட்சிதரும் **பழமலை நாதரையும், பாலாம்பிகைத் தாயாரையும்** கண்குளிரக்கண்டு வணங்கிய நிறைவுடனும்-நிம்மதியுடனும் நமது அடுத்த திருக்கோயில் பயணத்தைத் தொடருகிறோம்.

*"முதுகுன் றடைவோமே":*

மத்தா வரை நிறுவிக்கடல் கடைந்தவ் விடமுண்ட
தொத்தார் தருமணி நீண்முடிச் சுடர் வண்ணன திடமாம்
கொத்தார் மலர் குளிர் சத்தகி லொளிர் குங்குமங் கொண்டு
முத்தாறு வந்தடி வீழ்தரு முதுகுன் றடைவோமே"

-சம்பந்தர் தேவாரம்-

# மாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**04.02.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- பக்திப்பாடல்
(பக்கவாத்திய சகிதம்)

**11.02.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- இசைக்கச்சேரி
வழங்குபவர் :- நாகேந்திரன் சுபாகரன் M.A
[அண்ணாமலை பல்கலைக்கழகம்]
(பக்கவாத்திய சகிதம்)

**18.02.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)
வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

**25.02.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் 158ஆவது மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்
[இளைப்பாறிய ஆசிரியை]
மதிப்பீட்டுரை :- திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்
[முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]

மாசி
2011

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்